www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

10-16 செப். 1993

ரூபா 8/50

දිනමුරසු වාරමලර

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 20

## யாழ்தேவி இராணுவ நடவடிக்கை யார் தோல்வி? யார் வெற்றி?



நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட்

ராஜதந்திரியின் அரசியல் அலசல்

விடுகதை + சிறுகதை

பாப்பா முரசு



கண்ணே மதுமிதா

புதுமைத் தொடர்





பைத்தியத்தில் மாடியில் இருந்து குதித்த நம்மூர் பிரதிநிதி

வெளிவராத பல சங்கதிகள்

புதிய படச் செய்தியோடு

சினிவிசிட்

லேடீஸ் ஸ்பெசல்

படகோடு விளையாடும் திமிங்கிலச் சுறா

யார் அந்தப் புதிய காதலன்?



விறு விறு நடையில் வித்தியாசமான செய்திகள்-வியப்பான தகவல்கள்

சிறுகதைகள் — கவிதைகள்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
தபாலட்டைகளில் தரக்கூடிய
ஆக்கங்களையும்
கடித உறைக்குள் போட்டு
சிலர் அனுப்பிவைத்து விடுகிறீர்கள்.
அதனால் உங்களுக்கும் செலவு
எமக்கும் நேரச் செலவு.
சம்பந்தப்பட்ட அன்பானவர்கள் கவனிக்கவும்.

■

முரசு வசம் வந்து சேரும்
ஆக்கங்களில்
தரமானவை களம் கண்டு வருகின்றன.
வேறுபல படைப்புக்கள்
களம் பெறக் காத்திருக்கின்றன.
அதேசமயம்
வித்தியாசமான கரு-
சொல்லவருவதை நறுக்கென்று சொல்லும்
நீட்டி-இழுத்து அறுக்காத நடை
என்பவை கண்டு அந்த
ஆக்கங்களுக்கு முரசு முன்னுரிமை தரும்.

ஒரு சிலர்
தாம் முன்னர் அதில் எழுதினோம்
இதில் எழுதினோம்
என்று தம் மடலில் அரைப்பக்கம்
சுய விளம்பரம் சொல்கிறார்கள்.
முரசைப் பொறுத்தவரை
ஆக்கங்களின் தரம் பார்க்கும்-தவிர
ஆட்களைப் பார்க்காது.
எங்கேயெல்லாம் முன்னர் எழுதினார்கள்
என்பதைவிட- முரசுக்கு
என்ன எழுதுகிறார்கள் என்பதே
தேவையானது-முக்கியமானது.
எனவே
தரம் கண்டு-தகுதி கண்டு
புதியவர்களுக்கு
எப்போதுமே முரசு களம் தரும்.

■

நாட்டு நிலவரங்கள்
நம்பிக்கை தரும் வகையில் இல்லை.
அரசியல் சதுரங்கத்தில்
யாரை யார் வெல்வது?
போட்டியே பிரதானம்.
நாட்டின் பொதுப் பிரச்சனைகள்
அந்தப் போட்டியில் புறம் தள்ளப்படுகின்றன.

யார் யாரோ எல்லாம்
ஏதேதோ எல்லாம் பேசுகிறார்கள்
பெயர்கள் பிரபலமாவது அவர்களுக்கு இலாபம்.
மக்களுக்கும்-நாட்டுக்கும்
விசுவாசமாக இருப்பவர்களை
விரல்விட்டு எண்ணிவிடலாம்.
அதுதான் சோகம்.

துணிச்சலான-நேர்மையான
அணுகுமுறைகள்,
வெளிப்படைத்தன்மை -தூய்மை
என்பவையெல்லாம்

அரசியலுக்குச் சரிப்பட்டு வராது
என்கிற எண்ணம்
அரசியலில் இருப்பவர்களிடம்
ஏற்பட்டு வருகிறதோ என்று
சந்தேகம் வருகிறது.

மக்கள்
மேலும் மேலும் பார்வையாளர்களாகி
நடப்பது நடக்கட்டும் நமக்கென்ன
என்று ஒதுங்கிக்கொள்ளும்
மனப்போக்கு உயர்ந்திருக்கிறது.

மக்கள் ஒதுங்கிச் செல்லுகிறார்கள்.
மக்களுக்கு அறிமுகமில்லாதவர்கள்
மக்களின் சார்பில் பேசப் புறப்பட்டிருக்கிறார்கள்.
இதுதான் நல்ல வேடிக்கை.
எப்படியோ-
பிரச்சனைகள் பெரிதாகிக் கொண்டிருக்கின்றன.
தீர்வுகள் மட்டும்
தொலைதூரக் கனவுகளாகியிருக்கின்றன.

இந்திய அரசியலையும்
குறிப்பாக தமிழக அரசியலையும்
நம்மில் சிலர் சேலி செய்தது உண்டு.
இப்போது
நம்நாட்டு அரசியல்-குறிப்பாக
தமிழ்பேசும் மக்களின் அரசியல்
தடுக்க முடியாதவாறு தரம் தாழ்ந்து
தலைகீழாகப் போய்க் கொண்டிருக்கிறது.

வறட்டுக் கௌரவங்களும்
விட்டுக் கொடுக்கும் மனப்போக்கு
பதவிப்போட்டியில் அடிபட்டுப் போவதுவும்
தனிநபர்களது ஆதிக்க மனப்போக்குகளும்
கூட்டுப் போக்குகளுக்குக் குந்தகமான
குறுகிய உணர்வுகளும்
புதிய சக்திகளைக் கட்டியெழுப்பாது
மோதல் சகதிகளைத்தான் உருவாக்கும்.

"தமிழ்பேசும் மக்களை
கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"
என்று அன்று சொன்னவர்
தந்தை செல்வநாயகம்.
இன்றும் அதுதான் நிலைமையா?
இப்போதாவது
நம்மவர்கள்
நமது அமைப்புக்கள்
சிந்தித்துப் பார்க்கக்கூடாதா?
தவறுகளை
சீர்தூக்கி ஆராய்ந்து
தரம் தாழ்ந்து வரும் அரசியலை
தூக்கி நிறுத்தக் கூடாதா?
தலை குனிந்து நிற்கும்
தமிழ் பேசும் மக்களை
தலை நிமிர வைக்க
ஒரே குரலாய் பேசும் காலம்
கண் எதிரே தோன்றுமா?
விடைகள் தேடப்படுகின்றன.

■

மீண்டும் மறுமடலில் வந்து
கலக்கும் வரை

அன்புடன்
—ஆசிரியர்—

**தினமுரசு**
**போன்: 820265**

## கவிதைப்போட்டி இல-17

விதைக்கப்பட்டவற்றில் வெற்றி சூடியதும், வியக்கப்பட்டவையும்.

### வெற்றி சூடியது

"வேறுபட்டு நிற்பதென்ன?
வேறுபட்ட நாமிருவர் நிம்மதியில் ஆழ்ந்திருக்க
ஒன்றுபட்ட மனித குலம்-
இரண்டுபட்டு நிற்பதென்ன"

இராஜராஜேஸ்வரி சண்முகலிங்கம்
திருகோணமலை.

### வியக்கப்பட்டவை

**தீர்வு**
ஓ....!
இனப்பிரச்சனைக்கு
தீர்வும்
கிடைத்துவிட்டதோ?
அழகானந்தம் அரவிந்தன்
கொழும்பு-15.

**ஒற்றுமை**
மனிதனிடம்
இல்லாத
ஒன்று
உங்களிடம்
இருக்கிறதே!
ஆலங்குளத்தூர்
ரோஷான் ஏ.ஜிப்ரி.

"ஐந்தறிவில் ஆழ்ந்திடும் அன்பு நேயம்
ஆறறிவின் மனிதா- நீ
சிந்தித் திழைத்திருந்தும் இங்கே
சிறு பிராணியிடம் தோற்றாயடா!
அமிர்த-சந்திரபாலன்
திருகோணமலை.

இனவெறி
ஒழிப்பிற்கு
இப்படியொரு
விளம்பரமா?
எம்.சஞ்சீவன்
கலஹா.

**உறவு**
உயிருக்கு உலை வைக்கும்
உலகத்தில்-அன்பு
உணர்வுக்கு உரமூட்டும்
எங்கள் உறவு.
-பிறேமலதா-
நாவலப்பிட்டி.

**மயக்கம்....**
நாட்டில்
வெடி முழக்கம்
காட்டில்
இடி முழக்கம்
நடுவினில்
ஒரு மயக்கம்.
க. சறோஜினி
திருகோணமலை.

**இனங்களின் ஒற்றுமை**
இனங்களில்-நாம்
வேறென்றாலும்
மனங்களில்
ஒன்றுதான்
இனியும்-மனித
இனங்கள்
மோதலாமா?
இ.ஶ்ரீதர்
பேராதனை.

**அறிவு**
ஆறறிவுகள்
தொலைத்த
ஒற்றுமை
எனும் ஓரறிவு
ஐஅறிவுகளில்
ஒட்டிக்
கொண்டதோ?
அ.றஜீசன்
கொழும்பு-14.


**மாற்றம்**
உயர்திணை
"யுத்தம்" செய்ய
அஃறிணை
"அன்புமழை"- பொழிகிறது!
கே:சிவபாதம்
புறாக்செமிட்.

**நண்பனுக்காக**
குழி முயலே உன் தலையில்
விழி மூடிச் சயனிக்கும்,
எழிற் பூனை நண்பனுக்காய்
விழி மூடாதிருக்கிறாயோ?
திருமதி அமுதா வித்தியானந்தன்
மட்டக்களப்பு.

**ஒற்றுமை**
உங்களுக்கு இருக்கும் ஒற்றுமை
எங்களுக்குள் இருந்தால்,
பொங்கிப் பெருகும் வசந்தம்
பொறாமையும் பூசலும்
அறவே மடியும்.
க.ரெட்ணையா
மட்டக்களப்பு.

**"ஏக்கம்"**
"பகைமையை மறந்து
துயில் கொள்ளும்
ஐயறிவு ஜீவன்களே!
உம்மைப் பார்த்தாவது
பாருலகைப் பதம் பார்க்கும்
ஆறறிவு ஜீவன்கள்
கண்மலரக்கூடாதா?"
வஜீட்நௌஸாத்
தோப்பூர்.

## கவிதைப் போட்டி இல-20



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். உங்கள் உள்ளத்தில் உருவாகும் எண்ணங்களைத் தபால் அட்டையில் வடிவம் கொடுத்து அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 16.10.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:20
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5

**ஒற்றுமை கேளீர்**
ஓரினமா? நாங்கள்-எங்கள்
ஒற்றுமை கண்டீரோ!

ஓரின மானிடரே - உங்கள்
சிந்தனைதான் எங்கே?
அ. புஸ்பராஜ்
நிவிட்டிகல.

**மனிதர்**
இணையமாட்டோம்
என்று சொல்லி ஆயுதம் ஏந்த
இணைந்து விட்டோம்

என்று சொல்லி அசைத்து விட்டதோ!
ஐ. சுஜான்
புத்தளம்.

**அன்பு**
அன்பு
துணை தேடுது
ஆசை

தடுமாறுது
படத்தில்
உனைக்காணவே
கவிதை
கருவானது.
சி.வி.சச்சர்.
திருகோணமலை.

**ஒற்றுமையும் வேற்றுமையும்**
எங்களுக்குள்
ஒற்றுமையின் நெருக்கம்
ஏன்...!
இன்னும்,
உங்களுக்குள்
வேற்றுமையின் விரிசல்.
நன்முனையூர் கையூம்
கல்முனை.

மானிடனே!
போர்வெறி ஏன் உனக்கு
இவை போல்
இருந்தால்
வையகத்தில் நிலவாதா
அமைதி.
அன்பு
கொழும்பு-13.



**நம்பிக்கை**
ராபினையும் அரபாத்தையும்-நாங்களும்
பின்பற்றி விட்டோம்.
பிரபா அண்ணாவும் விஜயதுங்க ஐயாவும்-எங்கள்
பின்னால் வருவார்கள் என்ற நம்பிக்கையில்.
சாந்திகுமார் கவிப்பிரியா
மட்டக்களப்பு.

**வேறுபாடுகள்**
உங்கள் மனங்களில்
ஒற்றுமை உணர்வு!
எங்கள் இனங்களில்
வேற்றுமை உணர்வு!!
எஸ்.ரி.எம்.பஸ்வாக்-கல்முனை-05.

**இணைந்திடு**
சுமைகளை மறந்து
பேதங்களைத் துறந்து
இன்பமாய் உறங்கும்
எங்கள் முகங்களைப் பார்....
மனிதா!
புலம்பலும் அழுகையும்
பூமியில் மறைந்திட
இணைந்திடு எங்களைப் போல்.
செல்வி-ஏ.றூத் சந்திரிக்கா
கோட்டைக்கல்லாறு.

**வென்றது யார்?**
ஓட்டத்தில் வல்ல முயலார்
வாட்டத்தில் வீழ்ந்தாரென்று
நாட்டத்தில் பூனையாரும்
காட்டினார் பரிவு ஒன்று.
செல்வி. கோமதி தவராசா
திருகோணமலை.

**கங்கையாகும் வாழ்க்கை?**
அணுகும் முறையில்,
அன்பிருந்தால்;
ஆனந்த கங்கை
வாழ்க்கையன்றோ!
இப்றாஹீம் சஹிலா
கொழும்பு-10.

## வாசக(ர்)சாலை

**நந்தவன நாட்கள் தந்தவர் வருத்தம்!**



என்
"நந்தவன
நாட்களுக்கு"
26.09.93 இதழில்
களம்-கொடுத்த
நீ,
அதில்-என்னை
இனம் காட்ட
மறந்ததேன்- முரசே!
ஶ்ரீவாணி-வாழையூர்.

தவறுக்கு மிக வருந்துகிறோம். (ஆ.ர்)

**நீ....நீதான் வேண்டும்?**

அன்பின் தினமுரசே!
19.09.93 அன்று நான் உன்னை வழமையாக வாங்கும் இடத்தில் நீ விரைவில் முடிந்து விட்டாய். கடைக்காரர்கள் என்னை வேறு ஏதாவது ஒரு பத்திரிகையை வாங்க சொல்கின்றார்கள். நானோ வேண்டாம் என்று சொல்லிவிட்டு உன்னை பல இடங்கள் அலைந்து பெற்றுக் கொண்டேன்.
மணி. கலாராணி-நுவரெலியா.

**துஷ்டர்கள் தூரவிலக!**

உண்மையான செய்திகளை மறைக்காமல் அப்படியே அந்தந்த நேரம் சுடச்சுட வெளியிடும் உன் துணிச்சலை கண்டதும் என் மனம் துள்ளிக் குதிக்கிறது. துஷ்டர்கள் உன்னை கண்டு தூரவிலகி ஓடுகிறார்கள் என்றால் பாரேன்.
செல்வி.சரவணேஸ் டெயிசி-கலவானை.

**நெஞ்சோடு அணைத்து.....**

புத்தம் புதிய பொழிவோடு
புன்னகை பூக்கும் முரசே
நித்தம் நீ வந்தாலும்
நெஞ்சோடுன்னை அணைத்து
முத்தமாரி பொழிவேனே

திருமதி கே.பத்மா-இறம்பொடை, டி.ஞானேஜாதி-பதுளை, செல்வன்.எம்.அமிர்தராஜா-மஸ்கெலியா, செ.சிவபெருமான்-பலாங்கொடை, ரீ.எல்.அபுல்ஹஸன்-கல்முனை, தௌபீக், ஜாபீர், மொஹிடீன்-காத்தான்குடி-01, சி.லக்ஷ்மி-லயுக்கெலை, திருமதி மணிமேகலை வரதராஜன்-வந்தாறுமூலை, அருஸ் அஹமட்-அக்குரணை, பீ.எம். நாபிக்-தலைமன்னார் பியர், வி.மகேந்திரன்- அக்கரைப்பற்று-09, இனிகலை முஜீப்-கண்டி, எம்.சிவநாதன்- தெமோதர, ஏ.பரீனா பைதா-புத்தளம், ஆயிஷா பர்வின்-புத்தளம், நஸ்ரீன் கரீம்-புத்தளம், தா.செல்வராஜா-நாவலப்பிட்டி, எச்.சகீர்டீன்-உடத்தலவின்னை, கே.எம்.வாஹிட்-பாலமுனை-03, எஸ்.கலாதாஸன்- நானுஓயா, வேலு பத்மநாதன்- ஹட்டன், செல்வி-பி.தமிழரசி-வட்டவளை, ரிபான் பௌஸர்-ரம்புக்-எல, இரா குமுதா-நோட்டன், ரொஷான் எம்.பாருக்-பொதுஹர, ஆமினா பேகம்-கடுகஸ்தோட, எஸ்.வை.ஜெயந்திமாலா-தெபுவன, எம்.வி.எஸ். விஜேந்திரன்-பண்டாரவளை, வீ.த.செல்வசிகாமணி- தெளிவத்தை, க.சாந்தி, முரளி-திருகோணமலை, ரஞ்சன் துரைசிங்கம்-நோட்டன்பிரிட்ஜ், யூ.எல்.ஏ. றஊப்கான்-வெளிமடை, பெ.டொறின்-அக்கறப்பத்தனை, எஸ்.மணி-பூண்டுலோயா, சிபாயா சம்சுதீன்-அட்டாளைச்சேனை, ரம்ஸானியா பரீட்-அக்குறனை, எம்.வை. ஜெஸ்மின்- கல்முனை-06, சாம். ரமணன்-திருக்கோவில், செல்வி சசிகலா, எஸ் சூரிய கந்தை- சாமிமலை. ஆர்.சர்மிலா- கினிகத்தேனை, திருமதி.ச.ஜெகநாதன்- காத்தான்குடி, அ.விஸ்வநாதன்-கண்டி, எம்.எச்.எம். இர்பான்- கிண்ணியா-01, சிவா-கொழும்பு-11, என்.ஜி.பாத்திமா நிறோஸா-கொழும்பு-13, செல்வி. எம்.மதிவதனி- நுவரெலியா பம்பரக்கொல டிவிசன், ரகுமாவா-கொழும்பு-6, இர்பானா றியாஸ்-மக்கொன, செல்வன்.ஜே.பேனாட்- பூண்டுலோயா.

**முரசே நீ வாழியவே!**
செல்வி. சுல்பிகா ராசிக்-ஒபேசேகர டவுண்.

**போகும் சோகம்**

வெள்ளிதோறும் பவனி வந்து அனைத்து மக்கள் மனங்களையும் குளிரச் செய்து சோகங்களை போக்கும் என். அன்பு தினமுரசே! வாழ்க மேலும் உன் புகழ்.
ரஸ்மியா ரபீர்டீன்-மாத்தளை.

**பைந்தமிழ் நடையில்...**

செந்தமிழ் தேன் முரசே!
நிலாவென மிளிரும் தினமுரசே!
பைந்தமிழ் நடையில்
பரவசம் தருவாய்
படித்திட சுவை தருவாய்
"வாழ்க உன் சுவை
வளர்க உன் சேவை"
-யாழூர் மர்வான்-

**இந்தா முத்தம்**

முரசே முத்தமிடுகிறேன். உன்னை அல்ல, உன் இதழ்களை. உன் இதழ்களில் நீ தாங்கி வரும் தொடர்கதையை படித்த நாள் முதல் பைத்தியமானேன். மதுமிதா மீது அல்ல, உன் மீது! இன்னும் என் பைத்தியத்திற்கு வைத்தியம் கிடைக்கவில்லை. ஐயோ யார் அந்த ரசிகன். எனக்கு மட்டும் ரகசியமாக கூறிவிடு.
ஆறுமுகம் விஜயகுமார்-பம்பரகெலை எஸ்டேட்.

**கவிதை தரும் கரங்கள்!**

நாங்கள் அறிந்திராத சினிமா, அரசியல், வெளிநாட்டுச் செய்திகளை தருவது தினமுரசு என்றால் அது மிகையாகாது. கவிதைகளால் கவிதைப் பூங்காவாக மாற்றும் கரங்களை கட்டாயமாக வாழ்த்தித் தீரவேண்டும். அத்துடன் சிந்தியாவின் பதில்கள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கின்றன.
வே.சேகர்-அக்கரப்பத்தனை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# யாழ்தேவி திரும்பியது படையினரின் தோல்வியா?
# ஒரு பகுதிக்குச் சென்று திரும்பிவர இத்தனை பலிகள் தேவையா?

## இராணுவத் தீர்வென்றால் நாடு பிரியும் என்கிறார் முன்னாள் தளபதி!

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை மூலம் கிளாலியைக் கைப்பற்றிய படையினர் அங்கிருந்து மீண்டும் ஆனையிறவு முகாம் திரும்பிவிட்டனர்.

கிளாலியைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு அதிகளவான படையினர் தேவைப்படுவார்கள். பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களும் தேவைப்படும்.

கிளாலியை விட்டுப் புலிகள் பின் வாங்கிய போதும் மீண்டும் கெரில்லாத் தாக்குதல்களில் ஈடுபடவே செய்வர்.

முன்னர் பூநகரிப்பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தபோது பின்வாங்கிச் சென்ற புலிகள் பின்னர் அங்கொரு கெரில்லாத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இராணுவ பலம் அதிகமாக இருந்தமையால் புலிகளால் வெல்ல முடியவில்லை. புலிகளின் மன்னார் தளபதி சுதனும் அத்தாக்குதலில் பலியானார்.

ஆனால், கிளாலியில் புலிகளின் ஊடுவித்தாக்கும் நடவடிக்கையை எதிர்பார்த்து படையினரை குவித்து வைத்திருப்பது சாத்தியமில்லை என்றே படைத்தலைமை கருதியது.

கெரில்லாத் தாக்குதல் மூலம் புலிகள் கிளாலியில் படையினரை பேரழிவுக்கு உட்படுத்தினால் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை பற்றிய அரசாங்கப் பிரச்சாரங்கள் நகைப்புக்கிடமானதாக மாறிவிடும்.

எனவே கிளாலியைப் பிடித்தோம். புலிகளின் படகுகளை அழித்தோம் என்ற திருப்தியோடு முகாமுக்கு திரும்புவதே புத்திசாலித்தனம் என்று படைத்தலைமை நினைத்திருக்க வேண்டும்.

கிளாலியைக் கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்திருக்க முடியாமல் போனமை படையினரின் பக்கத்தில் உள்ள பலவீனத்தையே வெளிப்படுத்துகிறது என்பதுதான் பக்கச் சார்பற்ற கணிப்பாளர்களது கருத்தாகும்.

மிகப் பெரிய தயாரிப்புக்களோடு, முப்படை தளபதிகளும் நேரில்



சென்று கவனித்து நடத்திய இராணுவ நடவடிக்கை மீண்டும் முகாமுக்கு திரும்புவதில் முடிந்திருக்கிறது.

படையினர் பாரிய தாக்குதலை நடத்தினார்கள் என்ற பிரச்சாரம் தெற்கில் படையினர் பற்றிய அதிருப்திகளைத் தணிக்கப் பயன்படக்கூடும்.

ஆனால், இவ்வாறான இராணுவ நடவடிக்கைகள் நீண்டகால நோக்கில் பார்க்கும் போது புலிகளுக்கு பாரிய பலவீனத்தை ஏற்படுத்தி விடவில்லை. ஒரு பகுதிக்கு சென்று திரும்பி வர இத்தனை உயிர்ப்பலிகள் அவசியமா என்பதே ஆராயப்பட வேண்டியதாகும்.

புலிகள் கூறுவதன்படி யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் அவர்கள் தரப்பில் 84பேர் பலியாகியுள்ளனர். பொது மக்கள் நூறு பேர்வரை மாண்டுள்ளனர்.

ஆனால் பண்டயினர் அதனை மறுத்துள்ளனர். பொது மக்கள் பலியாகவில்லை என்று படையினர் ஒரேயடியாக மறுத்துக்கூறுவது பலியான பொதுமக்களை புலிகளாகவே அவர்கள் கருதுவதாக அர்த்தப்படுகிறது. இவ்வாறான மறுப்புக்கள் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் வெறுப்புக்களையே உருவாக்கும்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை பற்றி அரசாங்க வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் முக்கியத்துவமளித்து செய்திகளை வெளியிட்டு வந்தன.

அதே சமயம் முன்னாள் விமானப்படைத் தளபதி ஹறி குணதிலக இலண்டன் பி.பி.சி யின் சிங்கள சேவைக்கு ஒரு பேட்டியளித்திருந்தார்.

அரசியல் தீர்வு இல்லாமல் இராணுவ நடவடிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தால் 2000ம் ஆண்டில் நாடு பிரியும் என்று அர்த்தப்பட அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழான 'ராவய' பத்திரிகை ஆசிரியரும் யுத்தம் தொடருமானால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்ற தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

# பைத்தியத்தில் பாய்ந்த பிரதிநிதி!
# பூனையைக் கண்டு புலி என்று பதறினார்!!
## இலங்கைத் தமிழா இங்கே தலைகுனிந்து நில்லடா!

**ஸ்பொட் ரிப்போர்ட்**

அவர் ஒரு பிரதிநிதி. திடீரென்று ஒரு நாள் கொழும்பில் பிரதிநிதிகள் தங்குவிடுதியில் இருந்த தனது அறையில் இருந்து உரத்த சத்தத்தில் பாடத் தொடங்கிவிட்டார்.

பாட விருப்பம் என்றால் பாத்ரூமில் பாடலாம். அல்லது பரந்த வெளியில் போய் நின்று பாடலாம். பா-உறுப்பினர் எங்கு வேண்டுமானாலும் பாடலாம் என்று நினைத்து விட்டார்.

அதனால் அறையில் இருந்துபாடினார்.

பக்கத்து அறையில் இருந்த பிரதிநிதிக்கு சகிக்கவில்லை. நிம்மதியாகத் தூங்கமுடியவில்லை என்று புகார் செய்தார்.

ஆனாலும் அந்தப் பிரதிநிதி கேட்கவில்லை. பாடிக் கொண்டே இருந்தார்.

மூன்றாவது நாள் அழத் தொடங்கிவிட்டார். புலி தன்னைக் கொல்ல வருகிறது. சதி நடக்கிறது என்று தூங்காமல் இருந்து அழத் தொடங்கினார்.

பிரதிநிதிகள் தங்கு விடுதியில் தட்டெழுத்தாளராக வேலை செய்பவர் ஒரு தமிழ் பெண்.

"அந்தப் பெண்ணை நம்ப வேண்டாம். அவரும் ஒரு புலி. உள்ளே விடாதீர்கள்." என்று விடுதிக் காவலர்களிடம் சொன்னார் பிரதிநிதி. அதனால் பாவம் அந்தப் பெண்ணுக்கும் சில சங்கடங்கள்.

விடுதிச் சமையலறையில் பூனைகள் இருக்கின்றன.

ஒரு பூனை பிரதிநிதியின் அறைக்கு வந்து விட்டது. பிரதிநிதி பதறினார்.

புலிகள்தான் பூனையை அனுப்பியதாகப் புலம்பினார். புலம்பியது மட்டுமா விடுதிக் காவலரிடம் புகாரும் செய்துவிட்டார்.

அது சமையலறைப் பூனை என்று சொல்லியும் பிரதிநிதி சமாதானமாகவில்லை.

அப்போதுதான் அருகில் உள்ள அறைகளில் இருந்த பிரதிநிதிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

'மாண்புமிகு பிரதிநிதிக்கு பைத்தியமோ' என்பதுதான் சந்தேகம்.

இலண்டனில் வாழும் பிரதிநிதியின் மனைவிக்கும் தொலை பேசியில் விசயம் சொல்லப்பட்டது. அங்கு வியாபாரப் பணிகளைக் கவனிக்கும் பிரதிநிதியின் பாரியார் விசயத்தை சீரியசாக எடுத்துக் கொள்ள வில்லை.

பைத்தியம் முற்றிவிட்டது. இரவு நடு ஜாமத்தில் பிரதிநிதிக்கு வடக்கு-கிழக்கைப் பிரிக்கும் யோசனைபோல தனது அறையில் உள்ள ஜன்னலை பிரித்தால் என்னவென்று யோசனை வந்தது. பிரிப்பு யோசனையில் அண்ணர் ஒரு கில்லாடியாச்சே!

யோசனையை செயலில் காட்ட மாடி அறை ஜன்னலைப் பிரித்து கீழே குதித்தார். இலண்டன் பாணிப் பாய்ச்சலோ தெரியவில்லை.

சத்தம் கேட்டு சக பிரதிநிதிகள் ஓடி வந்து பார்த்தால் "தமிழினத்தின் பிரதிநிதிகளில் ஒருவர்" தலை நிலத்தில் மோதி தரையில் விழுந்து கிடந்தார்.

உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு பைத்தியம் முற்றியதால் பலத்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டது.

அவர் மாடியில் இருந்து தவறி விழுந்து விட்டதாக செய்திகள் வந்த போது சிரிப்புத்தான் வந்தது.

நடு ஜாமத்தில் மாடியில் இருந்து ஒரு மதிப்புக்குரிய புத்திசாலிப் பிரதிநிதி- இலங்கை வாழ் தமிழர்கள் சார்பில் பேசும் தகுதியிருப்பதாக திட்டம், வட்டம், சட்டம் என்று தூக்கித் திரிந்தவர் தவறி விழுவது என்றால் அது சாதாரண காரியமோ?

ஒன்றில் போதையில் இருந்து நடிகை திவ்வியபாரதி ஸ்ரைலில் குதித்திருக்க வேண்டும். அல்லது அவருக்கு "படு பயங்கரமான செல்வாக்கு" இருப்பதை சகிக்காமல் யாராவது தள்ளி விட்டிருக்க வேண்டும்.

ஆனால் இந்த இரண்டு காரணமும் இல்லை என்பது தெளிவாகி விட்டது.

தெளிந்த மதி இன்மையால் ஏற்பட்ட விபத்தே அது என்பதும் தெரிந்து விட்டது.

விசயம் அறிந்த ஒருவர் வருத்தப்பட்டார். இப்போதுதான் அவர் பிரிப்பைப் பற்றிப் பேசிய காரணம் தெரிகிறது. அதை அறிந்து கொள்ளாமல் அவர் மீது தமிழ் கட்சிகள் சில கோபப்பட்டு விட்டனவே என்றுதான் அவர் வருத்தப்பட்டார்.

ஒரு காலத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு பெருமை இருந்தது. புத்திசாலித்தனமான, அனுபவ சாலிகளான ஆற்றல் வாய்ந்தவர்களை தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்பவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்பதுதான் அந்தப் பெருமை.

இப்போது உள்ள நிலைமையைப் பார்த்தால் புத்திசாலிகளாகத் தான் இல்லையென்றாலும் குறைந்த பட்சம் பைத்தியங்களையாவது பிரதிநிதிகளாகப் பெறாமல் இருந்தால் பரவாயில்லை என்றாகி விட்டது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் தமிழர்களின் அரசியல் இருக்கிறது.

அண்ணர் தவறி விழுந்தது எதனால்? மூளையில் புத்தி தவறியதே அதனால்?

இப்படியெல்லாம் நடப்பது எதனால்?

தமிழர்கள் தங்கள் அரசியலை தாங்களே தீர்மானிக்கும் உரிமையை இழந்து போனார்களே அதனால்.

■

# உதிரும் உயிர்கள்




யுத்தத்தில் பொது மக்கள் மடிவதுதான் மாபெரும் சோகம்.

பொது மக்களைக் காப்பதற்காக என்று கூறியபடியே போரில் ஈடுபடும் தரப்புக்கள் அழிவுகளைப் பற்றி அக்கறையற்று இருப்பதுதான் கொடுமை.

இரத்தம்-சதை-கண்ணீர்-போரில் மித மலிவாகப் போய்விடுகின்றன.

போரை நிறுத்தலாம் என்று எல்லோரும்தான் சொல்கிறார்கள்.

ஆனால் போரில் ஈடுபடுவோர் போரில் தம் நோக்கங்களை நிலை நிறுத்தவே முயல்கிறார்கள். ஆகவே தொடர்கிறது யுத்தம்.

உயிர்கள் வாடிய பூக்களாய், நசிபட்ட இதழ்களாய் மண்ணில் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன.

# பார்வையாளர் அரங்கின் பரிதாப நிலை!
## கூரைக்கு தகடு போடுங்கள்!! குறையைத் தீருங்கள்!!!

(நிந்தவூர் நிருபர்)




நிந்தவூர் உயர்கல்விப் பீடமான, நிந்தவூர் அல்-அஷ்றக் மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கென அமைக்கப்பட்டுள்ள பார்வையாளர் அரங்கின் (ஸ்ரேடியம்) பரிதாப நிலையையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்!

இந்த வித்தியாலயத்தின் ஆரம்பகால முன்னாள் அதிபர் மர்ஹூம் சீ.ஓ.லெஸ்தகீர் அவர்களின் ஞாபகார்த்தமாக எழுந்துள்ள இந்தப் பார்வையாளர் அரங்கின் கூரைத்தகடுகள் (அஸ்பெஸ்டஸ்) கடந்த 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் திகதி வீசிய மினிச் சூறாவளி ஒன்றின் போது உடைந்து நொறுங்கி, கூரை ஓட்டையாகவே காணப்படுகின்றது.

மாதங்கள் பல கடந்தும் இந்த அரங்கிற்கு புதிய கூரைத்தகடுகள் போடவும், திருத்த வேலைகள் நடைபெறவும் ஆவன செய்யப்படவில்லை! சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கண்கள் இனியாவது திறக்குமா? அரங்கு புதுப்பொலிவு பெறுமா? எனப் பலரும் அங்கலாய்க்கின்றனர். நிந்தவூரில் பொது விளையாட்டு மைதானம் ஒன்றின்மையால் மேற்படி பாடசாலை மைதானத்திலேயே சகல விளையாட்டுப் போட்டிகளும், பயிற்சிகளும் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

# வெற்றிலைப் பிரியர்கள் கவலை!

(அக்குறணை நிருபர்)

எப்போதும் இல்லாமல் பாக்கின் விலை தற்போது அதிகரித்துள்ளது. ஒரு கிலோ கிராம் பாக்கின் விலை ரூபா 300 வரை செல்கின்றது. ஒரு பாக்கின் விலையோ 3 ரூபா.

இந்த விலை அதிகரிப்பு வெற்றிலைப் பிரியர்களுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. பாக்கின் விலை குறையுமட்டும் இப்பகுதி வாழ் வெற்றிலைப் பிரியர், பிரியைகள் மிகுந்த கவலையுடன் காத்திருக்கிறார்கள்.

ஆனாலும்-இன்னும் சில மாதங்களில் பாக்கின் விலை குறையும் என்று ஓர் அதிரடிச் செய்தியும் காற்றில் அடிபடுகின்றது.

# ஆங்கில தின இதழ் மீது அவதூறு வழக்கு!

(திருகோணமலை)

அவதூறு பரப்பும் நோக்குடன் செய்தியொன்றை வெளியிட்டதற்காக, தேசிய ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கெதிராக திருகோணமலை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பல் வைத்தியர் ஒருவர் தொடர்பான செய்தியொன்றை மேற்படி பத்திரிகை தனது 19.6.93 தின இதழில் வெளியிட்டமை தொடர்பாகவே இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இவ் வழக்கில் பத்திரிகை நிறுவனம் முதலாம் எதிரியாகவும், அதன் ஆசிரியர் இரண்டாம் எதிரியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளம் சட்டத்தரணி ஆ.ஜெகசோதி மனுதார் தரப்பில் ஆஜராகவுள்ளார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்


(சிறு விளம்பரப் பகுதி)



**மலையாள மாந்திரீகம்**

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex, NUWARA ELIYA.
Dial: 052-2508 & 3093
Celltel. 072-26088, 078-61933

COLOMBO BRANCH:
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. FAX: 0094-523093


## செலவோ பல இலட்சம்! பயனோ பூச்சியம்!!

(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் நீண்டகாலமாக ஒரு 'அஸம்பிளி' மண்டபம் இல்லை என்ற ஒரு குறைபாடு நிலவி வந்தது. எனவே, இதைக் கருத்திற் கொண்ட சில அரசியல், கல்வி அதிகாரிகளின் பெரு முயற்சியினால் இக்கல்லூரிக்கென ஒரு பாரிய மண்டபம் அமைக்கப்பட்டு, மண்டபத்தின் அனைத்து வேலைகளும் பூர்த்தியாகி சுமார் 2 வருடங்களாகின்றன. எனினும், இம்மண்டபம் இன்று வரை பயன்படுத்தப்படாமலேயே உள்ளது.

பல இலட்சம் ரூபாய்கள் செலவு செய்து, 'அஸம்பிளி' மண்டபமொன்று கட்டப்பட்டிருந்தும்- மாணவர்கள் கொட்டும் வெய்யிலில், வெட்ட வெளியில் காலை ஆராதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் இம் மண்டபத்தைத் திறந்து வைப்பதன் திரைமறைவில் சில 'சர்ச்சைகள்' இருப்பதாகவும் தெரிய வருகிறது.

எனவே- இல்லாமல் இருந்த 'ஒன்று' கிடைத்த பின்னும் இயங்காமல் இருப்பது கவலைக்குரியதே.

ஆகவே- சம்பந்தப்பட்டவர்கள் இப் பிரச்சனையைத் தீர்த்து வைத்து, மிக விரைவில் இந்த 'அஸம்பிளி' மண்டபத்தை திறந்து வைக்குமாறு மாணவர்களும், பெற்றோர்களும் அங்கலாய்த்துக் கொள்கின்றனர்.

## தமிழ் தெரியாத அதிகாரிகளும் தாமதமாகும் திட்டங்களும்!

(இராகலை நிருபர்)

நுவரெலியா-மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் உள்ள வலப்பனை, ஹங்குரங்கெத்த, அம்பேகமுவ, கொத்மலை, நுவரெலியா ஆகிய உதவி அரசாங்க பிரிவுகளுக்கு தமிழ் கிராம அபிவிருத்தி அதிகாரிகள் நியமிக்குமாறு மத்திய மாகாண சபை சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் ஹலீம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தமிழ் கிராம அபிவிருத்தி அதிகாரிகள் இல்லாததால், அரசாங்கத்தினால் கொண்டு வரப்படும் திட்டங்கள் தோட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதில்லை என்றும், நுவரெலியா மாவட்ட அரசாங்க வைத்தியசாலையில் தமிழ் உத்தியோகஸ்தர்களும் சிற்றூழியர்களும் மிக மிகக் குறைவாக இருப்பதால் தோட்டப்பகுதிகளிலிருந்து இங்கு சிகிச்சை பெற செல்வோர் முறையாக நடத்தப்படுவதில்லை என்றும் மத்திய மாகாண சபை சுகாதார குழுக் கூட்டத்தில், நுவரெலியா மாவட்ட உறுப்பினர் திரு.எஸ்.எஸ். அருள்சாமி புகார் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து நுவரெலியா மாவட்ட அரச வைத்தியசாலையில் தற்போது நிலவி வரும் தமிழ் அதிகாரிகள், சிற்றூழியர்கள் பற்றாக்குறையின் விபரங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு மாவட்ட வைத்திய அத்தியட்சகரிடம் கேட்கப்பட்டுள்ளது.

## தடங்கித் தொடர்ந்த இதயராகம்!

(கந்தப்பளை நிருபர்)

நுவரெலியா பட மாளிகை ஒன்றில் 24ம் திகதி திரையிடப்பட்ட 'ஷர்மிலாவின் இதய ராகம்' 25ம் திகதி திடீரென காட்சிகள் தடைப்பட்டன. பட மாளிகை வாசலில் ரசிக ரசிகர்கள் பல மணி நேரம் காத்துக் கொண்டிருந்து, ஏமாற்றத்துடன் வீடு சென்றனர். மீண்டும் 27ம் திகதி படக் காட்சி ஆரம்பிக்கப்பட்டது. இதயராக இரசிகர்கள் மீண்டும் குதூகலத்துடன் இதயராகம் படத்தை கண்டுகளித்தனர்.

## ஆசிரியர்கள் திரும்பவில்லை மாணவர்களுக்கு படிப்பில்லை


(மன்னார் நிருபர்)

சென்ற 1990ம் ஆண்டு மன்னாரிலிருந்து வெளியேறிய பலர் தற்போது மீளக் குடியேறியுள்ளனர். எனினும் பல ஆசிரியர்கள் இப்பகுதிக்கு இன்னும் தலைகாட்டவே இல்லை.

மன்னார் தீவில் 15ற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்கி வருகின்ற போதிலும் முஸ்லிம் பாடசாலைகள் ஏழிலும் மாணவர்களின் வரவு மிகவும் மோசமாகவுள்ளது. சில பாடசாலைகளில் 35 பேர் மட்டுமே உள்ளனர். ஆசிரியர்களும் சொந்த இடம் திரும்பாததால் பல மாணவர்கள் போதிய கல்வி இன்றி கஷ்டப்படுகின்றனர்.

குறிப்பாக முஸ்லிம் பாடசாலைகளிலேயே இவ்வாறு ஆசிரியர்கள் திரும்பி வராததினால் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். திரும்புவார்களா ஆசிரியர்கள்?

## குறுக்கெழுத்துப் போட்டி இல–19



### இடமிருந்து வலம்

1. தாமரையின் காதலன்.
2. பக்கச்சார்பின்றி வழங்கப்பட வேண்டியது.
4. அந்தக்காலம் தொட்டு இந்தக் காலம் வரை இவர்கள் இருக் கிறார்கள்.
6. அடிக்கலாம். பிடித்தும் நடக்க லாம். (திரும்பியிருக்கிறது)
7. மனித குலத்திற்குத் தேவை யானது.
8. நடக்கப் போவதைச் சொல் வது.(குழம்பியிருக்கிறது)
11. நமது நாட்டில் அதிகமாகி வருகிறது.
12. சகுந்தலை தொலைத்தது.

### மேலிருந்து கீழ்

1. திரௌபதை இதில்தான் பணயம் வைக்கப்பட்டாள்.
3. ஆற்றலுக்கு இன்னொரு பெயர்.
5. மதுரை எரியக் காரணமாக இருந்தது.
6. தேவையற்ற சாவு என்று சொல்வார்கள்.
8. பாரிலே பஞ்சமும் போரும் நிலவும் நாடுகளில் ஒன்று.
9. இது வேண்டாம் என்கிறது மனிதகுலம்.
10. இது நிறைந்த படங்களை இதயநோயுள்ளவர்கள் பார்க்கக் கூடாது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 16.10.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். (அஞ்சலட்டைகளை மாத்திரம் உபயோகிக்கவும்) அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல.-19**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.**

### குறுக்கெழுத்துப் போட்டி இல-17க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கா | கி | த | ம் | | 2 வ | சை |
| ர் | தி | 3 பு | | 4 க | ர | டி |
| 5 மே | ன | கை | | ம் | த | |
| க | | த் | 6 ட | ப | ட் | ம் |
| ம் | 7 ஆ | த | | ளி | ச | ர |
| | ட் | ல் | 8 சா | | ணை | தி |
| 9 ப | சி | | 10 வி | தை | | 11 உ |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.17இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி லக்ஷாந்தி மட்டக்களப்பு.
2. சி. பிரகலதா திருமலை.
3. என். நிஸாம் கல்முனை.
4. பா. கதிரேசன் கண்டி.
5. வி. சலீம் பொலன்னறுவை.
6. எஸ். பார்வதி நுவரெலியா.
7. ஆர். நௌசாத் புத்தளம்.
8. கே. ரங்கநாதன் நீர்கொழும்பு.
9. திருமதி. தேவகி பத்மநாதன் கொழும்பு–6.
10. எம். சாரங்கன் பண்டாரவளை.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

## நீண்ட நாள் கோரிக்கை! நிவர்த்தி செய்வார்களா?

கெகுணகொல்லை உபதபாற் கந்தோருக்கு தொலைபேசி வசதி செய்து தரப்படவேண்டும் என பலர் நீண்ட காலமாக எடுத்து வந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. தபால் தொடர்புகள் அமைச்சோ, மாகாணசபையோ இவ்விடயத்தில் இன்னும் கவனஞ் செலுத்தாமல் இருப்பது இப்பகுதி வாழ் மக்களை பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இத்தபாற் கந்தோர் சுமார் பதின்மூன்று வருடங்களுக்கு முன் முதலாந்தர தபாற்கந்தோராக தரமுயர்த்தப்பட்டது. ஆனால் உரிய வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் பல மைல்களைக் கடந்து தொலைபேசி வசதிகளைப் பெறச் செல்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குறைபாட்டை உடனே நிவர்த்தி செய்து தரவேண்டுமென இப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

ஏ.எல்.ஸலர்ம்–நாரம்மலை.

## புகார் பெட்டி

### தெளிவு இல்லாத ஒலிபரப்பு

கண்டியில் ஒலிபரப்பப்படும் கண்டித் தமிழ் ஒலிபரப்பு, 13.09.93ம் திகதிக்கு முன்பாக எஃப்.எம். அலை வரிசையிலும், எம்.டபிள்யூ அலை வரிசையிலும் ஒலிபரப்பாகி வந்தது.

ஆனால் தற்பொழுது எம்.டபிள்யூ அலை வரிசையில் மட்டும் தான் இவ் ஒலிபரப்பு நடத்தப்படுகிறது. ஆகவே இவ் அலைவரிசை தெளிவு இல்லாமையால் நேயர்களின் ஆக்கமாக ஒலிபரப்பப்படும் இளைஞர் பூங்கா, எங்கள் தெரிவு இப்படியான நிகழ்ச்சிகளை புத்தளம் மாவட்டத்தில் கேட்க முடியவில்லை.

ஆகவே இவ் ஒலிபரப்பை எஃப்.எம். அலை வரிசையிலும் ஒலிபரப்ப கவனம் செலுத்தும் படி கேட்டுக்கொள்கிறேன்.

எம்.ஏ.ஏ.ஜுனூத்,
கொத்தாந்தீவு.

## கிண்ணியாத் துறைப்பாலம் எங்கே?

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பிரிவுதான் கிண்ணியா. இவ்வூரிலே ஏறத்தாழ எழுபதாயிரம் மக்கள் வாழ்கின்றனர். "மக்கள் அதிகரித்தால் தேவைகளும் அதிகரிக்கும் என்பது கண்கூடும்." இவர்களின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு கிண்ணியாத் துறையைக் கடக்க வேண்டியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இத்துறைக்கு ஒரு பாலம் இல்லாததால் மக்கள் பெரிதும் அல்லல் படும் நிலையில்தான் படகுப் பாதை மூலம் பிரயாணம் செய்கின்றனர். அது மட்டுமல்ல, கிண்ணியா வைத்தியசாலையிலிருந்து மிகவும் கடுமையான நோயாளிகளை கொண்டு செல்வது கூட, பாலமில்லாமல் கடினமாக இருக்கின்றது. இதனால் சில சந்தர்ப்பங்களில் நோயாளி இறக்கவும் நேரிடுகின்றது.

இனிமேலாவது மக்களின் கஷ்ட நிலையை கருத்திற் கொண்டு பாலத்தை வெகுவிரைவில் அமைத்து தருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

எம்.ஐ.முஜிப் றஹ்மான், எஸ்.பாறுக்கான், நியாஸ்
கிண்ணியா–01.

## பழுதடைந்த குளங்கள் பயன்படும் குளங்களாகுமா?

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்த் தொகுதியில் பின் தங்கிய கிராமமான பள்ளிக்குடியிருப்பில் உள்ள மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்க்கை நடத்திக் கொண்டு வருகிறார்கள். இப் பகுதியில் ஒரு போகப் பயிர்ச் செய்கையே மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளது. சென்ற ஆண்டு வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட அழிவுக்கான நஷ்டஈடுகள் இன்னும் வழங்கப்படாத நிலையோடு இரண்டு குளங்கள் (கிராண்ட குளம், மரவட்டகுளம்) பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன. இதைப் புனரமைப்பதோடு அல்லது நீர்ப்பாசன குளமாக்குவதன் மூலம் இம்மக்களின் பட்டினியைப் போக்க முடியும். ஏனெனில் இங்கு வாழ்கின்ற மக்களில் 95% வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றார்கள். இவர்களின் பரிதாப நிலையைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நா.திவாகரன்
பள்ளிக்குடியிருப்பு.

## இரவோடு இரவாக மாகாண சபை தூக்கி எறிந்தது! வலியுறுத்தியும் திருப்பித் தரவில்லை!!

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகம் 13.05.89ல் வடக்கு- கிழக்கு மாகாண சபையால் நூல்கள் யாவற்றையும் இரவோடிரவாக வாகனங்களில் ஏற்றப்பட்டு நெல்சன் படமாளிகையில் குவிக்கப்பட்டு, அங்கேயே நூலகத்தை நடாத்துமாறு கூறப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை நகராட்சி மன்ற செயலாளர், வாசகர் வட்டம், நூலக ஆலோசனைக்குழு ஆகியோரால் பல தடவைகள் நூலக கட்டிடத்தினை திரும்ப ஒப்படைக்க கோரிக்கை விடப்படும் நூலக கட்டிடம் திரும்ப ஒப்படைக்கப்படவில்லை.

திருகோணமலையில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையின் போது வரியிறுப்பாளர்கள் சங்கம் பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சரை சந்தித்து கட்டிடத்தை திரும்ப நகராட்சி மன்றத்திடம் ஒப்படைக்க கோரிய போது அமைச்சர் இதற்கு இணங்கி கட்டளை இட்ட போதும் இன்று வரை நூலக கட்டிடம் நகராட்சி மன்றத்திற்கு கிடைக்கவில்லை.

திருகோணமலை நகரின் சனத்தொகை, நூலகத்தின் சேவைப் பிரிவுகள், நூலகத்தின் வளர்ச்சி ஆகியவற்றை கருத்திற் கொண்டு புதிய நூலகம் அமைக்க தபாற் கந்தோர் வீதியில் காணி பெறப்பட்டுள்ளதுடன் நூலகம் அமைக்க தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் என்பனவும் தயார் செய்து தேவையான நிதியை வெளிநாட்டு அரசாங்கங்கள் மூலம் பெற வடக்கு -கிழக்கு மாகாண ஆளுநர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

திருகோணமலையில் இருக்கும் கட்டிடங்கள் எதுவும் நூலகம் நடாத்த வாடகைக்குக் கிடைக்கவில்லை. இந்நிலையில் மிகுந்த சிரமத்தின் மூலம் இந்த வாடகை வீட்டை எடுக்க முடிந்தது. இந்த வீட்டில் எலிகளோ, கறையானோ இல்லை என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன். தங்கள் நிருபர் இச்செய்தியை எழுதும் முன் என்னுடன் தொடர்பு கொண்டு நூலகம் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை அறிந்து அதன் மூலம் தனது கேள்விக்குரிய பதிலைப் பெற்றிருக்கலாம். இதை விடுத்து அதிகாரிகளின் அசமந்த போக்கு என குறிப்பிடுவது நூலகத்தின் நலனில் அக்கறை கொண்டு உழைக்கும் அதிகாரிகளின் மனதை புண்படுத்தும் செயலாகும் என்பதை தங்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றேன்.

மொ.ஜெகதீஸ்வரன்
செயலாளர்
நகராட்சி மன்றம், திருகோணமலை.

## பிரதான பாதையின் பழுது தீருமா?

பூண்டுலோயாவுக்கும் நுவரெலியாவுக்கும் இடையிலான பிரதான போக்குவரத்து பாதை கடந்த சுமார் 10 ஆண்டுகளாக திருத்தப்படாமல் இருக்கின்றது. இதனால் இப்பாதை குன்றுங் குழியுமாக உள்ளதோடு, பெரும்பாலான இடங்களில் கற்களே காணவில்லை. மண் தரைகளிலேயே வாகனங்கள் ஓடுகின்றன. பாதைகளும் குறுகிக் கொண்டு போகின்றது.

பூண்டுலோயா பகுதியிலுள்ள பேர்லேண்ட், சொய்சி, நோத் பூண்டுலோயா, டன்சினன், ஹறோ,சீன் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் கிராமத்தவர்களும், தமது முக்கிய அலுவல்களை செய்து கொள்ள நுவரெலியாவுக்கே வரவேண்டியுள்ளது. அத்துடன் இரண்டொரு பஸ் வண்டிகள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இதனால், இப்பகுதி மக்களோடு, பாடசாலை பிள்ளைகள் தினந்தோறும், சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். வேலைக்கு செல்வோர் காலையிலும் மாலையிலும் நேரத்தோடு சென்று திரும்ப முடியாமல் அவதிப்படுகின்றனர்.

இதனை இப்பகுதியிலிருந்து பிரதேச சபைக்கு தெரிவான உறுப்பினர்கள் கவனத்திற்கொண்டு இப்பாதையை திருத்த தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பொது மக்கள் கோருகின்றனர்.

கே.என்–இராகலை.

## இங்கும் அப்படியா?

எவ்வளவுதான் தமிழ் மொழி அமுலாக்கல் பற்றிப் பேசப்பட்டாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்குதான். கொழும்பு மாநகரில் 'கூட்டுறவு வர்த்தகக் கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள (மருதானை தொழில் நுட்பக் கல்லூரி முன்பாக) இரு அமைச்சுக்களின் பெயர்களும் இப்படி அமைந்துள்ளன:

கொன்கை திட்டமிடல், செயற்படுத்துகை அமைச்க.
உணவ கடட்டுறவு சனசக்தி அமைச்சு.

என்ன புதுக் கண்டுபிடிப்போ? சம்பந்தப் பட்டவர்கள் கவனம் எடுப்பார்களா?

லின்னாஸ் சௌக்கத்-மக்கொன.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**-நாரதர்-**

# யாழ்தேவி இராணுவ நடவடிக்கை யார் தோல்வி? யார் வெற்றி?

**யா**ழ்ப்பாணத்திற்கு கொழும்பில் இருந்து, யாழ்தேவி ரயில் சென்று வந்து மூன்றாண்டுகள் ஆகப் போகின்றன.

ரயில் போக்குவரத்துக்கள் நடந்த மைக்கான தடயங்கள் கூட இப்போது யாழ்ப்பாணத்தில் இல்லாத நிலையில் தற்போதைக்கு ரயில் போக்குவரத்துப் பற்றி நினைக்க முடியாது.

தோன்றத் தொடங்கின.

அரசும், புலிகளும் விடாக்கொண்டன், கொடாக்கண்டன் நிலையில் நின்று மோதிக் கொள்வதால் தாம் அநியாயமாகப் பலியாவ தாக பொதுமக்கள் விரக்தி கொண்டார்கள்.

பொது மக்கள் மட்டும் பலியாகவில்லை. தாமும் கணிசமான பலி கொடுத்திருக் கிறோம் என்பதை வெறுப்புற்ற மக்களுக்கு

எப்படியிருப்பினும் பொதுமக்களின் போக்குவரத்தை முற்றாகத் தடுக்க முடியாது.

அப்படித் தடுத்தால் அது புலிகளுக்கு எதிரான மனப்போக்குகளைத்தான் மக்களிடம் உருவாக்கும்.

அது மட்டுமல்லாமல் புலிகளின் தேவைகளும் போக்குவரத்தோடு தொடர்பு

வறட்டுத்தனமான கோரிக்கைகள் எப்போதுமே இவ்வாறான விளைவு களைத்தான் ஏற்படுத்தி விடுகின்றன. அவ்வாறான கோரிக்கைகள் மக்களது ஆதரவையும் பெற முடிவதில்லை.

விமானக் குண்டு வீசசுக்கள், ஷெல் அடிகள் என்பவற்றையிட்டு பொதுமக்கள் தீராத வெறுப்புக் கொண்டுள்ளனர்.



தண்டவாளங்கள் யாவும் புலிகளால் போரின் தேவைகளுக்காக பெயர்க்கப்பட்டு விட்டன. பங்கர்களுக்கு உபயோக மாகின்றன.

நிலைமைகள் ஒருவேளை சீரானால் கூட ரயில் போக்குவரத்துக்கு நீண்ட காலம் ஆகும்.

அரசாங்கம் வட பகுதிக்கு ரயில் சேவையை நடத்த முடியாமல் இருந்தாலும் இப்போது யாழ்தேவி இராணுவ நடவடிக்கையை நடத்தியிருக்கிறது.

கடுகதி ரயில் சேவையான யாழ் தேவியின் பெயரில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் நினைத்த வேகத்தில் படையினர் முன்னேற முடியவில்லை.

என்றாலும் சமீபகாலத்தில் நடைபெற்ற மிகப் பெரிய மோதலாகவே யாழ் தேவி இராணுவ நடவடிக்கை அமைந்துள்ளது.

படையினர் தரப்பில் பலத்த இழப் புக்கள் ஏற்பட்டுள்ளன.

புலிகளின் தரப்பிலும் இழப்புக்கள் அதிகமாகியிருக்கின்றன.

கொழும்பில் நூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட படையினரின் உடல்கள் தனியார் சவச்சாலைகளில் வைக்கப்பட்டிருந்ததாக சில தகவல்கள் கூறுகின்றன.

அப்படிப் பார்க்கும் போது பலியான படையினரின் எண்ணிக்கை வெளியே கூறப்படுவதை விட அதிகமாக இருக்கக் கூடும் என்றே நம்பப்படுகிறது.

புலிகள் முதல் நாள் மோதலில் பலியான 80க்கும் மேற்பட்ட தமது உறுப் பினர்களின் உடல்களை யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைத்திருந்தனர்.

படையினரும் புலிகளில் பலியான உறுப்பினர்களின் 20க்கு மேற்பட்ட சடலங்களை தாம் கைப்பற்றியதாகக் கூறியுள்ளனர்.

பொதுவாகவே இவ்வாறான மோதல் களில் உண்மையான இழப்புக்கள் பற்றிய விபரங்கள் உடனடியாக வெளியே சொல்லப்படுவதில்லை.

புலிகளும் தமது இழப்புக்களை காலம் கடந்தே ஒப்புக் கொள்ளுவது வழக்கமாகும்.

எனினும் இம்முறை 80 உடல்களை புலிகள் அஞ்சலிக்காக வைத்திருந்தமை, மக்களின் அனுதாபத்தை வென்றெடுக்கும் நோக்கத்தில் என்றே கருத முடிகிறது.

விமானப்படையினரின் தாக்குதல்களால் பொது மக்கள் பலர் பலியானார்கள். இலக்கற்ற குண்டு வீச்சுக்களால் இம்முறை யும் கோவில்கள் சேதமடைந்தன.

பதுங்கு குழிக்குள் இருந்த பொது மக்களும் விமானத் தாக்குதலால் பலியாகிப் போனார்கள்.

போர் நடைபெறும் பகுதிகளுக்கு அப்பாலும் விமானத் தாக்குதல்கள் நடத்தப் படுவது பொது மக்களின் உயிரிழப்புகளுக்கு காரணமாகிறது.

இம்முறை பொது மக்களின் இழப்புக் கள் அதிகமானதால் யாழ்ப்பாணம் இழவு வீடு போல் மாறியது.

ஒரு புறம் அரசு மீது வெறுப்பும், மறு புறம் இது தேவையற்ற யுத்தம் என்ற கருத்தால், புலிகள் மீது அதிருப்தியும்

தெரியப்படுத்தவே பலியான தமது உறுப்பினர்களது உடல்களை உடனடியாக புலிகள் அஞ்சலிக்கு வைத்தனர்.

பொது மக்களைவிடத் தமது உறுப் பினர்களே அதிகமாகப் பலியாகியுள்ளனர், என்பதை தெரியப்படுத்துவது புலிகளுக்கு அவசியமானதாகவே இருக்கிறது.

இல்லாவிட்டால் புலிகளுக்காக மக்கள் பலியாவதாக அர்த்தமாகிவிடும்.

மறுபுறத்தில் அரசாங்கமும், படையினரின் இழப்புக்களை வெளியிட் டுள்ளதன் மூலம் இராணுவ நடவடிக்கை யில் தீவிரம் காட்டுவதை வெளிப்படுத்த முயன்றுள்ளது.

புலிகளை தோற்கடிப்பதில் தன்னை தீவிரம் கொண்டவராகக் காட்டி வரும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை திருப்திப் படுத்த படைத்தலைமையும் இயன்றவரை முயன்றுள்ளது.

இராணுவம் என்ன செய்கிறது? இராணுவ உயரதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்று தெற்கில் சிங்கள- ஆங்கிலப் பத்திரிகைகள் எழுப்பிய கேள்வி களுக்கு, யாழ் தேவி நடவடிக்கை மூலம் பதிலளிக்கவும் முயன்றுள்ளனர்.

இராணுவத்தில் இருந்து ஆயிரக் கணக்கானோர் தப்பி ஓடிய செய்திகள் வெளியே பரவிவிட்டன.

அதனால் இராணுவம் பற்றிய ஆச்சரியமான பார்வைகளும் தெற்கில் அடிபட்டுப் போகின்றன.

எனவே இராணுவத்தினர் நாட்டுக்காக தியாகங்களைச் செய்யப் பின் நிற்கவில்லை. பலியாகியும் போரிட்டும் வருகிறார்கள் என்பதை தெரியப்படுத்த, வெளியிடப்பட்ட இழப்பு விபரங்களும், களமோதல் செய்திகளும் உதவலாம்.

அதன் மூலமாக சிங்கள மக்கள் மத்தியில் இராணுவம் குறித்து ஏற்படுத் தப்பட்ட அலட்சியமான அதிருப்தியான எண்ணங்களை நீக்கலாம் என்று படைத் தலைமை கருதியிருக்கலாம்.

■

**யா**ழ்தேவி இராணுவ நடவடிக்கை யின் முக்கிய இலக்கு புலிகளின் கடல்வழிப் போக்குவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாகும்.

கிளாலியைப் பிடித்ததோடு, தமது நோக்கத்தில் ஒரு பகுதி வெற்றி என்றே படையினர் தரப்பில் கூறப்படுகிறது.

புலிகளைப் பொறுத்தவரை கிளாலி பறிபோனமை பாரிய இழப்பாகவே கருதப்பட வேண்டும்.

ஆனையிறவு, பூநகரிப் பாதைகள் ஊடான போக்குவரத்துகளுக்கு புலிகள் இதுவரை மறுத்து வந்தனர்.

இராணுவம் சோதனையிடக்கூடாது என்றும் அப்படியானால்தான் பூநகரிப் போக்குவரத்து நடக்கும் என்றும் கூறிவந்தனர்.

இப்போது கிளாலி படையினர் வசம் வந்துவிட்டதால் பொது மக்களின் போக்கு வரத்து விடயத்தில் புலிகள் என்ன செய்யப் போகிறார்கள், என்ன சொல்லப் போகி றார்கள், என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

பட்டுள்ளன. யாழ் குடாநாட்டை ஏனைய பகுதிகளில் இருந்து முற்றர்கத் துண்டித்தால் புலிகளும் அதனால் பாதிக்கப்படவே செய்வார்கள்.

ஆனையிறவுப் பாதையூடாக முன்பு போல போக்குவரத்தை நடத்துவதில் படையினர் நாட்டம் கொண்டுள்ளனர்.

பொது மக்களைப் பொறுத்த வரையில் கிளாலிக் கடல் ஏரிப் போக்குவரத்து தடைப்பட்டதில் ஒரு புறம் சந்தோசப்படவே செய்வர்.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு சேற்றிலும், தண்ணீரிலும் தோய்ந்து பயணம் செய்வது எத்தனை பெரிய அவலம் என்பதை அப்பாதையூடாக பயணம் செய்தவர்கள் மட்டுமே அறிவர்.

தமது உறவினர்களைப் பயணம் அனுப்பி விட்டு உள்ள தெய்வங்களை எல்லாம் மன்றாடிக்கொண்டு இருக்கும் குடும்பங்கள் போக்குவரத்துக்கள் சீரானால் நிம்மதிப் பெருமூச்சு விடுவர்.

போரில் படையினர் பலியானால் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது. பலியானோரின் குடும்பத்தினருக்கு சலுகை களும் பல உண்டு.

புலிகள் பலியானால், கூட பலியாகும் புலிகளின் குடும்பத்தினருக்கு இயக்கத்தால் நிவாரண உதவிகள் வழங்கப்படுகிறது.

ஏனையோரை விட சகல இடங்களிலும் மாவீரர் குடும்பம் என்று புலிகள் அமைப் பினரால் முன்னுரிமையும் கொடுக்கப் படுகிறது.

நினைவுத் தூபிகள், அஞ்சலிக் கூட்டங்கள் என்றும் கௌரவங்கள் செய்யப்படும்.

ஆனால் அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான போரில் பலியாகும் பொது மக்களின் கதி என்ன?

சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தினர் தவிர, வேறு யாரும் கவலைப்படப் போவதில்லை.

குடும்பத்தின் தலைவர்களை இழந்து பரிதவித்து நிற்கும் குடும்பங்கள் எத்தனை?

ஒரு சில நொடிகளில் ஒரு குண்டு ஒரு குடும்பத்தையே நாசமாக்கி விடலாம்.

சிறுகச் சிறுக சேமித்து, குருவி வீடு கட்டியது போல உருவாக்கிய வீட்டை யுத்தமும், குண்டுகளும் உருத்தெரியாமல் செய்துவிடலாம்.

கிளாலியில் இதுவரை பலியான வர்களின் குடும்பத்தினருக்கு யார் ஆறுதல் சொல்வது.

ஆனையிறவுப் பாதையால் போக வேண்டாம், பூநகரிப்பாதையால் போக வேண்டாம் என்று உத்தரவு போடும் புலிகளால் கிளாலி இழப்புக்கள் பற்றி பொறுப்போடு சிந்திக்க முடியாமல் போனது ஏன்?

பயணிகளின் பையை இராணுவம் சோதனையிடக் கூடாது என்று புலிகள் சொல்லிக் கொண்டிருக்க, கிளாலி வழி போனவர்கள் மாண்டு போக, அவர்கள் குடும்பங்களோ மீள முடியாத சோதனை யிலும் வேதனையிலும் வீழ்ந்து போயின. அவர்களின் தினசரி வாழ்க்கையே சோதனையானது.

அதே சமயம் கிளாலிப் பாதையூடான போக்குவரத்துக்குப் பதிலாக நேரான போக்குவரத்து வசதி ஏற்பட்டால் அதனை ஒரு ஆறுதலாகவும் கருதுவர்.

இதுதான் புலிகளின் பலவீனம். தமது பலத்தின் மூலம் மக்கள் மீது தமது கட்டுப்பாடுகளை திணிக்கும் போது அதுவே புலிகளை பலவீனப்படுத்தவும் காரணமாகிவிடுகிறது. இதனைப் புலிகள் புரிந்து கொள்ளாத வரை வறட்டுத் தனங்களில் இருந்து அவர்கள் மீள முடியாது.

■

**யா**ழ் தேவி இராணுவ நடவடிக்கை வெற்றி என்று படையினரும், தமக்கே வெற்றி என்று புலிகளும் கூறிவரு கின்றனர்.

இருதரப்பிலும் ஏற்பட்ட இழப்புக்கள் உயிரழிவுகள், செலவுகள் நாட்டுக்கு நஷ்டம்.

இராணுவ வெற்றி தோல்வி பற்றிய பேச்சுக்களால் அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்கள் பின் தள்ளப்பட்டுள்ளன.

இராணுவத்தின் கைகள் மேலோங்கு மானால் அரசியல் தீர்வு பற்றி அரசாங்கம் மூச்சுவிடாது என்று அரசியல் தீர்வில் அக்கறையுள்ளோர் கூறுகின்றனர்.

தற்போது கட்டுப்பாட்டில் வைத் துள்ள பகுதிகளை தொடர்ந்து பாதுகாப் பது படையினருக்கு சுலபமான காரிய மல்ல.

எப்படியாவது தமது போக்கு வரத்துக்கு உள்ள தடைகளை உடைக்க புலிகளும் முற்படுவர்.

ஆகவே மோதல்கள் தொடரும்.

போரில் வெல்வது மட்டுமே பிரச்சனைகளுக்கு தீர்வாகாது என்பதை அரசும் புலிகளும் உணர வேண்டும்.

போரில் உண்மையான வெற்றி மக்களின் மனங்களை வெல்வதே.

துரதிஷ்டவசமாக இருதரப்பினரும் அதில் தோல்வியே கண்டு வருகின்றனர். ■

## அதிரடி அய்யாத்துரை



**யா**ழ்தேவி எண்ட பெயரைக் கேள்விப்பட்டே எத்தனை வருசம் ஆச்சுது. இப்ப பழையபடிக் கேள்விப்படுறம். ஒரு வித்தியாசம் பாருங்கோ. அது கடுகதி யாழ்தேவி. இது அதிரடி யாழ்தேவி. ரெண்டு சைட்டிலையும் எக்கச் சக்கமான இழப்புகளாம். வெளியிலை தெரிஞ்சது பாதி. தெரியாதது மீதி.

வெளிநாட்டுச் செய்திச் சேவையள் எங்கட தொலைக்காட்சிகளில் தெரியத் தொடங்கியது நல்ல விசயம். நாலு உலக விசயம் அறியலாம் தானே. அதில பாருங்கோ போன கிழமை இலங்கை இராணுவ நடவடிக்கை எண்டு வெள்ளைக்காரப் பிள்ளை, நளினமாக உச்சரித்ததை மட்டும்தான் கேட்க முடிஞ்சுது. மீதியை பாய்ஞ்சு தணிக்கை செய்து போட்டினமாக்கும். உதுதானே சந்தேகத்தைக் கொடுக்கிறது. அரசாங்கம் பொய் சொல்லுது. அதுதான் வெளிநாட்டு நியூஸை மறைக்குது எண்டுதானே பார்த்த சனம் நினைக்கும். அது சரி ரி.வி.யில மறைக்கப் பார்க்கினம். ரேடியோக்கள் வெளிநாட்டு செய்திகளை இழுக்குதே அதுக்கு என்ன செயமிறதாம்.

கொழும்பிலை புதிய தனியார் வானொலி நிலையமும், அரச வானொலியும் கடும் போட்டியாம். இப்பத்தான் அரச வானொலி தமிழ் சேவைகளுக்கு உஷார் வந்திருக்குது. போட்டுப் பிண்ணி எடுக்கினம். கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேணும்தானே. அதெல்லாம் கிடக்க அந்த புதிய தனியார் வானொலிக்காரர் எற்கனவே ஒலிபரபபான தனிப்பாடல்களை தாங்கள்தான் முதலில் அறிமுகம் செய்மிறதா சொல்லுறதுதான் சரியில்லைப் பாருங்கோ.

தலை நகரில் எம்.ஜி.ஆர் படம் ஒளி விளக்கு ஓடுது பாருங்கோ ஒரு ஓட்டம். அப்ப மாதிரியே இப்பவும் விசில் அடி செவியைக் கிழிக்குது. சும்மா சொல்லக்கூடாது. இப்ப புதுமை எண்டு அதை இதை கமராவிலை பிடிச்சு குளோசப்பிலை காட்டினாலும் அந்தக்கால படங்களோட நிற்க முடியாது பாருங்கோ. காலத்தால் அழியாத கலைஞர்கள் என்று எம்.ஜி.ஆர் -சிவாஜியை- சொல்லுறதிலை என்ன பிழை. ஒளி விளக்கு ஓடுற ஓட்டம் அதை நல்லா வெளிச்சம் போட்டுக் காட்டுதல்லோ.

போன கிழமை ஒரு சின்னப் பிழை விட்டுப் போட்டன. மூதூரிலை பவர் உள்ள பெண் எண்டு சொல்லிப் போட்டன். அதைக் கிண்ணியா எண்டு திருத்திக் கொள்ளுறன். கிண்ணியாவிலைதான் பவரில் உள்ள பெண் பப்பாவில நிண்டு பாவப்பட்ட சனத்தை படாத பாடு படுத்துதாம். பப்பா எப்ப முறியுதோ? பாப்பா எப்ப விழுகுதோ?

கோயில் தேர்முட்டியள் என்ன பிழை செய்ததோ தெரியேல்ல. தொடர்ந்து குண்டு வாங்குதுகள். உயரமா இருக்கிறதால வசதியாக் கண்ணுக்குத் தெரிய வாட்டிப் போட்டு வருகினமாக்கும். அது கிடக்க கொழும்பில் உள்ள கட்டிட ஆசாரியார் ஒருவர் சொன்னதைக் கேட்டாக் கோபப்படுவியள். "நல்லா உடையட்டும். அப்பதான் எங்களுக்கு வேலை வரும். இப்ப அங்கை நல்ல ஆசாரிமார் இல்லை. நாங்கள் தானே இஞ்சையிருந்து செய்து அனுப்ப வேணும்" எண்டு மனுசன் சொன்னது பாருங்கோ. எரியிற வீட்டிலை பிடுங்குற எங்கட ஆட்கள் சிலர் இருக்கும் வரையும் உருப்பட்ட மாதிரிதான்.

**யா**ழ் தேவி விசயத்திலை ஒரு சம்பவம் நினைவுக்கு வருகுது. யாழ்ப்பாணத்திற்கு ரயில் விட வேணும் எண்டு முதன் முதல் பிரிட்டிஷ்காரருக்கு சொன்னவர் யார் எண்டு கேட்டா அவர்தான் சேர் பொன் இராமநாதன். அப்ப எங்கட ஆட்கள் சிலரே சிரிச்சுக் கொண்டு என்ன சொன்னவை எண்டு கேட்டா சந்திர மண்டலத்திற்கு கொழும்பில் இருந்து ரயில் விடுறதும், யாழ்ப்பாணத்திற்கு விடுறதும் ஒண்டுதான். அவ்வளவு கஷ்டம். இடையிலை காடுகள், தடைகள். எண்டாலும் வெள்ளைக்காரர் அமரர் இராமநாதன் மேல் விருப்பம் வைச்சிருந்ததால ரயில் விட்டவை. அதனாலை வருமானம் அவைக்கும் கிடைச்சுது. வளர்ச்சி யாழ்ப்பாணத்திற்கும் கிடைச்சது. அப்ப இருந்த தலைவர்மார் வளர்ச்சியைப் பற்றிச் சிந்திச்சவை. இப்ப.....அதை ஏன் நான் தான் சொல்ல வேணுமாக்கும்.

**மா**ன்-மீன்-தேன் இந்த மூன்றையும் பெண்ணுக்கு உவமை சொல்லுற விசயம் இப்ப வரைக்கும் இருக்குது. ஆனால் பாருங்கோ கடைச்சங்க கால நாலடியாரிலே எப்பிடி ஒரு கற்பனையை வடிச்சு விடப்பட்டிருக்குது தெரியுமோ?


கண் கயல் என்னும் கருத்தினால் காதலி
பின் சென்ற தம் சிறு கிரல்-பின் சென்றும்
ஊக்கி யெழுந்தும் எறிகல்லா ஒண் புருவம்
கோட்டிய விலவாக்கு அறிந்து.

என்ன அர்த்தம் சொல்லவோ? கேளுங்கோ. தன்னுடைய காதலியின் கண்களை மீன் என்று நினைச்ச மீன் கொத்திப் பறவை கொத்த வருகுதாம். எங்கட சில மன்மதக் குஞ்சுகள் மாதிரி பின்னுக்கு தொடருதாம். அதில பாருங்கோ அந்தக் காதலியின்ர விழிப் புருவத்தைப் பார்த்தவுடன் அய்யோ வில்லுத்தான் அது எண்டு நினைச்சு கொத்தப் பயந்து பறந்திட்டுதாம். பார்த்தியளே என்ன மாதிரி சுப்பர் கற்பனை எண்டு. இப்பவும் எழுதுகினமே என்னக்கா ஏலக்கா, வாழக்கா எண்ட மாதிரி ஸ்ரையிலே. கண்றாவி. காதல் என்றாலும் காமம் என்றாலும் சொல்லும் போது அதில் ஒரு நயம் இருக்க வேணும் பாருங்கோ. ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பொப் பாடகரின் புகழ் சரியவில்லையாம்!

## மைக்கல் ஜாக்சனைக் காப்பாற்ற மற்றொரு முயற்சி



ஜாக்சனால் பலாத்காரம் செய்யப் பட்டதாகக் கூறப்படும் சிறுவன்.

பொப் பாடகர் மைக்கல் ஜாக்சன் சிறுவன் ஒருவனை பலாத்காரம் செய்ததாக புகார் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சர்வதேச ரீதியாக மைக்கல் ஜாக்சனின் வரலாறு, வாழ்க்கைமுறை எல்லாம் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலமாக அலசி ஆராயப் பட்டன.

மைக்கல் ஜாக்சன் சிறுவர்களோடு காணப்படும் புகைப்படங்கள் வெளியிட்டு சந்தேகங்களை மேலும் வலுப் படுத்தினார்கள்.

இப்போது மைக்கல் ஜாக்சனின் தனிப்பட்ட புலனாய்வுப் பொறுப்பாளர் ஒரு ஒலிப்பதிவு நாடாவை (டேப்) வெளியிட்டுள்ளார்.

25 நிமிடம் ஓடிய அந்த டேப்பில் பலாத்காரம் செய்யப்பட்டதாகக் கூறும் சிறுவனின் தந்தை ஏற்பாடு செய்த சட்டத்தரணியின் பேச்சு பதிவாகி யிருக்கிறது.

ஜாக்சனை மிரட்டிப் பணம் பறிக்கும் நோக்கத்தோடுதான் புகார் செய்யப்பட்டது என்பதை நிரூபிக்கவே அந்த டேப் வெளியிடப்பட்டிருக்கிறது.

சினிமாப் படம் ஒன்றுக்காக 3.5 இலட்சம் டொலர்களை சட்டத்தரணி ரோத்மன் மைக்கல் ஜாக்சனிடம் கேட்டார். ஜாக்சன் மறுத்தமையால் சிறுவன் மீது பலாத்காரம் புரியப் பட்டதாக ஒரு நாடகத்தை அரங் கேற்றினார் என்று ஜாக்சனின் தரப்பு கூறுகிறது.

டேப்பில் பதிவாகியுள்ள பேச்சில் பலாத்காரம் செய்யப்பட்டது பற்றி சட்டத்தரணி குறிப்பிடவில்லை.

என்றாலும் அந்த டேப் ஒரு பலவீனமான சாட்சிதான்.

அதை வைத்து புகாரை மறுக்க முடியாது.

இதே வேளையில் சிறுவர்களோடு மைக்கல் ஜாக்சனின் நடத்தைகள் குறித்த சர்ச்சைகள் பெரிய பாதிப்பை ஏற்படுத்த வில்லை, என்று ஜாக்சனின் ஆதர வாளர்கள் கூறுகிறார்கள்.

அண்மையில் சிங்கப்பூரில் நடந்த மைக்கல் ஜாக்சனின் இசை நிகழ்ச்சியில் 40 ஆயிரம் இரசிக இரசிகையர் கூடினார்கள். அது மைக்கல் ஜாக்சனின் மவுசு குறையவில்லை, என்பதற்கு சாட்சி என்பது ஆதரவாளர்களது



மைக்கல் ஜாக்சன்

## உலக ரவுண்டப்

**விட்டுக் கொடுத்தால்**

தென் ஆபிரிக்காவில் நிறவெறி ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று உலக நாடுகளெல்லாம் அன்று குரல் கொடுத்தன. ஆனால் அந்நாட்டு வெள்ளை அரசு சிறிதளவேனும் விட்டுக் கொடுக்கவில்லை. மகாத்மா காந்தி அடிகள் தென் ஆபிரிக்காவின் நிற வெறியை எதிர்த்துத் தான் முதல் சத்தி யாக்கிரகப் போராட் டத்தை அந்த நாட்டில் ஆரம்பித்தார். அங்கு பெரும்பான்மையின ராக இருந்த போதும் கறுப்பின மக்கள் சிறு பான்மை வெள்ளை யின மக்களால் வஞ்சிக்கப்பட்டார்கள். அடக்கு முறை அகோரத்தாண்டவ மாடியது.



உலக நாடுகள் விடுத்த கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க மறுத்த பிறிட்டோறிய ஆட்சியை வழிக்கு கொண்டு வர அந்த நாட்டின் மீது பல நாடுகள் பொருளாதாரத் தடையினை மேற்கொண்டன. இந்தியாதான் முதன் முதலில் – 1948ல் தென் ஆபிரிக்காவின் கொடுமைக்கு எதிராக கண்டனக் குரல் எழுப்பியதுடன் பொருளாதாரத் தடையினையும் விதித் தது.

இன்று தென் ஆபிரிக்கா, பெரும் பான்மை கறுப்பு இன மக்களுக்கும் ஆட்சி யில் உரிமை வழங்க வும் சனநாயக ஆட்சி முறைக்கு வழி வகுக் கவும் முன் வந்துள் ளது. இந்தியாவும் அந்நாட்டின் மீது இதுவரை விதித் திருந்த பொருளா தார– வர்த்தகத் தடையினை நீக்கியது.

அத்துடன் அந் நாட்டுடனான இராஜ தந்திர உறவுகளையும் ஏற்படுத்துவதற்கு முன்வந்து விட்டது. ●

**தட்டிக் கொடுக்கிறார்கள்!**

**மறப்போம் மன்னிப்போம்**

## பணக்கார வீட்டுப் பெண்களுக்கு வலை வீசும் வெறியன்!



செல்வந்தர் வீடுகளில் தனியே இருக்கும் பெண்களின் மேல் அவன் கண் வைத்து விடுவான்.

அவர்கள் வீட்டில் தனியே இருக்கும் சமயம் பார்த்து உள்ளே நுழைந்து விடுவான்.

அந்த புத்திசாலித்தனமான காம வெறியன் பற்றிய பயம் அமெரிக்காவில் உள்ள சான் அண்டோனியா பகுதியில் உள்ள பெண்களை வாட்டுகிறது.

நள்ளிரவில் இருந்து அதிகாலை ஆறுமணி வரை அந்த காம வெறியனின் நடமாட்டம் இருக்கிறது.

அவனது அணுகுமுறைகளும் வித்தியாச மானவை. வீட்டுக்குள் புகுந்தவுடன் முதல் வேலையாக ரெலிபோன் இணைப்பை துண்டித்து விடுவான்.

பின்னர் பெண்ணை மிரட்டி படுக்கையறைக்கு அழைத்துச் செல்வான்.

தனது வெறியைத் தீர்த்துக் கொண்டதும் கற்பழிக்கப்பட்ட பெண்ணை அவன் அருகில் இருந்தபடி குளிக்கச் சொல்லுவான்.

முகமூடியுடன் வரும் அந்த காம வெறியன் பெண்ணுடன் உறவு கொள்ளும் போது மட்டும், தனது முகமூடியை கழற்றி வைத்து விடுவான்.

அந்தப் பெண் தன்னை அடையாளம் காணக்கூடாது என்பதற்காக அவளது முகத்தை தலையணைகளால் மூடி விடுவானாம்.

எல்லாம் முடிந்து புறப்படும் போது ஏதாவது தடயங்கள் இருக்கிறதா என்று உற்றுக் கவனித்துவிட்டுத்தான் செல்லுகிறான்.

அந்த வெறியனால் பலாத்காரம் செய்யப்பட்ட ஏழு பெண்கள் பொலிசில் புகார் செய்துள்ளனர். வெட்கத்தில் விஷயத்தை வெளியே சொல்லாதவர்கள் கணக்கில் சேரவில்லை.

புத்திசாலியான காமவெறியனை எப்படி மடக்குவது? அவனது அடுத்த இலக்கு எது? என்பவை புரியாமல் பொலிசார் குழம்பிப் போய் இருக்கின்றனர்.

## ஏவினால் பாய எத்தனை செலவு

நுண்ணிய செயற்திறன் கொண்ட புதிய வகை ஏவுகணைகளை விற்பனைக்கு வைத்துள்ளது.

ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செலுத்தப்படும் வகையில் அந்த ரக ஏவுகணையாக எஸ்.எஸ்.21 என்ற பெயரில் புதிய ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்விலை 17 இலட்சம் டொலர்கள். ஏவுவதற்கான லோஞ்சர் ஒன்றின் விலை 33 இலட்சம் டொலர்கள். இதைக் கொண்டு செல்லும் வாகனத்தின் விலை 7 இலட்சம் டொலர்கள். அதிக பட்சம் 120 கி.மீற்றர் வரை இது பாய்ந்து செல்லும்.

போர் என்றால் செலவுதான்.

## நகர ரவுண்டப்

-ஒற்றன்-

ஒரு வாரம் லீவில் இருந்ததால், இன்னும் ஒரு வாரம் லீவில் இருக்க ஆசை வந்தது.

வலுக்கட்டாயமாக ஆசையைத் துரத்திவிட்டு அலுவலகம் புறப்பட்டோம்.

வெளியே வானம் நல்ல மூடில் இருந்தது. பூமியை கறுப்புப் போர்வைக்குள் இறுக்கி வைத்திருந்தது. காற்றில் ஏறிவந்த குளிர் நம்மையும் இதமாகத் தழுவிச் சென்றது.

இலங்கையின் தலைநகரம் நேற்றுப் பொழிந்த மழையில் தற்காலிகமாக தெருக்களை தொலைத்து விட்டு நின்றது.

பஸ்சில் போவதை விட படகில் போவது வசதி என்று தோன்றியது.

குடையை விரித்து, அதற்கு முன்னர் காற்சட்டையை முழங்கால் வரை மடித்து எங்கே பள்ளம் இருக்குமோ என்று பயந்து அடி மேல் அடி வைத்து நடந்தோம். அல்லது நகர்ந்தோம்.

பெரு மழை பெய்த போதும் பேருந்துகள் நிரம்பி வழிந்தன. சன வெள்ளம்.

வழி இருக்கு. போகப் போகிறீரோ." கேட்டார்.

புரியாமல் பார்த்தோம். வழக்கமான நசுக்கல் சிரிப்பை உதிர்த்தார்.

"உடம்பு பிடித்துவிட சில இடங்கள் இருக்குது தெரியாதோ. அதுதான் மசாஜ் கிளப்புக்கள்."

கண்ணடித்துச் சிரித்தார்.

தகவல் பிடுங்கும் புத்தி அலுப்பை அடித்துப் போட்டுவிட்டு முன்னால் சீறிக் கொண்டு வந்தது.

"நல்லாப் பிடித்து விடுவார்களோ."

கொக்கியைப் போட்டோம். கொழுவிக் கொண்டார்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, சற்றுத் தள்ளிப் போய் நின்று கொண்டார். நாமும் விலகி அவர் அருகே போனோம்.

"சொன்னால் புரியாது காணும். பொக்கற்றுக்குள் எவ்வளவு வைத்திருக்கிறீர்?"

சொல்லத் தயங்கினோம். முறியல் கேஸ். சொன்னால் பொக்கற் காலி.

"விசயம் அறிய வேணும் என்று விருப்பம் இருந்தா, காசு போகும். கவலைப்படக்கூடாது. ரவுண்டப்புக்கு சூடான தகவல்கள் விரல் நுனியிலை வந்து விழும் காணும். விழும்"

தகவல் திரட்டும் ஆவல் தலை உயர்த்த-

"ஐநூறு ரூபா தேறும்"

"அது போதும். வாரும். அந்த ரூட் பஸ்சும் வருகுது பாரும். நேரம் நல்லாயிருக்குது. ஏறும்."

அவரோடு மினி பஸ்சில் தொற்றிக் கொண்டோம். ரிக்கற் செலவு நாமே.

தலைநகரில் உள்ள அந்தப் பிரபல பாடசாலை அருகே அவர் இறங்க நாமும் பின்னால் இறங்கினோம்.

"பார்த்தீரோ பாடசாலைக்கு பக்கத்தில் கூட

## உடல் பிடித்துவிடும் நிலையங்களும் உள்ளே கண்ட காட்சிகளும்

நமது பஸ் வருவதற்காக ஒதுங்கிக் காத்து நின்றோம்.

காதருகில் ஒரு செருமல் சத்தம். திரும்பிப் பார்த்தோம். என்ன ஆச்சரியம் நமது தகவல் வங்கியாளர் தனது பல்லின் வெண்மைகள் சுத்தமாகத் தெரியச் சிரித்தார். அவர் பாவிப்பது எந்த ரகப் பற்பசை என்று கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

"என்ன ஒரு கிழமையா ஆளைக் காணவில்லை."

"லீவு அடிச்சுப் போட்டன்."

"லீவு ஒரு வியாதி மாதிரி. ஒரு முறை எடுத்தா அடிக்கடி எடுக்கச் சொல்லும். உலகத்தில் அதிக லீவு நாள் இலங்கையில் தானாம். படு சோம்பேறி நாடு, என்று யாரோ வழக்குப் போடப் போறதாகவும் கேள்வி."


அம்புலன்ஸ் வண்டிகள் கூவிக்கொண்டு பறந்தன. அடாது மழை பெய்தாலும் விடாது போரும் நடக்கிறது.

இங்கு வானம் மழை பொழிகிறது. வடக்கே வானத்திலிருந்து என்ன பொழிகிறதோ! கவலையோடு நினைத்துக் கொண்டோம்.

"கடுமையாத்தான் அடிபாடு நடக்குது போல இருக்குது. என்ன சோர்வாக இருக்கிறீர்?"

தகவல் வங்கியாளர் கேட்டார். சோர்வு தீர்க்க கடைக்கு ரீ அடிக்க கூப்பிடப் போகிறாரோ என்று பயந்தோம்.

"சோர்வு போக்க உடம்பு அலுப்பு தீர ஒரு



"உடம்பு பிடித்துவிடுவது மட்டுமல்ல உடம்பில் படிந்தும் விடுவார்கள். நாகரிகமான பெயர்ப் பலகைக்கு பின்னால் தொழில் நடக்குது ஐசே."

"என்ன தொழில்?"

"சுத்த டியூப்லைட் ஐ.சே நீர்."

சொல்லிவிட்டு வாய் பொத்திச் சிரித்தார். குலுங்கிச் சிரித்ததால் அவர் தொந்தியும் சேர்ந்து குலுங்கியது.

பருவ விருந்து கொடுக்கும் நிலையம். காலம் கெட்டுப் போச்சு."

சொல்லியபடியே நடந்தார்.

இந்த நேரத்தில் மசாஜ் பற்றிய ஒரு ஜோக் நமக்கு நினைவுக்கு வந்தது.

வைத்திய சாலைக்கு சென்ற அழகான பெண் ஒருத்தி வெள்ளை உடையுடன் காணப்பட்ட இளைஞனை வைத்தியர் என்று நினைத்து விட்டாள். உடனே அவனிடம் சென்று தனக்குத் தோளிலே வலி என்று சொல்லியிருக்கிறாள். "அப்படியா அந்த சோபாவில் சாய்ந்துக் கொள். மசாஜ் செய்து விடுகிறேன்" என்றான் இளைஞன். அவள் கேட்டாள் "தோளில் தானே வலி என்று சொன்னேன். நீங்கள் மசாஜ் செய்வது அங்கில்லையே." அதற்கு இளைஞன் சிரித்துக் கொண்டே சொன்ன பதில்,"நான் டாக்டர் அல்ல என்பதால் எந்த இடத்தில் வலித்தால் எந்த இடத்தில் மசாஜ் செய்வது என்பது தெரியாது." "அப்படியானால் சரிதான்" என்றாள் அழகி.

"அது தான் இடம்." என்றார் நமது தகவல் வங்கியாளர். அவர் காட்டிய கட்டிடம். வெள்ளை வர்ணம் பூசப்பட்டு கண்ணியமான தோற்றத்துடன் காட்சி தந்தது. அருகே செல்ல வாட்டசாட்டமான சிலர் நம்மை மேலும் கீழும் பார்த்து முறைத்தனர்.

ஒரு அடி போதும். உயிர் போகும். நமக்கு உள்ளே உதறல் எடுத்தது. ஓடி விடலாம். ஓடினால் சந்தேகப்பட்டு துரத்தி துணி துவைப்பது போல் அடித்து, காயப் போட்டு விடுவார்கள்.

"பயப்பட வேண்டாம். காவலுக்கு இருக்கிற அடியாட்கள், பிரச்சனை வந்தா மட்டும்தான் கை நீட்டுவார்கள்."

மெல்லச் சொன்னார். உள்ளே நுழைந்தோம். எதற்கும் இருக்கட்டும் என்று ஒரு தடியனைப் பார்த்து அசட்டுச் சிரிப்பை கொடுத்தோம். பாவி முறைத்தான். சிரிக்கக்கூடாது என்று சபதமோ தெரியவில்லை.

சுத்தமான நளினமான ஆங்கில உச்சரிப்பில் "உள்ளே வாருங்கள்." என்றாள்.

கவர்ச்சியான பெண். 20 தான் வயது இருக்கும். மார்புகள் பயமுறுத்தினவே தவிர, முகம் முழுக்க பல்லாகச் சிரித்தாள்.

"ஹலோ" என்றார் தகவல் வங்கியாளர். அவளும்,

"ஹலோ" என்றாள். எத்தனை போத்தல் தேன் பாவிக்கிறாள் என்று கேட்டிருக்கலாம்.

தாண்டிப் போனோம். உள்ளே விசாலமான ஹோல்.

நமக்கு எக்கச்சக்கமான அதிர்ச்சி, கூடவே வெட்கம்.

எண்ணிப் பார்க்கவில்லை என்றாலும் 20-22 பெண்கள் இருக்க வேண்டும்.

இளமையாக இருந்தார்கள். உரித்து விடுவது போலப் நம்மையே பார்த்தார்கள்.

அடுத்து நடந்ததுதான் சுவாரசியம். அது அடுத்த வாரம்.

(மீதி அடுத்த வாரம்)

## வரவேற்றன வண்ண பலூன்கள்! வசைமாரி பொழிந்தன அழுகிய முட்டைகள்!!



மேற்காசிய பிராந்தியத்தில் அமைதி திரும்புவதற்கு இஸ்ரேலின் திட்டம் பற்றி பள்ளிக் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுவதற்காக இஸ்ரேல் பிரதமர் ஜெருசலம் வந்தார்.

அரேபியர்கள் அவருக்கு மலர்ச் செண்டு கொடுத்தனர்.

எதிர்ப்பு தெரிவிக்கும் யூதர்கள் அழுகிய முட்டைகளை வீசினார்கள்.

பிரதமர் ராபினுக்கு பள்ளிக் குழந்தைகள் வண்ண பலூன்களையும், இஸ்ரேல் கொடிகளையும் அசைத்து குதூகல வரவேற்புக் கொடுத்தனர்.

உள்ளே வரவேற்புக் கோஷம் கேட்டபடி இருக்க வெளியே ராபினை வசைமாரி பொழிந்து எதிர்பாளர்கள் கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அலசுவது - இராஜதந்திரி

# சிங்களத் தலைவர்களை சிறைமீட்க லண்டன் சென்ற சேர்.பொன். இராமநாதன்!

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னையை காத்திரமான அரசியல் நடவடிக்கைகள் மூலம் தீர்க்க முடியுமென்றிருந்த நம்பிக்கை நலிவடைய ஆரம்பித்துள்ளது.

ஆரோக்கியமான அரசியல் நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படாத இத்தருணத்திலேயே இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் திரு. ஹொவார்ட் டெப்பென்ஹாம் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஸ்தானிகர் ஹொவார்ட் டெப்பென்ஹாம், அண்மையில் அவுஸ்திரேலியாவில் வர்த்தகப் பிரமுகர்கள் சிலர் மத்தியில் உரையாற்றிய போதே, இலங்கை இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வின் தேவையைக் குறிப்பிட்டிருந்தார். கூடவே இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தைகளில் நேரடியாக ஈடுபட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

இன்றைய இலங்கையின் அரசியலை அவதானிக்கும் போது நாட்டின் பிரதான பிரச்னையாக விளங்கும் வடக்கு-கிழக்கு சர்ச்சையை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளும் வெறும் கண்துடைப்பாகவே இருந்துள்ளதை நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது.

1991ம் ஆண்டில் பெரும் பிரசாரத்துடன் பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்னைக்கான தீர்வைக்காணும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. இத் தெரிவுக்குழுவிடம் இலங்கையின் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் தமது தீர்வு யோசனைகளை முன்வைத்திருந்தன.

ஆனால் தெரிவுக்குழுவை உருவாக்கியிருந்த ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ, அல்லது அத்தெரிவுக் குழுவுக்குத் தலைமை ஏற்றிருந்த திரு. மங்கள முனசிங்கவின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோ தீர்வு யோசனைகள் எதனையும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் முன்வைத்திருக்கவில்லை.

எனவே இலங்கையின் இரு பிரதான தேசியக் கட்சிகளாக விளங்கும் ஆளுங் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமது தீர்வு யோசனைகள் எதனையும் முன்வைக்காத நிலையிலேயே பாராளுமன்றத் தெரிவுக்குழு விரைவில் தனது இறுதி அறிக்கையை வெளியிடவிருக்கின்றது.

சில காலத்துக்கு முன்னர் பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது நடவடிக்கைகள் குறித்து இடைக்கால அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இந்த இடைக்கால அறிக்கை, வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாகப் பாராளுமன்றத் தெரிவுக்குழு கொண்டுள்ள நிலைப்பாட்டை விளக்குவதாக இருந்தது.

ஆண்டாண்டு காலமாக வடக்கு-கிழக்கு பிரச்னையில் பல இழப்புக்களையும், அவஸ்தைகளையும் அனுபவித்த தமிழ் அரசியல் கட்சிகள் தமது அனுபவங்களை மையமாக வைத்து சமர்ப்பித்திருந்த யோசனைகளைப் புறக்கணித்துவிட்டு, அரசியலில் கடுகளவில் தானும் முக்கியமற்றிருந்த ஒரு சிலரின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாகவே அந்த இடைக்கால அறிக்கை விளங்கியிருந்தது.

இதனையடுத்து தமிழ் அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்தும் வெளி நடப்புச் செய்திருந்தன. இவ்வெளி நடப்பையடுத்து பாராளுமன்றத் தெரிவுக்குழு, தமிழ்க் கட்சிகளின் அதிருப்திக்கான காரணத்தை அறிய முன்வந்திருக்கவில்லை. அத்துடன் அவற்றின் எதிர்பார்ப்புக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் ஒரு மாற்றுத் திட்டத்தையோ உருவாக்க முன்வரவில்லை.

இந்நிலையிலேயே தற்போது தனது இறுதி அறிக்கையையும் வெளியிட பாராளுமன்றத் தெரிவுக்குழு தயாராகி வருகின்றது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆரம்பிக்கப்பட்டிருந்த நாட்களில் அதன் நடவடிக்கைகள் குறித்து தமிழ் பேசும் மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

தமிழ் அரசியல் கட்சிகள் ஓர் அரசியல் தீர்வில் நம்பிக்கை கொண்டவையாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்து கொண்டிருந்தன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான திரு.எஸ். தொண்டமான் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தீர்வு யோசனைகளைச் சமர்ப்பிப்பதில் முன்னின்றிருந்தார்.

திரு.தொண்டமான் தமது யோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் தாம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தார்.

ஆனால் திரு.தொண்டமானின் யோசனைகளை உதாசீனம் செய்யும் பாணியிலேயே தென்னிலங்கையின் அரசியலாளர்கள் நடந்து கொண்டிருந்ததுடன், தொண்டாவின் யாழ்ப்பாண விஜயம் குறித்தும் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டிருந்தனர்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத் தொடர்கள் நடந்து கொண்டிருந்த தறுவாயிலேயே தென்னிலங்கையிலிருந்தும் பல சமய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் வடக்கிற்குச் சென்றிருந்தனர்.

இச்சமய ஸ்தாபன பிரதிநிதிகளில் தென்னிலங்கையின் பிரதான கிறிஸ்தவப் பிரமுகரான பேராயர் கென்னத் பெர்ணாண்டோவின் யாழ் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியிருந்தது.

இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவரான திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனையும் சந்தித்து உரையாடியிருந்தார்.

இவர் தவிர பௌத்த மத பிக்குமார்கள் அடங்கிய குழுவொன்றும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, புலிகளின் முக்கிய பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது.

இவ்வாறு வடக்கிற்கு விஜயம் செய்திருந்த தென்னிலங்கையின் நல்லெண்ணக் குழுக்கள் அனைத்துமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக் கூடிய சாதகமான சூழ்நிலைகள் காணப்படுவதாகவே அறிவித்திருந்தன.

# இலங்கையர்களின் கலாசாரங்களை உலகறியச் செய்த கலாயோகி ஆனந்த குமாரசுவாமி!



ஆனால் பாராளுமன்றத் தெரிவுக் குழு வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து ஒரு முற்றுமுழுதான ஆய்வினை மேற்கொள்ளாது, சர்ச்சைக்குரிய பிரதேசங்களுக்கும் சென்று அங்குள்ள நிலைமையை நாடிபிடித்தறிய முன்வராத நிலையில் இன்று இறுதி அறிக்கையையும் வெளியிடத் தயாராகியிருக்கின்றது.

வடக்கு-கிழக்கு நிலவரத்தின் காரசாரமான போக்கைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத தென்னிலங்கையின் அரசியல் கட்சிகள், மற்றும் வடக்கு- கிழக்குப் பிரச்சனைக்கு ஓர் அரைகுறைத் தீர்வைத் திணிப்பதில் ஆர்வங் கொண்டுள்ள பேரினவாத சக்திகள், பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கையை ஆவலுடன் எதிர்பார்க்கலாம்.

ஆனால் தமிழ்க் கட்சிகள் இந்த இறுதி அறிக்கை, வடக்கு-கிழக்கு நிலவரத்தைத் தீர்க்கும் வகையில் எதுவித ஆரோக்கியமான அணுகு முறைகளையும் கொண்டிருக்கப் போவதில்லை என்ற அபிப்பிராயத்தைக் கொண்டவையாகவே காணப்படுகின்றன.



வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த ஒரு பிரதேச சுயாட்சி முறையையே தமிழ்க்கட்சிகள் தமது தீர்வு யோசனைகளில் குறிப்பிட்டிருந்தன. ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழு இந்த அடிப்படைக் கோரிக்கையைப் புறக்கணித்த நிலையிலேயே தனது `இறுதி முடிவை வெயிடவுள்ளது.

எனவே பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கையானது, இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் மூலம் ஒரே மாகாணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த வடக்கு-கிழக்குப் பிரதேசங்களை, இரு வெவ்வேறு பகுதிகளாகப் பிரிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்ததைத் தற்போது தெளிவாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் எக்காலத்திலும் பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களுக்கெதிராகவோ, அல்லது ஏனைய இனத்தவர்களுக்கெதிராகவோ துவேச உணர்வுகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் உயிர் வாழ்ந்த தமிழறிஞர்கள், மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் ஆகியோர் இன, மத ரீதியிலான குறுகிய வட்டத்துக்குள் தம்மை வைத்திருக்கவில்லை.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அரசியல், கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளில் பிரகாசித்த தமிழ்த் தலைவர்கள் முழு இலங்கையையும் தமது தாயகமாகக் கருதி சிங்கள இனத்தவர்களுடனும், ஏனைய சமூகத்தவர்களுடனும் அன்னியோன்யமாக வாழ்ந்ததுடன், நாட்டின் நல்ல வழிகாட்டிகளாகவும் விளங்கியிருந்தனர்.

1915ம் ஆண்டில் இலங்கையில் முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே மத ரீதியிலான கலவரம் மூண்டிருந்தது. அப்போது இலங்கையை ஆட்சி செய்த பிரிட்டிஷ்காரர்கள், கலவரத்துக்கு மூல காரணமாக இருந்தவர்களை சிறையிலடைத்திருந்தனர்.

சிறை வைக்கப்பட்டவர்களில் திரு. டி.எஸ்.சேனநாயக்கா, எவ்.ஆர். சேனநாயக்கா உட்பட முக்கிய சிங்களத் தலைவர்கள் பலரும் அடங்கியிருந்தனர்.

இலங்கையின் ஆட்சியதிகார விடயங்களில் கடும் போக்கைக் கடைப்பிடித்த பிரிட்டிஷாரிடம் சிறை வைக்கப்பட்ட சிங்களத் தலைவர்களை விடுதலை செய்யக் கோருவதில் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் பெரும் பங்காற்றியிருந்தார்.

சேர்.பொன் இராமநாதன் சிங்களத் தலைவர்களின் விடுதலை வேண்டி, கொழும்பிலிருந்து லண்டனுக்கு அன்று பயணஞ் செய்திருந்தார்.

முதலாவது உலக யுத்தம் மூண்டிருந்த காலம். கடலில் போர்க்கப்பல்களின் கெடுபிடிகள் பெருமளவில் காணப்பட்டிருந்தன.

ஆனால் சேர். பொன் இராமநாதன் இத்தகைய அபாயகரமான சூழ்நிலைகளுக்கெல்லாம் முகங் கொடுத்தவராகவே, சிங்களத் தலைவர்களை சிறைமீட்கும் வகையில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களைச் சந்திக்க லண்டன் சென்றிருந்தார்.

லண்டனில் சேர்.பொன் இராமநாதன் தமது முயற்சியில் வெற்றி கண்டிருந்தார். இதனையடுத்து அவர் கப்பல் மார்க்கமாக தாயகம் திரும்பி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த போது சிறையில் இருந்து விடுதலையான சிங்களத் தலைவர்கள், அவருக்குப் பெரும் வரவேற்பை வழங்கியிருந்தனர்.

துறைமுகத்தில் சேர். பொன் இராமநாதனை ஏற்றிச் செல்ல அவரது குதிரை வண்டி தயாராக நின்றிருந்தது.

ஆனால் திரு.டி.எஸ்.சேனநாயக்கா உட்பட அன்று துறைமுகத்தில் கூடியிருந்த சிங்களத் தலைவர்கள் பலரும் சேர்.பொன் இராமநாதன் ஏறியிருந்த குதிரை வண்டியைச் சூழவர நின்று, வண்டியில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை அப்புறப்படுத்திய பின்னர், தாமாகவே அந்த வண்டியை இழுத்துச் சென்று தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்திருந்தனர்.

இந்த நடவடிக்கையானது தமிழ், சிங்களத் தலைவர்கள் பரஸ்பரம் கொண்டிருந்த நல்லுறவைப் புலப்படுத்தியிருந்ததுடன், இலங்கையரின் நலனில் தமிழ்த் தலைவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் கொண்டிருந்த அக்கறையையும் வெளிக்காட்டியிருந்தது.

சேர்.பொன் இராமநாதன் மட்டுமல்லாது, அவரது சகோதரரான சேர். பொன் அருணாசலமும் முழு இலங்கையின் நலனில் அக்கறை கொண்டவராகவே காணப்பட்டார்.

இவர்கள் தமது நாட்களில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் முன்பாக நிகழ்த்திய உரைகள், மற்றும் பிரிட்டிஷ் கல்விமான்கள், சட்ட அறிஞர்கள் ஆகியோருடன் மேற்கொண்டிருந்த சந்திப்புக்கள் என்பவற்றின் போது இலங்கையின் ஒருமைப் பாடு, தன்னாதிக்கம் உட்பட இலங்கையரின் சுதந்திரத்தையும் வலியுறுத்தியிருந்தனர்.

இது தவிர சேர்.பொன் இராமநாதனின் நெருங்கிய உறவினரான கலாயோகி ஆனந்த குமாரசுவாமி இலங்கையர்களின் கலை, பண்பாடு, கலாசாரம் என்பவற்றை உலகறியச் செய்வதில் பெரும் பங்காற்றியிருந்தார்.

ஒரு கலாரசிகனாக, ஆராய்ச்சியாளனாக, வரலாற்றாசிரியனாக கலாயோகி ஆனந்த குமாரசுவாமி இலங்கையின் அனைத்துப் பகுதிக்கும் பிரதேச வேறுபாடின்றி விஜயம் செய்திருந்தார்.

சிங்கள மக்களின் வாழ்க்கைமுறை, அவர்களது கலையம்சம் மிக்க படைப்புக்கள் என்பற்றை ஆராய்ந்து கட்டுரைகள் பலவற்றையும் வெளியிட்டிருந்ததுடன், இலங்கையர்களின் கலைத்திறனை சர்வதேச ரீதியிலும் அறிமுகப்படுத்தியிருந்தார்.

இத்தகைய தமிழ் பெரியார்கள் தமது எண்ணத்திலோ அல்லது செயலிலோ எதுவித இன, மத, பிரதேச வேறுபாடுகளையும் கொண்டிராதவர்களாக, முழு இலங்கையர்களினதும் அரசியல், சமூக, வாழ்க்கை முறைகளில் பெரும் பங்காற்றியிருந்தனர்.

பிரிட்டிஷாரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெறும் வகையிலும் இலங்கையின் ஏனைய சமூகங்களின் தலைவர்களுடன் சேர்ந்து காலனித்துவ ஆட்சிக்கெதிரான போராட்டங்களையும் நடத்தியிருந்தனர்.

ஆனால் இலங்கை ஒரு சுதந்திர நாடாக மாறிய பின்னரே இலங்கையின் அரசியலில் இன, மதத் துவேசங்கள் தலைவிரித்தாட ஆரம்பித்தன.

தமது சொந்த அரசியல் விருப்பு, வெறுப்புகளுக்கு தமிழர்களையே சிங்களத் தலைவர்கள் பலிக் கடாக்களாக்கியிருந்தனர்.

தெளிந்த நீர்த்தடாகம் போலிருந்த இலங்கையின் சமூக அமைப்பில், சிங்கள மொழியை வலியுறுத்தியும், தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை ஊடறுத்தும், சிங்கள ஆட்சியாளர்கள் அரசியல் ரகளையை ஆரம்பித்திருந்தனர்.

இந்த ரகளை சிங்கள மொழியின் மீதோ, அல்லது பௌத்த மதத்தின் மீதோ அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் வெளிப்பாடாக விளங்கியிருக்கவில்லை. குறுகிய அரசியல் இலாபங்களை மையமாகக் கொண்டதாகவே அவர்களது இந்த இன, மதத்துவேசங்கள் விளங்கியிருந்தன.

இதனையடுத்து அப்பாவிச் சிங்கள மக்களும், தமிழருக்கெதிராக போர்க்கொடி உயர்த்தலானார்கள். இன்று இப் போர்க்கொடி பட்டொளி வீசிப் பல்லாயிரக்கணக்கானவர்களைப் பலியெடுத்துள்ள போதிலும், ஆட்சியாளர்கள் கொடிய இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் எதுவித அக்கறையுமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். தமது பதவிகளைத் தப்பவைத்து வரட்டுத்தனமான கௌரவங்களைப் பேணுவதில் மட்டும் ஆர்வம் காட்டுபவர்களாக அவர்கள் விளங்குகின்றனர்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கையும் தென்னிலங்கை அரசியலாளர்கள் ஒரு பூரணமான தீர்வில் அக்கறை கொண்டிராததையே வெளிப் படுத்துவதாக இருக்கின்றது!

இந்நிலையிலேயே அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் திரு. ஹொவார்ட் டெப்பென்ஹாம், அரசும் புலிகளும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

அவரது இந்த வலியுறுத்தல் காலமறிந்து வெளியிடப்பட்டதாகவே காணப்படுகின்றது.

ஏனெனில் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதை விட இராணுவ நடவடிக்கைகளைத் தொடருவதிலேயே அரசாங்கமும், மறுபுறத்தே புலிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.



வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு புதிதாகப் படைகளில் சேர்க்கப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கில் அனுப்பி வைக்கப்பட்டு மோதல்கள் மும்முரமடைந்திருந்தன. அத்துடன் புதிய பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவும், ஏனைய சிரேஷ்ட இராணுவ உயரதிகாரிகளும் யுத்தப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து படையினருக்கு உற்சாகமூட்டியிருந்தனர்.

வடக்கே மோதல்கள் உக்கிரமடைந்த நிலையில் இரு தரப்பிலும் இழப்புக்கள் பாரதூரமாகவே இருக்கின்றன. பொதுமக்களும் பலத்த இழப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

போர்க்குணத்தின் தீவிரத்தினால் கடந்த காலங்களில் இராணுவத் தலைமைக்கு மட்டுமல்ல, நாட்டின் தலைமைக்கும் பலத்த அடி விழுந்த நிலையே காணப்படுகின்றது.

எனவே அவுஸ்திரேலிய ஸ்தானிகர் கோரியிருப்பதைப் போல அரச தரப்பினரும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் ஆயுதங்களைக் கைவிட்டு, ஆரோக்கியமான அரசியல் நடவடிக்கைகளில் குதிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

இல்லையேல் நாட்டின் அமைதிக்கு குறிதவறாது குந்தகம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## கதையாக ஒரு அட்வைஸ்

# குழந்தைகளும் குழந்தைகளும்

—ராஜி அக்கா—

ஒரு தனவந்தர் வீட்டுக் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. ஐந்து வயதும் நிரம்பாத பெண் குழந்தைகள்.



ஒரு குழந்தை தன் கால்களை நீட்டி அமர்ந்தது. அதன் மடி மீது ஒரு பொம்மை கிடத்தப்பட்டது. அருகே இருந்த மற்றொரு குழந்தை ஒரு சிறு பாத்திரத்திலிருந்த தண்ணீரை ஒரு சிறு கோப்பையிலெடுத்து பொம்மை மீது ஊற்றியது. இருவருமாகச் சேர்ந்து சோப்புப் போடுவது போன்ற பாவனைகளையெல்லாம் செய்தனர். உடலைத் துவட்டினர், பவுடர் போட்டு, பாலூட்டி, தூங்குவதற்காக தாலாட்டும் பாடி அருகே படுக்க வைத்தனர்.

அவர்களுக்கு அவர்கள் தாய்மார் செய்த அத்தனை பணிகளையும் அந்தச் சிறு குழந்தைகள் பொம்மைக்குச் செய்தனர்.

இந்த விளையாட்டை சற்றுத் தொலைவில் இருந்து கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள் மற்றுமொரு சிறுமி. இதே வயது தான் அவளுக்கும். ஆனால் இவளை அந்தச் செல்வந்தர் வீட்டுக் குழந்தைகள் சேர்த்து விளையாடமாட்டார்கள். இவள் குடிசை வாசி. இவள் விளையாடுவதற்கு அத்தகைய பொம்மையும் கிடையாது. ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

குடிசை வாழ் குழந்தைக்கு ஒரு குட்டித் தங்கை. அவளும் பிறந்து சில மாதங்களே ஆகியிருந்தன. அன்று, குழந்தைக்குப் பால் கொடுத்துப் படுக்க வைத்துவிட்டு, தங்கையை பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு தாயார் வேறோர் அலுவலுக்காக எங்கோ சென்றுவிட்டாள்.

அக்கா குழந்தையின் ஆசை நிறைவேற அன்று நல்லதொரு சந்தர்ப்பம். தண்ணீர் இருந்தது. படுத்துக் கிடந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டு தண்ணீர் பாத்திரத் தடிக்குக் கொண்டு சென்றாள். குழந்தையை மடியில் கிடத்தினாள். தண்ணீரை ஒரு சிறு பாத்திரத்தால் அள்ளி அள்ளி ஊற்றினாள். குழந்தை கதறி அழுதாள். தனக்குத் தெரிந்த அரவணைப்புக் கதைகளைக் கூறிய வண்ணம் சோப்புப் போட்டாள், துடைத்தாள், பவுடர் போட்டாள். குழந்தையை அப்புறமும் இப்புறமும் புரட்டி சட்டையும் போட்டாள். இவள் தாலாட்டுப் பாட வேண்டிய அவசியமே இல்லாமல் குழந்தை தூங்கிவிட்டது. ஆமாம்! நீண்ட தூக்கம்-இனிமேல் எழுந்திருக்க முடியாத தூக்கம் அது!

இந்தியாவின் ஒரு மூலையில் நடந்த இந்த உண்மைச் சம்பவம் இது. சிறு கதை வடிவிலும் பிரசுரமானது.

இக்கதையை நமது தாய்மார் படித்து இதிலுள்ள படிப்பினையை உணர்ந்து கொள்ள வேண்டுமென்றே இதனைத் தருகிறோம்.

நமது தாய்மார்கள் சிலர் குழந்தைப் பருவம் மாறாத சிறுவர்களிடம் தமது சிறு குழந்தைகளை ஒப்படைத்து விட்டு எங்காவது சென்று விடுவார்கள். அல்லது வேறு பல காரியங்களில் ஈடுபடுவார்கள். விபரமறியாத குழந்தைகள் இயல்பான 'தாய்மைத் தனத்தில்' எதையாவது செய்து விடுவார்கள். இதனால் பால் குடிக்கு ஏதாவது அபாயம் ஏற்படலாம்.

குழந்தைகள் அழுதால் பசியால் அழுகிறது என்று, தாய்ப்பால் மட்டுமே பருகும் அக்குழந்தையின் வாயில் தான் உண்ணும் சோற்றுப் பருக்கைகளையே ஊட்டிவிடக் கூடும். தலைவலிக்கோ தடுமலுக்கோ தாயோ அல்லது பெரியவர்களோ பாவிக்கும் மருந்தை அந்தச் சின்னஞ் சிறு சிசுவுக்குப் பூசி விடவோ வாயிலூட்டி விடவோ கூடும்.

இதற்காகத்தான் சிறு குழந்தைகளுக்கு எட்டாத இடங்களில் மருந்துகளை வைக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுவார்கள். கடைகளில் வாங்கும் மருந்துகளின் மீதும் எச்சரிக்கை பொறிக்கப்பட்டிருக்கும்,

சிறு குழந்தைகளையுடைய தாய்மார் தங்கள் சிசுக்களைக் கண்காணிக்கும் பொறுப்பினை எந்தச் சந்தர்ப்பத்திலும் தங்கள் மூத்த-குழந்தைகளிடம் ஒப்படைத்து விடாமல் கவனமாக இருத்தல் வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

-சுவையோடு தருவது சுகந்தினி-

## கட்லட்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| உ.கிழங்கு- | 1/2 கிலோ |
| வெங்காயம்- | 50 கிராம் |
| பச்சை மிளகாய்- | 50 கிராம் |
| ரின் மீன்- | 500 கிராம் (ரின்) |
| றஸ்க் தூள்- | 200 கிராம் |
| முட்டை- | 2 |
| மிளகுதூள், உப்பு- | தேவையான அளவு. |
| எண்ணெய்- | தேவையான அளவு. |

**செய்முறை:**

உருளைக்கிழங்கை அவியவிட்டு, பின் தோல் நீக்கி சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளுங்கள். வெங்காயம், பச்சை மிளகாய், ஆகியவற்றையும் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைக்கவும்.

ரின் மீன் உடைத்து அதனுள் இருக்கும் நீரை வெளியேற்றவும்.

அதன் பிற்பாடு மேலே கூறிய மூன்றையும் ஒன்றாய் ஒரு பாத்திரத்தில் இட்டு, அதனால் சுவைக்கேற்ப உப்பு உறைப்புக்கேற்ப மிளகுத் தூளை போட்டு நன்றாக பிசைந்து வைக்கவும். சிறு சிறு உருண்டைகளாக உருட்டி ஒரு பீங்கானில் வையுங்கள். (இதனை விரும்பிய வடிவில் செய்யலாம்) பின்பு முட்டை வெள்ளைக் கருவை எடுத்து நன்றாக நுரை எழும்பும் வரை அடித்துக் கொள்ளவும்.

றஸ்க் தூளையும் ஒரு பீங்கானில் இடவும்.

உருண்டைகள் ஆக்கிய கலவையினை முட்டையுள் தோய்த்து றக்ஸ் தூளில் நன்றாகப் பிரட்டி எடுத்து கொதிக்கும் எண்ணெயில் போட்டு பொன்நிறமாக பொரித்து எடுக்கவும்.

## இடியப்ப பிரியாணி

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| அவித்த இடியப்பம்- | 25 |
| கரட்- | 500 கிராம் |
| உ.கிழங்கு- | 500 கிராம் |
| கோவா- | 500 கிராம் |
| சோயா மீற்- | 1/4 பக்கட் |
| மிளகாய்த் தூள்- | 1 மேசைக்கரண்டி |
| பெரிய வெங்காயம்- | 5 |
| பச்சை மிளகாய்- | 5 |

எண்ணெய் அல்லது மாஜரின் தேவைக்கேற்ப, குடுகு சின்னச் சீரகம், கறிவேப்பிலை, உப்பு ஆகியவை தேவைக்கேற்ப.

**செய்முறை:**


இடியப்பத்தை சிறிய துண்டுகளாக்கிக் கொள்ளவும். கரட், உ.கிழங்கு, கோவா மூன்றையும் சுத்தம் செய்து, சிறுசிறு துண்டுகளாக வெட்டி அதனுள் அளவாக உப்பு மிளகாய்த்தூள் ஆகியன சேர்த்துக்கலந்து பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.

சோயா மீற்றை சிறிது நேரம் வெந்நீரில் ஊறவிட்டு நீரைப் பிழிந்தபின் சிறு சிறு துண்டுகளாக்கி பொரிக்கவும். பின்பு வெங்காயம், பச்சைமிளகாய் போன்றவற்றைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி மாஜரீனில் வதக்கவும்.


அரைப்பதம் வெந்ததும் கடுகு, சின்னச்சீரகம், கறிவேப்பிலை ஆகியவற்றை போட்டு மீண்டும் 5 நிமிடம் வதங்க விடவும். பின்னர் பொரித்து வைத்த மரக்கறிகளையும் சோயா மீற்றையும் தூளாக்கிய இடியப்பத்தையம் போட்டு நன்றாக கிளறவும். கிளறும்போது சிறிதளவு மாஜரீனும் சேர்க்கவும். 10 நிமிடம் வரை அடுப்பில் வைத்த பிற்பாடு இறக்கி ஆறியதும் பரிமாறலாம்.

லேடீஸ் ஸ்பெசல்

## வீட்டுக் குறிப்புகள்



எண்ணை பிசுக்கான பாத்திரமோ அல்லது முட்டை, இறைச்சி போன்ற அசைவ உணவுகளைச் சமைத்த பாத்திரமோ எதுவாக இருந்தாலும், கழுவுவதற்கு முன் அந்தப் பாத்திரத்தில் வெந்நீர் ஊற்றி, சிறிதளவு உப்பையும் போட்டு வையுங்கள். பிறகு வழக்கம் போல் தேய்த்துக் கழுவி விடுங்கள். பாத்திரம் சுத்தமாக, பளபளவென்று ஆகி விடும்.



கையுறை அணிந்து வேலை செய்யும் பழக்கமுள்ளவர்கள், ஒரு சின்னத் தொல்லையை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். கையுறைகளில் வலது கையுறை மட்டும் அடிக்கடி கிழிந்து போய் விடுவதுதான் அது. ஒவ்வொரு முறையும் புதியதாக வாங்க முடியாதல்லவா? இதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால் இரண்டு இடதுகையின் உறைகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஒன்றை உள்ளிருக்கும் பகுதி வெளியில் வரும்படி வெளிப்பக்கமாகத் திருப்பி விடுங்கள். இப்போது இந்தக் கையுறையை வலது கையில் போட்டுப் பாருங்கள் சரியாக இருக்கிறதுதானே!



குழந்தைகளுக்குச் சட்டையோ, பாவாடையோ, தைக்கும்போது அடிப் பகுதியில் நிறைய துணி இருக்கும்படி வெட்டிக் கொள்ளுங்கள். பிறகு இரண்டு மடிப்பாகவோ, அகலமாகவோ மடித்துத் தைத்து விடுங்கள். குழந்தை உயரமாக வளர்ந்தாலும் சட்டையில் இருக்கும் மடிப்பைப் பிரித்து நீளமாக்கிக் கொள்ள முடியும்.



வீட்டிற்குப் புதிதாகப் பெயின்ட் அடிக்க விரும்புகிறீர்களா? எந்தக் கலர் பெயின்டை தேர்ந்தெடுப்பது என்று தடுமாற்றமாக இருக்கிறதா? உங்களுக்குப் பிடித்தமான வெவ்வேறு நிறமுள்ள சாம்பிள் பெயின்டை வாங்கிக் கொள்ளுங்கள். ஒரு வெள்ளை பலகையைத் தயார் செய்து கொள்ளுங்கள். அதில் நீங்கள் வாங்கி வந்துள்ள பெயின்டைப் பூசி அறையில் வைத்துப் பாருங்கள். அந்த அறைக்கு எந்த நிற பெயின்ட் பொருத்தமாக இருக்கிறது என்பது இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். அதன் பிறகு தேவையான பெயின்டை வாங்கிக் கொடுத்துப் பூசச் சொல்லலாம்.

•

அயன்பண்ணும் போது துணி எரிந்து, அயன் பொக்ஸில் ஒட்டியுள்ளதா? அயன் பொக்ஸ் நல்ல சூட்டில் இருக்கும் போது பனடோல் போட்டுத் தேய்த்து விடுங்கள். ஒட்டியுள்ள துணி இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

•

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.


சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

# நீங்களும் தைக்கலாம்.

## ஆண் குழந்தைகளுக்கான பள்ளிச் சீருடை (Shirt)

சுகிர்தா நீர்கொழும்பு


| | |
|---|---|
| பின் சட்டை அகலம் | 17 1/2"+1" = 18 1/2"÷ = 9 1/4" |
| பின் சட்டை நீளம் | 20"+2"=22" |
| பின் கழுத்து அகலம் | 2" |
| பின் கழுத்து இறக்கம் | 1" |
| தோள் நீளம் | 14"÷2=7" |
| முன் சட்டை அகலம் | 9"+1/4"+1 1/2"= 10 3/4" |
| முன் சட்டை நீளம் | 18"+2"=20" |
| முன் கழுத்து அகலம் | 2" |
| முன் கழுத்து இறக்கம் | 2" |
| கை நீளம் | 6"+1/2"+1 1/2"=8" |
| கை அகலம் | 12"+1"=13÷2= 6 1/2" |
| நுனிக்கைச் சுற்றளவு | 10"+1"=11"÷2= 5 1/2" |
| பக்கப் பொருத்து நீளம் | 5"+ 1 1/2"= 6 1/2" |
| கொலர் நீளம் | 13 1/2"+1" = 14 1/2"÷2= 7 1/4" |
| கொலர் அகலம் | 3" |





படத்தில் உள்ளவாறு A யிலிருந்து 2" E வரையும் A யிலிருந்து 1" F வரையும் குறித்து E,Fஐ இணைத்துப் பின் கழுத்து வரைக. E யிலிருந்து 5"G வரையும் B யிலிருந்து 6"H வரையும் குறித்து G,Hஐ இணைத்துக் கை வரைக.

20" நீளமும் 10 3/4" அகலமும் கொண்ட துணியை எடுத்துக் கொள்க. படத்தில் உள்ளவாறு திறப்புக்காக 1 1/2" உள்விட்டு மடித்துக் கொள்க. A யிலிருந்து 2" E வரையும் A யிலிருந்து 2" F வரையும் குறித்து E,Fஐ இணைத்து முன் கழுத்து வரைக. பின் உடம்புக்கு உள்ளது போலவே E யிலிருந்து 5"G வரையும் B யிலிருந்து 6" H வரையும் குறித்து G,Hஐ இணைத்துக் கை வரைக.


B யிலிருந்து E வரை 1 1/2" குறித்து




AEஜ வளைவாக வரைந்து குறித்துக் கொள்க. C யிலிருந்து 1" உள் நோக்கி F வரை குறித்து E,Fஐ இணைத்துக் கொள்க.




3" அகலமும் 14 1/2" நீளமுமான துணியை எடுத்து 7 1/4" நீளமாக இரண்டாக மடித்து A,B.C,D எனப் பெயரிடுக. A யிலிருந்து 1/4" உள்நோக்கி E வரை குறித்துக் கொள்க. Eயிலிருந்து C வரை கொஞ்சம் வளைவாக வரைந்து கொள்ளவும். C யிலிருந்து F வரை 3/4" ம் Fலிருந்து G வரை 3/4"மும் அளந்து குறித்துக் கொள்க. G,Bஐ இணைத்து வரைக.




கொலர் தைக்கும் போது கொஞ்சம் பொறுமையாகத் தைக்க வேண்டும். முதலில் வெட்டி வைத்திருக்கும் இரண்டு கொலரையும் இணைத்துத் தைக்க வேண்டும். பின்பு D.Cபோன்ற பகுதிகளில் ஒன்றைத் தனியாக எடுத்து 1/4" அளவில் தைத்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு சட்டைக் கழுத்துடன் மற்றைய, அதாவது தைக்கப்படாத கொலரை வைத்துப் பொருத்தவும். இனி, கொலரைத் திருப்பி வைத்து தைத்த கொலரின் நுனிப் பகுதியில் தையல் இட்டுக் கொள்ளுங்கள்.

இந்த முறையில் தைத்தால் கொலர் சுருக்கமில்லாமல் கச்சிதமாக இருக்கும்.



## அன்னையின் நினைவாற்றல்

அன்னை தெரசாவின் கல்விக் கூடத்தில் பயிலும் ஒவ்வொரு மாணவியின் பிறந்த நாளையும் அன்னை நினைவில் வைத்துக் கொண்டு, அதேநாளில் அதிகாலையில் அவர்களை அழைத்து அவர்களுக்குப் பூச்செண்டு கொடுத்து கௌரவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அன்னையின் இந்த நினைவாற்றல் அனைவரையும் அதிசயிக்க வைக்கிறதாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## தகவல் பெட்டி



இரும்பு ஆணி குத்தியதைக் காட்டும் 'எக்ஸ்-ரே' படம்!

# இரும்பு ஆணிகண்ணிலே ஏறியது!
# இன்பச் சுற்றுலா சோகமானது!!

கண் போலக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லுகிறோமே, அது கண்ணுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதற்கு எடுத்துக் காட்டல்லவா.

அந்தக் கண்ணுக்கே ஆபத்து வந்தால் கலங்கித்தானே போவோம்.

தென் ஆபிரிக்காவில் பிறந்தவன் தொன்ஸ்மினி. சின்னம் சிறு பையன் அவன்.

அவன் கண்ணுக்கு வந்தது அபாயம். இரும்பு ஆணியின் வடிவிலே அந்த அபாயம் வந்தது.

நடந்ததை அறியும் ஆவல் எழுகிறதல்லவா?

இதோ விபரம்.

தென் ஆபிரிக்காவின் ஜோகன்ஸ்பர்க் நகரைச் சேர்ந்தவர்கள் ஜாய், ஜானி தம்பதிகள்.

அவர்கள் வேலை செய்யும் நிறுவனத்தில் சுற்றுலா ஒன்று ஏற்பாடாகியிருந்தது.

பெற்றோரோடு சிறுவன் தொன்ஸ்மினியும் சுற்றுலாச் சென்றான். துள்ளி ஓடித்திரிந்தான்.

ஒரு பூங்காவில் உடலில் நைலோன் கயிற்றைக் கட்டிக் கொண்டு அனைவரும் சுற்றிச் சுற்றி வந்து விளையாடினார்கள்.

நைலோன் கயிற்றின் ஒரு முனை ஆணியில் கட்டப்பட்டு மரத்தில் அடிக்கப்பட்டிருந்தது.

திடீரென்று யாரோ ஒருவர் நைலோன் கயிற்றை வேகமாக இழுத்தார்.

கயிறு இழுக்கப்பட்டதும் மரத்திலிருந்து விடுபட்டு மேலே எழும்பிய ஆணி சிறுவன் தென்ஸ்மினியின் கண்ணில் பாய்ந்தது.

கண்ணில் பாய்ந்த ஆணி கழுத்து வழியாக வெளியே வந்தது.

சிறுவன் துடித்து விழுந்தான். செய்வதறியாது பெற்றோர் கலங்கினர்.

கூடியிருந்தோர் ஒரு காரில் சிறுவனை ஏற்றி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.



சிறுவனின் முகத்தை உடனடியாக எக்ஸ்ரே எடுத்தனர்.

கண் புருவம் வழியாகப் பாய்ந்த ஆணி கண் விழியை ஒரு ஓரமாகத் தள்ளி விட்டு மூக்கு எலும்பு வழியாக சென்று தாடை எழும்புக்கு மேலே சென்று கழுத்து சதை வழியாக வெளியே நீட்டிக் கொண்டிருந்தது.

சிறுவன் பிழைப்பானா என்பதில் வைத்தியர்களுக்கும் சந்தேகம்.

சத்திர சிகிச்சை நடை பெற்றது. என்னே ஆச்சரியம் சிகிச்சை வெற்றி பெற்று விட்டது.

அது மட்டுமா சிறுவனின் கண் பார்வையும் பறி போகவில்லை.

தனது 31 வருட அனுபவத்தில் இப்படி ஒரு பயங்கர சம்பவத்தைப் பார்க்கவில்லை என்று சத்திர சிகிச்சை செய்த டாக்டர் வியப்புடன் கூறினார்.

## சிரிக்கிறது குழந்தை! துடிக்கின்றனர் பெற்றோர்!!



பூ மலர்வது போல் குழந்தை சிரிப்பதும் அழகாக இருக்கும். மனதுக்கு இதமாக இருக்கும்.

குழந்தை சிரித்தால் பெற்றோருக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவுண்டோ. ஆனந்தம் பொங்கும் அன்றோ.

ஆனால் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள மார்க் அலிவ் தம்பதியினர் தம் குழந்தை சிரித்தால் வேதனையில் துடிக்கிறார்கள்.

அந்தத் தம்பதியினருக்கு இரு குழந்தைகள். இரண்டாவது குழந்தையின் பெயர் விட்னி.

விட்னிக்கு இரண்டு வயதான போது அவளது சிரிப்பில் ஒரு மாற்றத்தைக் கண்டனர்.

தொடர்ந்து சிரித்தாள். ஆரம்பத்தில் சாதாரணமாக நினைத்தனர். போகப் போக சந்தேகம் ஏற்பட்டது.

அது மட்டுமல்ல கைகளை மேலே உயர்த்தி, கால்களை குத்திட்டு நின்று பொம்மலாட்ட பொம்மைபோல் குதித்து குதித்துச் சிரித்தாள்.

வைத்தியர்கள் பலர் பரிசோதித்தனர். நோய் என்னவென்று அறிய முடியவில்லை.

வருடங்கள் உருண்டோடின. இப்போது விட்னிக்கு 11 வயது.

நோய்க்கான காரணம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு மகிழ்ச்சி நோய் எனறு பெயர். இதற்கு இதுவரை சிகிச்சை கண்டுபிடிக்கப்படவில்லை. பயிற்சிகள் மூலம் குணப்படுத்தலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

இந்த நோயை முதலில் கண்டு பிடித்தவர் பிரிட்டன் மருத்துவ நிபுணரான ஹாரி ஏஞ்சல்மென்.

அமெரிக்காவில் இதுவரை 400பேர் அந்த நோய்க்கு இலக்காகி இருக்கின்றனர்.

உயிருக்கு ஆபத்தில்லை. ஆனால் வருடம் முழுவதும் சிரிப்புத்தான்.

குழந்தை விட்னி படிப்பிலே படுசுட்டி. விளையாட்டில் கெட்டிக்காரி. ஆனாலும் சிரித்துக் கொண்டே இருக்கிறாள்.

அழும்போது கூட விட்னி சிரிக்கிறாள்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. அளவுக்கு மீறின சிரிப்பு விட்னி என்ற பிஞ்சுக்கு கொடுமை செய்கிறது.

## படகோடு விளையாடிய திமிங்கிலச் சுறா!

திமிங்கிலங்கள் பற்றிய அநேகமான கதைகள் மேற்கு அவுஸ்திரேலியாவின் வடக்குக் கரையோரங்களில் அடிபடுகின்றன.

ஆனால் முரசின் முகப்பில் காணப்படும் திமிங்கிலத்தின் புகைப்படத்தை குவீன்ஸ்லாந்தின் வடக்கு கடற்பாறைகளுடனான கடலில் எடுத்துள்ளனர்.

4 1/2 மீற்றர் நீளமான விசைப்படகை அந்த திமிங்கிலச் சுறா முட்டித் தள்ளும் போது படம் எடுத்துள்ளனர்.

படத்தில் திமிங்கிலச் சுறாவும் விசைப்படகின் மோட்டரின் மேல் பகுதியும் தெரிகின்றன.

பல்லாண்டுகளுக்கு பின் மிகப் பெரிய இப்பிராணியை இப்போதுதான் முதலில் கண்டுள்ளனர்.

அந்தத் திமிங்கிலச் சுறாவின் நீளம் 7 1/2 மீற்றர் இருக்கலாம் என்று கணித்துள்ளனர். மூக்குப் பகுதியின் நீளம் 2 மீட்டராம்.

படகை முட்டி மோதியும், படகின் பின்புறம் ஒளித்தும் வேடிக்கை காட்டியதாம் அந்தச் சுறா.

## எழிலரசி எலிசபெத் டெய்லரும் எய்ட்ஸ் என்ற செய்தியும்!



ஹொலிவூட் திரையுலகின் கனவுக் கன்னியாக புகழ் ஏணியில் இருந்தவர் எலிசபெத் டெய்லர்.

இப்போது வயது போய் இருந்தாலும்கூட எழிலரசியாகவே உலா வருகிறார். திடீரென்று ஒரு வதந்தி பரவியது. "எலிசபெத் துக்கு எய்ட்ஸ் நோய் இருக்கிறது." இதைச் சொன்னவன் எய்ட்ஸ் மருத்துவ மனையோடு தொடர்புடைய ஒரு நபர். எலிசபெத் டெய்லர் காதல் லீலைகளில் ஈடுபட்டவர்தான். ஹொலிவூட்டின் பிரபல நாயகர்கள், பிரபல தயாரிப்பாள கோடிஸ்வரர்கள் எலிசபெத் என்ற கட்டழகியின் கட்டிலறைக்கு செல்லக் காத்துக் கிடந்தவர்கள்தான். ஆனால் எலிசபெத்துக்கு எய்ட்ஸ் என்பது கட்டுக்கதையே தவிர வேறில்லை என்று செய்தியாளர்கள் கூறுகிறார்கள். எலிசபெத் டெய்லருக்கு கையொன்றில் நோய் இருக்கிறது. அதற்கும் எய்ட்ஸ் நோய்க்கும் தொடர்பில்லை என்கிறார்கள் அவரது மருத்துவர்கள். அதே சமயம் எலிசபெத் டெய்லரின் மருமகள் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு அதனால் மனம் நொந்து போன டெய்லர், மருமகளுக்கு பண உதவி செய்துவருகிறார்.

## நாம் வாழும் பூமியை நாம் அறிய வேண்டாமா?

நாம் வாழும் இந்தப் பூமி ஒரே சீரான , உருண்டை வடிவத்தில் இல்லை. நடுவரைக் கோடு எனக் கருதப்படும் பூமத்திய ரேகைப் பகுதியில் பரந்து விரிந்து காணப்படும் இதன் வட-தென் துருவப் பகுதிகள் தட்டையாகவுள்ளன. நடுவரைக் கோட்டில் பூமியின் வட்டத்தின் குறுக்களவு (விட்டம்) 12,756.274 கிலோ மீட்டர். (7926.381 மைல்) வட-தென் துருவங்களுக்கான விட்டம்



12713.505 கிலோ மீட்டர். (7899.806 மைல்)

தென் துருவ அரை வட்டத்தின் நீளத்தை விட வட துருவ அரைவட்டத்தின் அளவு 45 மீட்டர் (148 அடி) அதிகமாகும். நடுவரைக் கோட்டிலிருந்து துருவ ஊடு விட்டத்துக்கு மிடையிலும் சிறு வேறுபாடு காணப்படுகிறது. 37 பாகை தீர்க்க ரேகையின் நீள அச்சு குறுகிய அச்சைப் பார்க்கிலும் 159 மீட்டர். (522 அடி அதிகமாகக் காணப்படுகிறது. ஊடச்சுப் பிழம்புரு, பப்புவா நியூகினிப் பிரதேசத்தில் 73 மீட்டர் (240அடி) புடைத்திருக்கிறது. இதே வேளை இந்து மாக்கடலில்- இலங்கையின் தெற்கே 105 மீட்டர் (344அடி) உள் அமுங்கியுள்ளது.

பூமியின் நடுவரைக் கோட்டில் (பூமத்திய ரேகை) சுற்றளவு 40,075.02 கிலோ மீட்டர் (24, 901.46 மைல்)

பூமியின் பரப்பளவு 510,065, 600 சதுர கிலோ மீட்டர். (196, 937,400 சதுர மைல்) இது தன்னைத் தானே சுற்றி வர எடுக்கும் சரியான நேரம் 23 மணி 56 நிமிடம் 4.0996 நொடியாகும்.

பூமியின் கன பரிமாணம் 1,083,200,000,000 கனகிலோ மீட்டராகும். (250,875,300,000 கனமைல்) பூமியின் மேற்பரப்பு சுமார் 80 கிலோ மீட்டர் (50 மைல்) உரமான இயற்கை அமைப்பினால் மூடப்பட்டுள்ளது.

மேல் பரப்பிலிருந்து கீழே பலவகைப்படலங்கள் உள்ளன. இவற்றின் மொத்த ஆழம் 2809 கிலோமீட்டர். (1745மைல்) இதன் கீழ் மையப்பகுதியில் 4500 பாகை (சென்ரிகிறேட்) வரை உஷ்ணமுள்ள உலோகக் கலவை இருப்பதாகவும் இதில், இரும்பே பிரதானமான பொருளாகும் என்றும் கருதப்படுகிறது. ■

## எடை குறைந்தால் வரி குறையும்

மலேசியாவின் கோல செலாங்கூர் மாநிலத்தில் புதிய வரி வசூலிக்கும் முறை அமுலுக்கு வந்துள்ளது. வரி செலுத்தும் குடும்பத்தலைவர் அதற்குரிய அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும். அங்குள்ள எடைக் கருவியில் அவர் ஏறி நிற்க வேண்டும். அவருடைய எடைக்கு ஏற்றபடி அவரிடம் வரி வசூலிக்கப்படும். அதிக எடை கூடியவர் அதிகவரியும், எடை குறைந்தவர் குறைவான வரியும் கட்ட வேண்டும்!

நாட்டு மக்களின் எடையைக் குறைப்பதற்கான தந்திரமாக இருக்குமோ....? நம் நாட்டிலும் பின்பற்றி பார்க்கலாம் அல்லவோ?

## சிநேகமான சிறுத்தை!



தாயை விட்டுப் பிரிந்து திபெத் மலைக்காடுகளில் தனியாக அலைந்து திரிந்தது இந்தச் சிறுத்தைக் குட்டி.

இப்போது ஹொங்கொங் மிருகக் காட்சிச் சாலையில் இருக்கிறது.

மிகப் பயங்கரமான மிருகமான ·சிறுத்தைக் குட்டிக்குள்ளும் சிநேக உணர்வு இருக்கிறது.

வேட்டையாடும் சிறுத்தைக் குணத்தை தூக்கியெறிந்துவிட்டு மனிதனை நேசித்து விருப்பம் கொள்ளும் குணம் வந்து விட்டது.

மிருகக் காட்சிச்சாலை ஊழியரான லூயிசியுடன் ஒட்டிக் கொண்டது. அவர் எங்கு சென்றாலும் கூடவே போகிறது.

லூயிஸ் உணவு உண்ணும் போதும் அவருடைய உணவையே தானும் உட் கொள்கிறது.

குளிக்கும் போதும் அவருடன் கூடவே குளித்து குதித்து விளையாடுகிறது.

லூயிசுக்கு ஒரு கவலை. அந்த சிறுத்தைக் குட்டியை வளர்த்து ஆளாக்க பத்து வருடம் செலவிட வேண்டியிருக்குமாம்.

தாய் பத்து மாதம் பிள்ளை சுமக்கிறாள். லூயிஸ் பத்து வருடம் சிறுத்தை சுமக்கப் போகிறார்.

எல்லாமே பாசம்தான்.

மனிதனும் மிருகமும் கூட நட்பாகி அன்பு பொழியும் உலகில் மனிதனை மனிதனே விழுங்கும் கொடுமையும் நடப்பதை நினைத்தால் சோகம்தான் வருகிறது.

www.padippakam.com   நன்றி - நூலகம்



## காதோடு சொல்லுகிறோம்

★ மான்குட்டி நடிகையைக் கண்டால் [illegible] பின்னணிப் பாடகிகள் ஓடுகிறார்கள். பாடிக்காட்டுகிறேன் என்று, எங்கே வாய் திறந்து விடுவாரோ என்ற பயம்தான் ஓட்டத்துக்குக் காரணம்.

★ வெற்றி போஸ்டர் இயக்குநருக்கு பிடித்த நடிகைகள் இரண்டு பேராம். ஒருவர் பூ நடிகை. மற்றவர் கன்னட நடிகை. [illegible] அப்படி என்ன செய்தார்களாமா? [illegible]

★ ரூப நடிகை அடிக்கடி [illegible] போய் வருகிறாராம். வருஷத்தில் பாதி நாட்கள் போய் வரக்கூடிய நிகழ்ச்சிகள் உண்டாம். கவலை இல்லை என்கிறார். அப்படி என்ன நிகழ்ச்சிகளாம்? அது.....வந்து....கலை நிகழ்ச்சிகளாக இருக்கும். கலைதான்.

★ பா இயக்குநரின் படத்தில் மீண்டும் நடித்தால் போன மவுசு திரும்பி வரும் என்று ரேக நடிகை சான்ஸ் கேட்டாராம். ஆளை விடுதாயே என்று பாருக்கு ராஜா நழுவி ஓடிவிட்டாராம்.

★ தாடி இயக்குநரும் சகலகலா வல்லவருமான ராஜ இயக்குநர் வீட்டுப் பணிப்பெண் விஷம் குடித்துச் செத்துப் போனார். ஏன்- எதற்கு என்று சிலர் ஆராய்கிறார்களாம். ரசம் குடித்திருக்கலாமே பாவி, விஷம் குடித்தாயே. நான் ரசம் பிடித்தவன் ஆகிவிட்டேனே என்று அவர் எழுதினாலும் எழுதலாம்.

★ ஜல் நடிகையின் தாயார் தன் கணவர் மீண்டும் படம் எடுக்கத் தடை போட்டுவிட்டாராம். கோபம் கொண்ட சந்திரனார் வீட்டு வேலையாட்களிடம் கோபத்தை காட்டுகிறாராம். தினமும் கோபமாக இருப்பதால் வீட்டு வட்டாரத்தில் அவருக்கு சூட்டியுள்ள பட்டம் சதாம் உசேன்.

★ பூ நடிகைக்கு திருமண ஆசை வந்து விட்டதாகக் கூறுகிறார்கள். முன்னணியில் இருப்போம் என்ற நம்பிக்கையில் இதுவரை தள்ளிப் போட்டாராம். இப்போது நம்பிக்கை தளர்ந்து போனதால் ஆசை அரும்புகிறது என்று சொல்லுகிறார்கள்.

★ நகைச்சுவை மணியால் சில பழக்கங்களை கைவிட முடியாது. பத்து நிமிடம் ஒரே இடத்தில் இருப்பது, இயக்குநரை கிண்டலடிப்பது, ஜாமி நடிகையை தினமும் சந்திக்காமல் இருப்பது என்பவை அவற்றில் முக்கியமானவையாம்.

★ தெலுங்கில் ஒரு கலக்கு கலக்குவதென்று ரோஜ நடிகை முடிவு செய்துவிட்டாராம். வாசம் வீசுகிறதோ இல்லையோ. ஆடைகளை வீசிக் கொண்டிருக்கிறார்.

### உள்ளே வெளியே-உள்ளே!

'உள்ளே வெளியே' புகழ் பார்த்திபன் தனது புதிய படத்துக்கான துவக்க விழாவை [illegible]

[illegible]

## இது நாண்டா பெயர் "தாட் பூட் தஞ்சாவூர்"

பாலு மகேந்திரா இயக்கிய மறுபடியும் படத்தை தயாரித்த நிறுவனம் அல்லயன்ஸ் [illegible]

இப்போது புதிய படம் ஒன்றைத் தயாரிக்கிறார்கள்.

எஸ்.வி.சேகர்தான் கதாநாயகன். ஜனகராஜ், செந்தில், கபாலி, பாலு மனோரமா என்று பெரிய நட்சத்திரப் பட்டாளமே உண்டு.

இயக்குநரும் அனுபவம் உள்ளவர். 'ரோசாப்பூ ரவிக்கைக்காரி', 'கடலோர' போன்ற படங்களுக்கு கதை எழுதியவர் [illegible]. 'அண்ணே என்னடா தம்பி என்னடா' போன்ற படங்களை இயக்கியவர் விஜய்கிருஷ்ணராஜ், அவர்தான் இயக்குநர்.

எல்லாம் ஓகே. படத்தின் பெயர்தான் இடிக்கிறது.

'தாட் பூட் தஞ்சாவூர்' அதுதான் படத்தின் பெயர்.

## லக்கி நம்பர்

பானுப்பிரியாவின் காந்தக் கண்களுக்கு எப்போதும் ஒரு ரசிகர் பட்டாளம் இருக்கிறது.

நம்பர் ஒன் நடிகையாக இல்லாவிட்டாலும் லக்கி நம்பர் உள்ள நடிகை தான் என்று பானு திருப்திப் பட்டுக் கொள்கிறார்.






கோட் வாசல் படத்தில்
ஐஸ்வர்யாவின் பல கோணங்கள்

## "கண்டதும் கவரப்பட்டேன்" பதில் சொல்லுகிறார் ஐஸ்வர்யா

ஐஸ்வர்யாவை பிடிப்பது பெரிய கஷ்டமாக இருந்தது.

ஆகாஷ் என்று பெயரை மாற்றிக் கொண்டாலும் ஏற்கனவே ஒப்புக் கொண்ட படங்களில் ஐஸ்வர்யாவாக நடித்து வருகிறார்.

'ஆகாஷ்' படத்தில் நடிக்க வந்த ஐஸ்வர்யாவை மூரா வாசகர்களின் கேள்விகளோடு மடக்கினோம். [illegible]

[illegible] என்று நாகரிகமாகச் சொல்லி சொன்னார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பா தன்னிடம் தன்னை முதலில் சந்தித்த [illegible] சொன்னார். பார்த்தவுடன் யாரையும் அவர் கவரக் கூடியவர் என்று சொல்லமுடியாது. எனினும் முதல் சந்திப்பிலேயே தன்னை கவர்ந்துவிட்டார் என்கிறார்.

தான் போதை [illegible] சிறப்புவகாக [illegible].

[illegible]

இனி உங்கள் கேள்விக்கு ஐஸ்வர்யாவின் பதில்கள்.

• இந்த மூன்றாண்டுகளில் உங்கள் சாதனை என்ன?

ராஜாகிருஷ்ணன்-கோவை

உங்களைப் போன்ற லட்சக்கணக்கான ரசிகர் ரசிகைகள் [illegible] கிடைத்திருக்கிறார்களே அது.

• உங்களைப் பற்றி வரும் கிசுகிசுக்களைப் பார்த்து என்ன நினைப்பீர்கள்?

ராணி [illegible]-கோவை

படித்து ரசிப்பேன். வெரி இன்டரஸ்டிங்.

• உங்களுக்கு மார்க்கட் தேடித்தந்த படம் எது?

என்.கோவிந்தராஜ்-[illegible]

பல படங்கள் உண்டு சார். சமீபத்தில் வந்த படங்களில் உள்ளே வெளியே, [illegible] சப்பா ஸ்டாரோடு நடித்தது மறக்க முடியாது.

• நீங்கள் நடித்த படங்களை நீங்களே பார்க்கும் போது உங்கள் மனதில் [illegible] தோன்றுகிறது?

[illegible]-[illegible]

பரவாயில்லையே நன்றாக நடித்திருக்கிறேனே என்று நினைப்பேன். [illegible] நன்றாக நடித்திருக்கலாமே என்றும் நினைப்பேன்.

• [illegible] படங்களில் நடிப்பதை விட்டு விடுவீர்களா?

[illegible]

இன்னும் அது பற்றி முடிவு செய்யவில்லை. அப்படி ஏதாவது முடிவு செய்[illegible] நிச்சயமாக அறிவிப்பேன்.

• நீங்கள் நடிப்பில் பின்பற்றுவது அம்மா ஸ்டைலையா? அல்லது [illegible] குச்சலையா?

எம்.எச்.எம். [illegible]-புளியங்குடி

யாரையும் பின்பற்றுவதில்லை. இயக்குநர் சொல்லித் தருவதை [illegible] பாணியிலும் நடிப்பேன்.

(அடுத்த வாரமும் [illegible])

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பா முரசு

## தாய் சொல்லைத் தட்டாதே



வேலூர் என்ற ஊரில் வள்ளி நாயகி என்ற பணக்காரப் பெண் ஒருத்தி இருந்தாள். அவளது கணவர் அவளுக்கு ஏராளமான சொத்துக்களை வைத்து விட்டு இளம் வயதிலேயே இறந்து போயிருந்தார். அப்பொழுது அவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள் இருந்தனர். மூத்தவன் பெயர் மாதவன். இளையவன் பெயர் சகாதேவன். மாதவனின் வயது ஆறு. சகாதேவனின் வயது நான்கு.

வள்ளி நாயகி அம்மாள் மாதவனையும், சகாதேவனையும் கஷ்டம் தெரியாமல் மிகவும் அருமையாகவே வளர்த்து வந்தாள். அவர்களுக்கு தந்தை இல்லையே என்ற குறை தெரியாமல் மிகவும் பாடுபட்டு அவர்களின் மேல் அன்பு செலுத்தினாள். அதே சமயம் உழைப்பையும் அதனால் கிடைக்கக்கூடிய பலனையும் அவள் சொல்லிக் கொடுக்கத் தவறியது கிடையாது. அவர்கள் சோம்பேறித்தனம்பட்டு விடக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு ஏதாவது சிறு சிறு வேலைகளைச் செய்யும்படி கட்டளையிட்டுக் கொண்டிருப்பாள்.

இப்படியே மாதவனும், சகாதேவனும் வளர்ந்து பெரியவர்கள் ஆனார்கள்.

சிறுவயதிலிருந்தே மூத்தவன் சகாதேவன் தாயின் சொல்லை அவ்வள வாகக் கேட்பதில்லை. அவனுக்கு இடப்பட்ட வேலைகளையும் தம்பி சகாதேவனிடம் கொடுத்து விட்டு எங்கேயாவது விளையாடப் போய் விடுவான். இப்பொழுது வளர்ந்து பெரியவனாகி விட்டதால் அவனை அடக்குவது பெரும் சிரமமாக இருந்தது.

அவன் சரியாகப் பள்ளிக்கூடம் செல்வதில்லை. ஒழுங்காகப் படிப்பதில்லை. நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவதும், தாயிடம் வற்புறுத்திப் பணம் பெற்று சினிமா, நாடகம் என்று செல்வதிலுமே கவனம் செலுத்தினான். தாய் அவனைக் கண்டித்தால், "அப்பா எனக்குத்தான் எக்கச்சக்கமா சொத்து வச்சிட்டுப் போயிருக்கிறாரே. அப்புறமும் நான் ஏன் கஷ்ரப்பட்டு சம்பாதிக்கணும். காசைத் தூக்கி எறிஞ்சா காரியம் நடந்திட்டுப் போகுது." என்று திமிராகப் பதில் சொல்லி விட்டுப் போவான். இனிமேல் அவனைச் சொல்லித் திருத்த முடியாது. எப்படியோ போகட்டும் என்று விட்டுவிட்டாள் வள்ளி நாயகி.

இளையவன் சகாதேவன் தாய் சொல் கேட்டு நல்ல பிள்ளையாக வளர்ந்து விட்டான். தாய் எது சொன்னாலும் தட்ட மாட்டான். பள்ளிக்குப் போய் ஒழுங்காகப் படிப்பான். மற்ற நேரங்களில் அவனே தோட்டத்தைப் பராமரிப்பான். தொழுவத்திலுள்ள மாடுகளுக்குத் தீவனம் போட்டு நன்கு பராமரிப்பான். கடைக்குச் சென்று வீட்டிற்குத் தேவையான சாமான்களை வாங்கி வருவான். இப்படி அவன் பழகியதால் நடைமுறை வாழ்க்கையில் அவனுக்குப் பல விஷயங்கள் புரிந்தன.

மாதவன் முழுக்க முழுக்க ஊதாரியாகி விட்டிருந்த நேரத்தில் சகாதேவன் பட்டப்படிப்பு முடித்திருந்தான். இந்தச் சமயத்தில் அவன் தாய் வள்ளிநாயகி நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டாள். தங்களுக்கு இருந்த ஒரே ஆதரவான தாய் இறந்து விட்டதால் பெரிதும் துன்பம் கொண்டான் சகாதேவன். மாதவனோ எவ்வித துன்பமும் கொள்ளாமல் வழக்கம் போலவே பொறுப்பில்லாமல் ஊர் சுற்றித் திரிந்தான்.

இதனால் அவர்களது சொத்தில் பெரும் பகுதியை அவன் அழித்தே விட்டான். இதனால் மேலும் துன்பமடைந்த சகாதேவன், இருக்கின்ற சிறிதளவு சொத்தை இருவரும் பகிர்ந்து கொள்வோம் என்று சொன்னான்.

மாதவனோ, சகாதேவனுக்குச் சொத்தில் சிறிது கூடக் கொடுக்காமல் அவனைத் துரத்தி விட்டான்.

அண்ணன் என்ற உறவும் அறுந்து போன நிலையில் முழுக்க முழுக்க அனாதையாகி விட்ட நிலையில், தனது பட்டப் படிப்பை வைத்து ஒரு வேலை தேடிக் கொண்டான் சகாதேவன்.

தனது சாமர்த்தியத்தாலும், தாய் சொல்லிக் கொடுத்த உழைப்பின் உண்மையைக் கொண்டும் படிப்படியாக வேலையில் முன்னேறினான். ஒரு சில வருடங்களிலேயே தனது மேலதிகாரியின் அன்பிற்கும், மதிப்பிற்கும் பாத்திரமாகி அவருடைய மகளையே மணந்து கொண்டு சீரும் சிறப்புமாக வாழத் தொடங்கினான்.

சொத்தைக் கொடுக்காமல் சகாதேவனை எமாற்றிய மாதவன், இருந்த சொத்துக்களையும் விரைவிலேயே சூதாடி அழித்தான். பணம் இருந்தவரை அவனிடம் ஒட்டிக்கொண்டிருநத அவன் நண்பர்கள் அவன் ஏழையானது தெரிந்ததும் அவனை விட்டு விலகிச் சென்று விட்டார்கள்.

ஒரு வேளை சாப்பாட்டிற்குத் தெருத்தெருவாக அலைந்து பிச்சை எடுக்கும் நிலை வந்த போதுதான் மாதவன், தன்னைப் பற்றியும், இந்த உலகத்தைப் பற்றியும் உணர ஆரம்பித்தான்.

தனது செயலுக்காக மிகவும் மனம் வருந்தினான். அழுதான். ஆனால் எந்த வித படிப்பறிவும் இல்லாமல், எந்தவிதத் தொழிலும் தெரியாமல், எந்த விதத்திலும் திறமையும் இல்லாமல் இருந்த அவனுக்குப் பிச்சை எடுப்பதைத் தவிர வேறு வழியே தெரியவில்லை.

குழந்தைகளே! தாய் சொல்லைக் கேளாததால் மாதவனுக்கு நேர்ந்த கதியைப் பார்த்தீர்களா? "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை", "ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமம்" என்ற நீதி மொழிகளுக்கேற்ப நடந்த சகாதேவன் வாழ்க்கையில் அடைந்த முன்னேற்றத்தைப் பார்த்தீர்களா? ஆகவே, நீங்கள் தாய் சொல் கேட்டுச் சகாதேவனைப் போல வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல-7

**பரிசுக்குரியவர்**

செல்வன் ப. ருசான்
விஷ்ணு ஆலய வீதி-கல்குடா.

**பாராட்டுக்குரியவர்கள்**

செல்வி எப். பாசிதா
அல் அக்ஸா முஸ்லீம் வித்தியாலயம், பொல்கஹவெல.

கி.சந்திரிக்கா
கொ/நல்லாயன் அரசினர் தமிழ் வித்தியாலயம் கொழும்பு-13.

அ.சிருத்தீகன்
இந்துக்கல்லூரி, கொழும்பு.

அபர்ணா சேகர்
மோதர, கொழும்பு-15.

வி.சகுந்தலா
நல்லெலி பற்றிய கன்னியர் பாடசாலை நுவரெலியா.

கே. யோகேஸ்வரன்
தமிழ் மகா வித்தியாலயம், கலஹா.

க.விஜிதா
புனித தோமையர் பெண்கள் பாடசாலை மாத்தளை.

எம்.எப்.எப் நப்லா
முஸ்லிம் பாலிகா மஹா வித்தியாலயம் களுத்துறை.

எம்.ஜே. முகமட் கதபி
மதீனாமத்திய கல்லூரி
மடவள பஸார்.

பாத்திமா றினூஸா. எம்.ஹனீபா
பது/ சரஸ்வதி மத்திய கல்லூரி
பதுளை.

செல்வன்-வ.நிரோஷன்
கார்மேல் பாத்திமா கல்லூரி
கல்முனை.

ஆர்.எம்.சுமைதா
ப/ பாதினாவெல முஸ்லிம் வித்தியாலயம்
பொறகஸ்.

முகமட் இஸ்திகார்
அமீதியா மகாவித்தியாலயம்
குரிவெல்.

ஜே.சலாஹுதீன்
மட்/அந் நூர் மகா வித்தியாலயம்
வாழைச்சேனை.

எஸ்.எஸ்.ஏ. பிரிந்தினி
பாரதி வீதி, திருகோணமலை.

### சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு சிறந்த வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணப்படம் ஒன்றுக்குப் பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.10.93.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 10
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு -05.

### எல்லாம் இரண்டு!

1. வருவதும் போவதும்- இன்பம், துன்பம்
2. வந்தால் போகாதது- புகழ், பழி
3. போனால் வராதது- மானம், உயிர்
4. தானாக வருவது- இளமை, முதுமை
5. நம்முடன் வருவது- பாவம், புண்ணியம்
6. அடக்க முடியாதது- ஆசை, துக்கம்
7. தவிர்க்க முடியாதது- பசி, தாகம்
8. நம்மால் பிரிக்க முடியாதது- பந்தம், பாசம்
9. அழிவைத் தருவது- பொறாமை, கோபம்
10. எல்லோருக்கும் சமமானது- இறப்பு, பிறப்பு.

க. நிமலதாசன், மாங்காடு ச.வி., செட்டிபாளையம்.

### பூமியில் புகழ் மிக்க விமான நிறுவனங்கள்

1. எயர் இந்தியா (AL)
2. பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் எயர்வேஸ் கார்ப்பரேஷன் (BOAC)
3. ஜப்பான் எயர் லைன்ஸ் (JAL)
4. பாகிஸ்தான் இன்டர் நேஷனல் எயர் லைன்ஸ் (PLA)
5. டிரான்ஸ்வோல்ட் எயர் லைன்ஸ் (TWA)
6. ராயல் டச் ஏர்லைன்ஸ் (KLM)
7. எயர் பிரான்ஸ் (FRANCE)
8. பான் அமெரிக்கா வோல்ட் எயர் லைன்ஸ் (PANAM)
9. கே.எல்.எம் (K.L.m) நெதர்லாண்ட்
10. சுவிஸ் எயர் (சுவிட்ஸர்லாந்து)
11. சிங்கப்பூர் எயர்லைன்ஸ்
12. லூப்தான்ஸா (மேற்கு ஜேர்மனி)
13. கர்ட் (Gard) எயர்வேஸ் (இந்தோனேஷியா)
14. எயர் லங்கா (இலங்கை)
15. மலேசியன் எயர்லைன்ஸ் சிஸ்டம் (MAS)

மு.விக்னேஸ்வரி
விவேகானந்த மகா வித்தியாலயம்
கொழும்பு-11.

### விடுகதைகள்

1. கருப்பு நிறச் சிங்காரிக்கு வெள்ளைக் கரைச் சேலை?
2. ஓராயிரம் பேர் சேர்ந்து கட்டிய மாளிகை. ஆனால் உட்கார இடமில்லை. அது என்ன?
3. உண்டு விட்டு உண்டு விட்டு உறங்குவான். அவன் யார்?
4. ஊசி போட்டவைத்தியர் பாடிக்கொண்டு போகிறார்?
5. நான் கண்ட காட்சி. பிறர் பார்க்க முடியாதது?

விடைகள்
1. சிலேற்று
2. தேன் கூடு
3. சாப்பாட்டுத் தட்டு
4. நுளம்பு
5. கனவு.

எச். ஆர் எப்.ரிப்கா
கொழும்பு-13.

1. ஒரு காட்டில் பச்சை பாம்பு தொங்குது. அது என்ன?
2. மழையில் மலரும் வெள்ளைப்பூ. அது என்ன?
3. உலர்ந்த கொப்பிலே மலர்ந்த பூ. அது என்ன?
4. தொப்பென்று விழுந்தான். தொப்பி கழண்டான். அது என்ன?
5. ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம். அது என்ன?

விடைகள்
1. புடலங்காய்
2. காளான்
3. குடை
4. பனம்பழம்
5. கை

பொன்னையா டெய்சி
நாவற்குடா, மட்டக்களப்பு.

### கிரிக்கெட் இணைந்து விளையாடிய இரட்டையர்

1. ஏ.ஜி கிரிபால்சிங்
ஏ.ஜி மில்காசிங் (இந்தியா)
2. எஸ்.சுரிந்தர் அமர்நாத்
மொகிந்தர் அமர்நாத் (இந்தியா)
3. எஸ்.வசீர் அலி
எஸ். நசீர் அலி (பாகிஸ்தான்)
4. எல். அமர்சிங்
எல். ரஞ்சித் சிங் (இந்தியா)
5. இயன் சாப்பல்
கிரேக்சாப்பல் (அவுஸ்திரேலியா)
6. டி.ஆர்.ஹேட்லி
ஆர்.கே. ஹேட்லி (நியூசிலாந்து)
7. ஹனிப் முகம்மது
சாதிக் முகமது (பாகிஸ்தான்)
8. ஜே.ஆர்.ஸ்டோல் மோயர்
வி.எச்.எஸ்.ஸ்டோல் மோயர் (இங்கிலாந்து)
9. ஆர்.எம்.போலக்
ஆர்.ஜி.போலக் (இங்கிலாந்து)
10. ஜே.ஜே.க்ரோ
எம்.டி.க்ரோ (நியூசிலாந்து)

எம்.என்.தாரிக் முஹம்மத்
சிலாபம்.

1. ஓடினாலும் சாடினாலும் ஓடோடி வருவான் கருப்பன். அவன் யார்?
2. வீட்டுக்குள் வீடு கட்டி, வீட்டையே கொள்ளையடிக்கும். அது என்ன?
3. பெற்றோருக்கு வால் உண்டு. ஆனால் பிள்ளைகளுக்கு இல்லை. அது என்ன?
4. கறுத்த பாறைக்கு வெளுத்த வேர். அது என்ன?
5. அண்ணன் மேளமடிக்க, தம்பி விளக்கு பிடிக்க தாய் அழுகிறாள்? அவை என்ன?

விடைகள்
1. நிழல்
2. எலி
3. தவளை
4. யானைத்தந்தம்
5. இடி, மின்னல், மழை.

செல்வி பாத்திமா ரிசானா ராசிக்
வத்தெகெகர முஸ்லிம் வித்தியாலயம்
பெல்கெல்லா.

### அளக்கும் கருவிகள்

1. இரத்த அழுத்தம் - சிபிக்மோ
2. இதயத்தின் இயக்கங்களை பதிவு செய்தல் - கார்டியோகிராப்
3. மின்னோட்டம் - அம்பியர்மானி
4. காற்றின் வேகம் மற்றும் ஆற்றல் - அனிமோமீற்றர்
6. ஈரப்பதன் - ஹைக்ரோ மீற்றர்
7. பாலில் உள்ள நீரின் அளவு - லக்டோ மீற்றர்
8. திரவ அடர்த்தி- ஹைட்ரோ மீற்றர்
9. பூமி அதிர்வின் தன்மை - லீஸ்மோ மீற்றர்
10. நீர்மூழ்கிக் கப்பலின் அடியில் இருப்பவர்களுக்கு மேல் உள்ள வற்றை பார்க்க உதவும் கருவி - பெரிஸ்கோப் (சூழ்காட்டி)

என். பிரசன்னா
விவேகானந்தாக் கல்லூரி.

### இதுவரை இவர்கள்

இந்தியாவின் தமிழ் நாட்டில் பதவி வகித்த முதலமைச்சர்களின் விபரம்:

ஓமந்தூர் இராமசாமி செட்டியார்
குமாரசாமி இராஜா
ராஜாஜி
காமராஜர்
பக்த வத்சலம்
அண்ணாதுரை
கருணாநிதி
எம்.ஜி.ராமச்சந்தின்
ஜானகி அம்மாள்
ஜெயலலிதா

செல்வன்-எம். சிவகுமார்
நு/ அக்கரபத்தனை
கொத்தணி த.ம.வி.
அக்கரப்பத்தனை.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

# தேன் கிண்ணம்

## புதுப்பிக்கப்படும் புரட்சி

எனது தேசம் இப்போது
சவங்களின் சுமையை
தாங்க முடியாமல்
தள்ளாடுகிறது.
★
கலவரங்களால்
கைப்பற்றப்பட்ட தேசம் ,
குருதி மழையில்
குளித்து முடியவில்லை;
அதனால் இன்னும்
சமாதான வானின்
கிழக்கும் விடியவில்லை.
★
எத்தனை தடவை
யுத்த நிறுத்தம் செய்தீர்கள்?
இரத்த நிறுத்தம் செய்ய
ஒரு தடவையாவது
உடன்பட்டீர்களா?
★
ஆதிக்க வேசியின்
கடைக் கண் பார்வையில்
கரைந்து போனவர்களே..!
நீங்கள்-
அதிகார போதையை
அருந்திக் கொண்டபோது
தள்ளாடியது இந்த
தகர்ந்த தேசமல்லவா?
★
உதடுகளிலே-
துவேசத்தைத்
தொங்கவிட்டுக் கொண்டு
வார்த்தைகளால்
ஐக்கியத்தை அலங்கரித்த
வேசதாரிகளே!
★
அதிகாரம் என்ற
உங்களின்
காம வெறியால்
இழந்தாள் கற்பை
இலங்கைக் கன்னி!
★
வட கிழக்கில்
ஊற்றெடுத்த
இரத்த மஹாவலியை
திசை திருப்பினீர்கள்
தெற்குக்கும்;
அங்கும்-
பெருகியது பிண விளைச்சல்.
★
அப்போதும்
மேடைகளிலே நீங்கள்
முழங்குவது,
"புனித தேசத்தை
புதுப்பிப்போம்" என்று;
இங்கே-
புதுப்பிக்கப்படுவது
புரட்சியல்லவா.....?

-காத்தான்குடி அனு-

## சிகரட்

உதடு என்னும்
அலங்கார வாயி(லி)ல்
ஆடையில்லாமல்
நிர்வாணமாகப்
போதையூட்டும்
விபச்சாரி!

ஷஹிர்ஷா தாஹிம்
தர்கா நகர்.

## ஞாபகக் காகிதங்கள்

என்னுயிரே..
அன்றெல்லாம்
நீ..
அன்போடு அனுப்பி
வைத்த கணக்கிலா
காகிதங்களெல்லாம்
கண்ணீர் சொரியுதடி
உந்தனின் செய்கை கண்டு
நம்முடைய..
அன்பினை அபிவிருத்தி
ஆக்கி விட மட்டும்
உதவி அளித்த
அக் காகிதத் தாள்களே
நம் கடந்த கால
காதல் இராசசியத்தை
இன்னமும்
இமைத்துக் கொண்டிருக்கிறனவே.
ஆனால்..
என் இராக்கிழத்து
ராணியென இமைக்குள்ளே
மூடி வைத்த நீயும்-என்
இமையையே சேதப்படுத்திய தேனோ?

கே.ரி.எஸ். சேகர்
கொழும்பு-15.

## அனுமதி

சங்கமம் தேடும்
நம் காதல்
அந்திக்கு வந்தாச்சு!

நமது சந்திப்புக்களை
அம்பலப்படுத்த
சிந்தித்த
சில மனிதங்களின்
சொல்வாக்கால்
நம் காதல்
செல்வாக்கு
பெற்றுவிட்டது!

அந்த மர நிழல்
மறைமுகங்கள் கூட
மக்கள் வசமாகிவிட்டது!

நம்
இரகசிய ஒத்திகைகளுக்கும்
பகிரங்க
களமமைத்து விட்டார்கள்!

இனிமேல்
நாம்
அஞ்சத்தேவையில்லை!

நம் காதலை
அரங்கேற்ற
அனுமதி கிடைத்தாயிற்று!

கே. கனகராஜா.

## அறியாமை

நான் கவிதைக்குள்
புதையல் தேடி
தோற்றுப் போனவன்.
கவிஞன் சொன்னான்
"அட மடையா,
கவிதையே புதையல்தாண்டா.."

முத்துக்குமார் ரமேஷ்
கொழும்பு-15.

## கலியுக(க்) காலம்!

வெடி குண்டுகள்
விளை நிலமாய் மாறிய
இந்தப் பூமியில்
மனித உயிர்கள்
மலிவாய் கொல்லப்படுகின்றன!

ஆயுதக் காதலியின்
ஆதிக்கத்தில்
உடமைகளையும் உயிர்களையும்
இழந்த சக்கரவர்த்திகள்
ஊமையாய் வாழும்
மயான பூமியிது!

அழிக்கப்படும்
சமுதாயச் சுவட்டின்
காயங்கள்
ஆற்றப்படாமல்
குரோதமென்ற எண்ணையூற்றி
தினந்தோறும்
தீ வைக்கப்படுகிறது!

ஓ...
இது
கலியுகக் காலமல்லவோ!

-ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்-

## தாய்

முற்பணமும் வாடகையும்
மலைபோல உயர்ந்த போதும்
இலவசமாய்
பத்து மாதம் எம்மைக்
குடியிருக்க அனுமதி தந்த
தியாகி.

## அப்பா

அம்மா PASSPORT என்றால்
அப்பா தான்
VISA

## பாடல்

நாதங்கள் தரும் சுகம்
அதுவே
சில இதயங்களுக்கு ரணம்

அ. உமாபதி
திருமலை.

# அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



**இலக்கம்-11**
**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.



# கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

**நண்பர்:** என் குழந்தைக்கு பெயர் வைக்க வேண்டும். வாயில் நுழையக் கூடிய பெயராகச் சொல்லுங்கள்.
**மற்றவர்:** 'விரல்' என்று வையுங்கள்.

•

**அவர்:** இங்கே புகை பிடிக்கக்கூடாது என்று எழுதியிருக்கிறதே, கவனிக்கவில்லையா?
**மற்றவர்:** நான் புகையைப் பிடிக்கவில்லையே. அதை வெளியேதானே விடுகிறேன்.

•

**அவன்:** என்னுடைய குடையைக் காணவில்லை.
**மற்றவன்:** அது எப்போது தெரிந்தது?
**அவன்:** மழை நின்றவுடன் குடையை மடக்கலாம் என்று நினைத்த போது?

•

**வந்தவர்:** உங்கள் ஊரில் யாராவது பெரியவர்கள் பிறந்திருக்கிறார்களா?
**ஊர் பிரமுகர்:** இல்லை. எல்லாமே சின்னக் குழந்தைகளாகத்தான் பிறந்திருக்காங்க.

•



• "ராமாயணத்தில் எனக்கொரு குழப்பம்."
• " என்ன?"
• "சீதை மீது ராவணன் கொண்ட காதலை ஒரு தலைக் காதல்னு சொல்லுறதா? பத்து தலைக் காதல்னு சொல்லுறதா?"



• "கவுண்டமணியைக் கதாநாயகனாகப் போட்டு பி.வாசு படம் எடுத்தால் என்ன பேர் வைப்பார்?"
• "உதைப்பாளி."

# இந்த வாரம் உங்கள் பலன்

**(10.10.93 முதல் 16.10.93 வரை)**

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன் |
| துலாம் | - வியாழன், செவ்வாய், புதன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| சிம்மம் | - வெள்ளி |

சந்திரன்— கடகம், சிம்மம், கன்னி இராசிகளில் சஞ்சாரம்

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியாார் உதவி, வீண் பிரயாசம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | குடும்ப மகிழ்ச்சி, பொருள் கஷ்டம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | மனைவியினால் கவலை, செலவு அதிகம். | காலை 10 மணி |
| புதன்- | உறவினர் இழப்பு, மனக்கவலை. | பி.ப 4 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், தெய்வ அனுகூலம். | பி.ப 6 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், வீண் செலவு. | காலை 9 மணி |
| சனி- | பொருள் வரவு, ஆடம்பர வாழ்க்கை. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, பணத்தட்டுப்பாடு. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, புதிய முயற்சி. | பி.ப 2 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, உயர்வு. | காலை 9 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, மறைமுக எதிர்ப்பு. | காலை 11 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், வீண் பிரயாசம். | காலை 10 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள் -திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயமிகுதி, பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| திங்கள்- | வீண் வாக்குவாதம், துயர் அதிகம். | காலை் 11 மணி |
| செவ்வாய்- | பொருள் சிறப்பு, பூமியினால் நஷ்டம். | காலை 10 மணி |
| புதன்- | செல்வாக்கு, காரியசித்தி. | பி.ப 4 மணி |
| வியாழன்- | அறிஞர் தொடர்பு, அதிகார சித்தி. | பி.ப 5 மணி |
| வெள்ளி- | கடன்படல், தெய்வ அனுகூலம். | பி.ப 3 மணி |
| சனி- | தனவிருத்தி, வீண் பழி கேட்டல். | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, கடின உழைப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, பொருள் நட்டம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | பூமியால் இலாபம், குடும்ப நன்மை. | காலை 10 மணி |
| புதன்- | அதிகார விருத்தி, ஆடம்பரச் செலவு. | பி.ப 3 மணி |
| வியாழன்- | குடும்பக் கலகம், பொருள் விரயம். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | காரிய நஷ்டம், பெரியோர் உதவி. | பி.ப 5 மணி |
| சனி- | பொருள் வரவு, உறவினரால் கஷ்டம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | அந்நியர் சகவாசம், பெரியோர் உதவி. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | வீண் பழி கேட்டல், பொருள் இழப்பு. | காலை 11 மணி |
| புதன்- | கடவுள் நம்பிக்கை, தனலாபம். | காலை 10 மணி |
| வியாழன்- | புண்ணிய யாத்திரை, உறவினர் உதவி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | துயர் அதிகம், குடும்பப் பிரிவு. | பி.ப 4 மணி |
| சனி- | வெளியிட வாசம், பொருள் கஷ்டம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் - சனி, அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய தாமதம், வீண் பிரயாசம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | சுபகாரிய மகிழ்ச்சி, அந்நியர் சகவாசம். | பி.ப 5 மணி |
| செவ்வாய்- | பணத் தட்டுப்பாடு, மனப்பயம். | பி.ப 4 மணி |
| புதன்- | , துயர் நிவர்த்தி, தூர இடப்பயணம். | காலை 10 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, தெய்வ அனுகூலம். | காலை 11 மணி |
| வெள்ளி- | உறவினரால் கஷ்டம், பணச்செலவு. | பி.ப 4 மணி |
| சனி- | பெரியோர் சகவாசம், காரியசித்தி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினரால் மகிழ்ச்சி, குடும்ப சுகம். | பி.ப 4 மணி |
| திங்கள்- | தனலாபம், அகால போசனம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | தூரஇடப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |
| புதன்- | காதல் பிரச்சனையுண்டு, குடும்பக் கலகம். | காலை 10 மணி |
| வியாழன்- | வெளியிடத்தால் நன்மை,தொழில் சித்தி. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | மனமகிழ்ச்சி, பொருள் இலாபம். | பி.ப 2 மணி |
| சனி- | கடின உழைப்பு, காரியானுகூலம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அரசியல் இலாபம், அதிகாரம். | பி.ப 4 மணி |
| திங்கள்- | கடின உழைப்பு, கடன் படல். | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | வாக்குக் கலகம், பாராட்டு. | பி.ப 2 மணி |
| புதன்- | கஷ்டபலன் நீங்கும், காரியானுகூலம். | பி.ப 4 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, பூமிப் பேறு. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வைத்தியச் செலவு, மனக்குழப்பம். | காலை 9 மணி |
| சனி- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், புகழ் கீர்த்தியுண்டு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | கௌரவம், பண வரவு. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | தேக சுகம், உறவினர் பகை. | பி.ப் 5 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, பொருள் நட்டம். | காலை 9 மணி |
| வியாழன்- | பணக்கஷ்டம், மனக்குழப்பம். | காலை 11 மணி |
| வெள்ளி- | வீண் முயற்சி, தெய்வானுகூலம். | காலை 10 மணி |
| சனி- | பணவரவு, பாராட்டு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்தோர் நட்பு, பாரிய இழப்பு. | காலை 9 மணி |
| திங்கள்- | துயர் அதிகம், கடன் பயம். | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | வீண் நம்பிக்கை, பொருள் கஷ்டம். | பி.ப 2 மணி |
| புதன்- | அந்நியரால் உதவி, கவலை மறையும். | காலை 9 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, பதவி உயர்வு. | காலை 11 மணி |
| வெள்ளி- | தூர இடப் பயணம், பொருள் விரயம். | காலை 10 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் -வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கடன் தொல்லை நீங்கும், காரிய சித்தி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | தெய்வ அனுகூலம், துயர் நீங்கும். | காலை 11 மணி |
| செவ்வாய்- | மன மகிழ்ச்சி, உறவினர் பகை. | காலை 9 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, பொருள் இழப்பு. | காலை 10 மணி |
| வியாழன்- | வீண் முயற்சி, காரியத்தடை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | எடுத்த கருமம் வெற்றி, தார சுகத்தடை. | பி.ப 4 மணி |
| சனி- | பொருள் விரயம், புதிய முயற்சி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-8

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, பொருள் சேர்க்கை. | பி.ப 3 மணி |
| திங்கள்- | பணவரவு, உறவினரால் தொல்லை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | நடைக்கஷ்டம், காரிய சித்தி. | காலை 11 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப 4 மணி |
| வியாழன்- | புதிய பதவி கிடைத்தல், மன மகிழ்ச்சி. | பி.ப 5 மணி |
| வெள்ளி- | பாராட்டு, காரியானுகூலம். | பி.ப 6 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, குடும்ப முன்னேற்றம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் – ஆரோக்கியம் பெறுங்கள் – ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

பசும்பால் பிரியர்களுக்கு நல்ல செய்தி. தினசரி மூன்று கிளாஸ் பசும்பால் பருகினால் இரத்த அழுத்தம் ஏற்படுவது 40 சதவிகிதத்தால் குறைகிறது. ஆனால் நீங்கள் பருகும் பால் கொழுப்புக் குறைந்த பாலாக இருக்க வேண்டும்.

## இரத்த அழுத்தமா? பால் அருந்துங்கள்!

கல்சியம் எனப்படும் சுண்ணச் சத்து இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் அற்புதமான வஸ்து. இரத்த நாளங்களின் அழுத்தத்தை இது இளக்கி விடுகிறது. இச் சுண்ணச் சத்து போதிய அளவு பசும்பாலில் கிடைக்கிறது. "குருதி அழுத்தத்தைச் சீராக்கும் அரிய சாதனமாக சுண்ணச் சத்தான கலசியம் விளங்குகிறது" என்று ஒரேகன் சுகாதார அறிவியல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் டேவிட் மாக்காரோன் கூறுகிறார். சாதாரண இரத்த அழுத்தமுள்ளவர்களைப் பார்க்கிலும் 20 முதல் 25 சதவிகிதம் வரை குறைந்த அளவு சுண்ணச் சத்தினை உட்கொள்ளுபவர்களே உயர் குருதி அழுத்த நோயினால் பீடிக்கப்படுகிறார்கள் என்று அவர் தெரிவிக்கிறார்.

நாளொன்றுக்கு 800 மில்லி கிராம் கல்சியம் மட்டும் உட் கொண்டால் போதுமானது என்று நிபுணர்கள் இதுவரை கூறிவந்தனர். ஆனால் 1000 மில்லிகிராம் வரை பசும்பால் பருகுவது நன்மை பயக்கும் என்று மாக்காரோன் கூறுகிறார்.

கல்சியம் சத்து வேறு எந்த உணவுப் பொருட்களில் கிடைக்கிறது என்பதனை கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது.

கல்சியம் பறும் வழிகள்

| | கல்சியம் (மி.கி) | கலோரி |
|---|---|---|
| • கொழுப்பு குறைந்த பால் (8அவுன்ஸ்) | 310 | 130 |
| • வாதுமை (4 அவுன்ஸ்) | 300 | 668 |
| • கொழுப்பற்ற பால் (8 அவுன்ஸ்) | 299 | 90 |
| • 7 சோள முறுக்குகள் | 294 | 469 |
| • 5 நடுத்தர தோடம்பழங்கள்- | 280 | 325 |
| • பால் (8 அவுன்ஸ்) - | 275 | 150 |
| • 1 1/2 கோப்பை புரோக்கோலி (பூக்கோசு)- | 267 | 69 |
| • 2 கோப்பை பன்றி இறைச்சியும் போஞ்சியும்- | 266 | 536 |
| • 9அவுன்ஸ் றொஃபு (1 கோப்பை)- | 260 | 188 |

பசடேனாவிலுள்ள தென் கலிபோனியா பல்கலைக்கழகம் நடத்திய கல்சியம் இரத்த அழுத்தம் ஆய்வின் பெறு பேறுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

## வெறிநாய்க்கு ஒரு புதுவைத்தியம்!

### அக்யூபஞ்சர் மூலம் அதிரடி சிகிச்சை



குரைக்கும் நாய் கடிக்காது. 'கடிக்கும் நாய் குரைக்காது. கடித்தால் வம்புதான். ஊசிகள் போட்டு உடல் வலிக்கும். கடி வலி ஒரு புறம். ஊசி போட்ட வலி மறுபுறம். என்றாலும் ஒரு மாதிரியாக குணமாக்கி விடலாம்.

ஆனால் விசர் நாய் கடித்தால் வேறு வினையே வேண்டாம். இதுவரை விசர் நாய்க் கடிக்கு சரியான மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை.

கடிபட்டவர் நாய் போல் குரைப்பார். கதறுவார்.

அருகில் போவோரையும் ஒரு கடி கடித்தார் என்றால் அப்படிக் கடிபட்டவருக்கும் அதே கதிதான். வவ்...வவ்....

இப்போது யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் கூட வெறிகொண்ட விசர்நாய்களின் தொல்லைகள் அதிகமாகி வருகின்றன.

மருந்தும் இல்லை. ஒன்றும் இல்லை. சாதாரண நோய்க்கே வடக்கு-கிழக்கில் மருந்து கிடையாது. விசர்நாய்க் கடிக்கு மருந்துக்கு எங்கே போவது?

எல்லாம் இருக்க, இப்போது ஒரு புதிய செய்தி! மருத்துவ விந்தை!!

சீன நாட்டு வைத்தியர் டாக்டர் லிங் விசர் நாய்க்கடி பற்றி ஆழமாக யோசித்து ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்.

விசர் நாய் கடித்த பிறகு மருந்து தேடுவதை விட, விசர் நாய்க்கு விசர் போக வைத்தால் என்ன?

யோசித்ததோடு நிற்கவில்லை. செயலில் குதித்தார்.

அக்யூபஞ்சர் சிகிச்சையை ஆயுதமாகப் பாவித்து சிகிச்சையை ஆரம்பித்தார். அக்யூபஞ்சர் சிகிச்சை முறை சீனர்களது கண்டுபிடிப்பு.

பைத்தியம் பிடித்த நாய்களை டாக்டர் லிங் இப்போது குணப்படுத்தி வருகிறார்.

நோய்க்கிருமிகள் நாயின் மூளைக்கு செல்வதற்கு முன்னரே அக்யூபஞ்சர் ஊசிகள் அந்தக் கிருமிகளைக் கொன்று அழித்து விடுகின்றன.

நம் நாட்டிலும் இதே முறையைப் பயன்படுத்திப் பார்க்கலாமே!

## கொட்டாவி விடுவது கெட்ட செயல் அல்ல!



பலர் மத்தியில் கொட்டாவி விடுதலை அநாகரிகமான செயல் என்று கருதுகிறோம். கொட்டாவி விடுதல் ஒரு கெட்ட செயலல்ல. அது உடலின் இன்றியமையாத செயற்பாடுகளில் ஒன்று என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். தானாக வரும் கொட்டாவியை நன்றாக வாயைத் திறந்து வெளிவிடுவதே நல்லது. இதனை அடக்க முயன்றால் முகத்தில் வேண்டாத சுளிப்புகளும் நெளிப்புகளும் தோன்றி அசிங்கமான தோற்றத்தைத் தரும். கொட்டாவியை வெளியேற்றுவதில் ஏற்படும் அசௌகரியத்தை விட அதனை அடக்கும் போது ஏற்படும் முகத் தோற்றம் சுற்றி நிற்போர் நம்மையிட்டு மிகக் கேவலமாக எண்ண வைத்துவிடும்.

நமது உடலின் பிராண வாயு மற்றும் கரியமிலவாயு ஆகியவற்றின் செறிவைச் சமப்படுத்தும் போது தான் நமக்குக் கொட்டாவி வருகிறது. சுத்தமான காற்றோட்டமில்லாத ஓர் அறையில் ஒருவர் இருக்கும் போது உடலிலுள்ள கரியமிலவாயுவின் செறிவு அதிகமாக இருக்கும். மேலதிகமாகத் தேங்கியுள்ள கரியமிலவாயு வெளியேறி, அந்த இடத்தில் பிராண வாயு உட்செல்ல வழி பிறக்கிறது. கரிவாயு வெளியேறுதலே கொட்டாவியாகும்.

பலர் சுற்றியிருக்கும் போது ஒருவர் சுவாரசியமற்ற ஒரு கதையினைக் கூறும் போது உங்களுடைய சுவாசம் ஆழமற்றதாக இருக்கும். அப்போது இயல்பாகவே சோம்பலும் ஏற்படும். உடனடியாகக் கொட்டாவியும் வெளியாகும்.

இது தொற்றும் தன்மையுடையதுமாகும். பலர் ஒன்று சேர்ந்திருக்கும் போது ஒருவர் கொட்டாவி விட நேர்ந்தால் தொடர்ந்து ஏனையோருக்கும் இது தொற்றிக் கொள்ள நேரும்.

தூங்குவதற்கு நேரம் வந்தாகி விட்டது என்பதை முன்னறிவிக்கும் அறிகுறியாகவும் கொட்டாவி விளங்குகிறது.

## காந்தக்கல்லும் நோய் கொல்லும்!

காந்தக்கல் உடலில் ஏற்படும் பல உபாதைகளை நீக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. அழுத்தம் காரணமாக ஏற்படும் தாக்கங்கள், நரம்பியல் மண்டலத்தில் உண்டாகும் பல சிக்கல்கள் ஆகியவற்றை நீக்குவதற்கு காந்தக்கற்களைப் பயன்படுத்தலாம் என்ற முறை இப்பொழுது நடைமுறைக்கு வந்திருக்கிறது.

லண்டனிலுள்ள இந்திய மருத்துவரான டாக்டர் பாரதி வியாஸ், தன்னுடைய மருத்துவ மனையில் காந்தக்கல் சிகிச்சையினை அறிமுகப்படுத்தி வெற்றி கண்டு வருகிறார்.

காந்தக்கல் உடனடியாக இரும்பைக் கவரும் இயல்புடையது. உடலில் காணப்படும் செங்குருதியில் இரும்புச் சத்து ஓரளவு தென்படுகிறது. உடலில் எங்காவது வலி கடுமையாக ஏற்பட்டால் அக்யூபஞ்சர் முறையில் காந்தக்கல் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

## இளமையின் இரகசியம்

போல் நியூமானுக்கு 68 வயதாகிறது. அவருடைய உடல் பருக்கவில்லை. இப்போதும் கட்டுக் குலையாமல் கவர்ச்சிகரமாகக் காட்சி அளிக்கிறது. கட்டான கவர்ச்சி மிகு உடல் விசயத்தில் இரகசியம் அவரிடம் இருக்கிறது.

அவர் ஒரு மீன் பிரியர். தண்ணீரில் வேகவைத்து டப்பாவில் அடைக்கப்படும் கீரி மீன்வகையே அவருக்கு மிகவும் பிடித்தமான உணவு.

கொழுப்பு மற்றும் உப்பு நிரம்பிய பழங்கள், காய்கறிவகை ஆகியவற்றை அதிகமாக உண்ணுவதுடன் கோழி இறைச்சியையும் அன்றாடம் சேர்த்துக் கொள்ளுகிறார்.

தனது வயிற்றில் தொந்தி விழாமல் காத்துக் கொள்வதற்காக அவர் செய்யும் தேகப் பயிற்சி' மிகச் சாதாரணமானது. தினமும் 100 தடவைகள் இருந்து எழுந்து கொள்ளுகிறார். இருதயத்துக்கு வலுவூட்ட சைக்கிளில் தினசரி ஒரு குறிப்பிட்ட அளவு தூரம் ஓடுகிறார்.

மற்றுமொரு தினசரிப் பயிற்சி.

ஐஸ் கட்டிகளைக் கொண்ட ஒரு பைக்குள் நியூமான் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டு விடுகிறார். இதனால் முகத்துக்கு மட்டுமல்லாமல் உடலின் சகல பகுதிகளுக்கும் இரத்த ஓட்டம் துரித மடைகிறது. இதனால் அவருடைய சருமம் என்றும் இளமைத் தோற்றத்தைத் தருகிறதாம்.



www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# கண்ணே மதுமிதா

எழுதுவது ரசிகன்

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—15

இரகசிய நிலவறை வழியே வந்து, சுவரிலே பட்டன் அழுத்தி, சுவர் விலக வெளியே முகம் நீட்டி இடது புறம் திருப்பிப் பார்த்தாள். பின் வலது புறம் திரும்பியவள், எதிர்வந்த கரம் இறக்கிய குத்து முகத்தில் வாங்கினாள்.

முகத்தில் வாங்கிய குத்தில் அதிர்ந்து பின் புறமாய் உள்ளே சரிந்தாள் ரம்யா.

சரிந்த ரம்யாவை வலக்கரம் நீட்டி தாங்கினார் குலாம்ஷா.

தாங்கியபடியே நிலவறையின் உள் சுவரின் ஓரமாய் ரம்யாவை அணைத்தபடி ஒட்டி நின்று தற்காப்பு நிலை எடுத்தார் குலாம்ஷா.

முகத்தில் வாங்கிய குத்தில் பட்ட அதிர்ச்சி விலகி தலையை இருபுறமும் வேகமாய் ஆட்டி, சூழல் புரிந்து உஷாரானாள் ரம்யா.

குலாம்ஷாவின் கரத்தில் இருந்து விடுபட்டு நிமிர்ந்தாள் ரம்யா.

இடுப்பில் இருந்து ரம்போ கத்தி உருவி தயாரானாள்.

வெளியே இருந்தவன் வித்தை தெரிந்தவனாக இருக்கவேண்டும்.

முகத்தில் குத்தி விட்டு உடனே உள்ளே வர முயலவில்லை.

வெளியே வரட்டும் என்று காத்திருக்கிறான்.

அல்லது தன் ஆட்களை திரட்டிக் கொண்டுவர திட்டமிடு கிறான்.

குத்தியதோடு சரி. எட்டிக்கூடப் பார்க்க வில்லை.

வெளியே அவன் மட்டும்தானா? அல்லது ஒரு கூட்டமே காத்து நிற்கிறதா?

அவன் மட்டும் எனில் எதிர்ப்பது சுலபம். மிக மிகச் சுலபம். குறி தவறாது வெடி தீர்த்து கதை முடிப்பது சுலபம்.

குலாம்ஷா மனதுக்குள் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டார்.

குலாம் ஷாவின் காதருகே ரம்யாவின் சூடான மூச்சுக்காற்று வருடிச் சென்றது. மெல்லிய குரலில் அவர் காதோடு உதடு படப் பேசினாள்.

"தாமதிப்பதை விட முன்னேறி முடிவைப் பார்த்துவிடலாம் ஷா."

ரம்யா சொல்வது சரி என்றே பட்டது. உள்ளே காத்திருந்தாலும் ஆபத்துத் தான். எதிரிக்கு அவன் பலம் திரட்ட சந்தர்ப்பம் கொடுப்ப தாக அமைந்து விடும்.

"நீ உள்ளே இரு. நான் வெளியே சென்று நிலமையைச் சமாளித்து அழைக்கும் போது வா."

குலாம்ஷா சொல்ல ரம்யா பிடிவாதமாய் மறுத்தாள்.

"என்னைக் கோழை என்று நினைத்து விட்டீர்களா ஷா? மடிந்தால் இருவரும் மடிவோம். ஜெயித்தால் இருவரும் ஜெயிப்போம்."

சொல்லியபடியே வாசல் நோக்கி கிளம்பியவளை கரம் பிடித்துத் தடுத்தார் குலாம்ஷா.

"நில் ரம்யா. உன்னிடம் ஆயுதம் இல்லை."

"இருக்கிறது ஷா."

கத்தியை ஷாவின் முகம் எதிரே தூக்கிக் காட்டினாள்.

"வெளியே கத்தி உபயோகமாகாது ரம்யா. துப்பாக்கிதான் பயன்படும்."

"வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். அதையே கொஞ்சம் மாற்றிப் பாருங்கள். வல்லவளுக்கு...."

அந்த நேரத்திலும் பயமே இல்லாமல் சுவையாய் பேசும் அவள் உறுதி வியந்து ஷாவும் சிரித்தார். அவள் கன்னத்தில் மெல்லத் தட்டிச் சொன்னார்.

"வல்லவளுக்கு கத்தியும் ஆயுதம். உன் துணை பெரிய பலம் ரம்யா. எதற்கும் முதலில் நான் வெளியே பாய்கிறேன். பின்னால் நீ தொடர்."

சொல்லிவிட்டு வாயில் நோக்கிச் சென்றார் குலாம்ஷா.

வாயிலில் இருந்து கரணம் அடித்து வெளியே பாய்ந்தார்.

வெளியே இரண்டு பேர் நின்றிருந்தார்கள். தடி ஆசாமிகள்.

ஷா கரணம் அடித்து பாய்ந்து வர அவர்களின் ரைபிள்கள் சீறின.

கரணம் அடித்து ஷா உருண்டதால் குறிகள் தவறின.



கரணம் அடித்து தரையோடு ஒட்டிப் படுத்த ஷா பிஸ்டலை கோபப்பட வைத்தார்.

குறி தவறவில்லை. ஒருவன் நெற்றிப் பொட்டில் தோட்டா வாங்கிக் கொண்டு ரைபிளை நிலத்தில் நழுவ விட்டு தரையில் சாய்ந்தான்.

அடுத்தவனை நோக்கி பிஸ்டலை சீற விட அவன் நின்ற திசை நோக்கித் திரும்பிய ஷா வியந்தார்.

மல்லாந்து வானத்தைப் பார்த்தபடி விழுந்து கிடந்தான்.

நெஞ்சின் மையத்தில் செருகி நின்று ஷாவைப் பார்த்துக் கொண்டிருந்தது கத்தி.

ரம்யா கத்தி வீசியிருக்கிறாள்.

கத்தியை குறி தவறாமல் வீசுவது சுலபமான வேலையல்ல. அதுவும் ஒரு கலை. பயிற்சி முக்கியம். லாவகம் அவசியம். ரம்யா கலை தெரிந்தவள். இடம் அறிந்து பிரயோகிக்கத் தெரிந்தவள்.

தரையில் இருந்து எழுந்து உடையில் படிந்த மண் தட்டியபடி ரம்யாவைப் பார்த்தார் குலாம்ஷா.

வித்தை எப்படி, என் திறமை எப்படி என்பது போல ஷாவைப் பார்த்துக் கண் சிமிட்டினாள் ரம்யா.

பின் மல்லாந்து கிடந்தவன் அருகில் சென்று அவன் நெஞ்சில் இருந்த கத்தி உருவினாள். கத்தியில் இருந்த இரத்தத்தை அவன் சட்டையில் சுத்தமாகத் துடைத்தாள்.

உயிர் எடுத்த திருப்தியில் பளபளத்தது கத்தி. கத்தியை இரு புறமும் திருப்பிப் பார்த்து தன் இடுப்பில் இருக்கஇடம் கொடுத்தாள்.

ஷாவைப் பார்த்து ஏதோ சொல்ல உதடு திறந்தவள் அந்தச் சத்தம் கேட்டு முகத்தில் பதட்டம் காட்டினாள்.

நாய்கள் குரைக்கும் சத்தம்.

குரைத்த சத்தத்தில் இருந்தே வருவது பயங்கரமான நாய்கள் என்று ஷாவுக்கும் புரிந்து விட்டது.

"ஷா இனித்தான் ஆபத்து. பலம் திரட்டிக் கொண்டு வருகிறார்கள்."

சுற்றிலும் நோக்கினார் குலாம்ஷா.

கருங்கல்லுச் சுவர்கள். மாபெரும் உயரம். ஏணி வைத்து ஏறினால்கூட எட்ட முடியாத உயரத்தில் கம்பீரமாய் நின்றன.

"இங்கு தப்பிக் கொள்ள வாய்ப்பில்லை. பின்புறமாய் ஒரு வழி இருக்கிறது. காவல் அதிகமாக இருக்கும். எனினும் உள்ளது அந்த வழி மட்டும்தான். வாருங்கள் ஷா."

ரம்யா ஓடினாள். ரம்யாவின் பின்னால் குலாம்ஷாவும் ஓடினார்.

இப்போது நாய்கள் குரைக்கும் சத்தம் மிக அருகில் கேட்டது.

திடீரென்று அந்தப் பகுதியையே அதிர வைத்தபடி அபாயத்தைச் சொல்லும் அலாரம் கதறியது.

முன்னால் ஓடிக் கொண்டிருந்த ரம்யா ஓட்டத்தை நிறுத்தினாள்.

ஷாவுக்குச் சைகை காட்டியபடியே பக்கத்தில் இருந்த குரோட்டன் செடி மறைவு நோக்கிப் பாய்ந்தாள். பாய்ந்தார்.

டுமீல்...டுமீல்...டுமீல்.....

எதிரே இருந்து தோட்டாக்கள் கொல்வதே முடிந்த முடிவு என்று பறந்து வந்தன.

பின்புறமாய் குரைத்தபடி இருவரையும் நாய்கள் நெருங்கிக் கொண்டிருந்தன.

திரும்பிப் பார்த்தார் ஷா.

மூன்று நாய்கள்.

ஒவ்வொன்றும் ஒரு ஆள் உயரம். பெரிய செவிகள் வேறு ப முறுத்திக் கொண்டிருந்தன.

இரை கிடைக்கப் போகும் படு சந்தோசத்தில் மூன்று நாய்களும் நீளமான நாக்குகளை வெளியே தொங்கப் போட்டபடி நெருங்கி வந்தன.

குரோட்டன் செடி மறைவில் அவர்கள் பதுங்கியது தெரிந்து மறைவு நோக்கியும் சல்லடை போட எதிரே இருந்து பொழிந்தன தோட்டாக்கள்.

■

வைத்திலிங்கம் அந்த ஆடம்பரமான அறையில், அதி விலை உயர்ந்த கட்டிலில், அதி உயர்ந்த றீட்டாவின் மார்பில் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்.

"போதும் வைத்தி" என்றாள் றீட்டா.

"இன்னும் வேணும் றீட்டா" என்றார் வைத்தி.

வைத்திலிங்கத்தின் வெற்று மார்பில் ஒரு மலைப்பாம்பு அகலத்தில் தங்கச் சங்கிலி புரண்டு கொண்டிருந்தது.

றீட்டா- வைத்திலிங்கத்தின் அந்தரங்கக் காரியதரிசி. காரிய அரசிதான்.

முன் நிமிர்ந்து மிரட்டும் தாராள மார்புகள். அந்த தாராளம் தெரிய வேண்டும் என்பதற்காகவே ஆழமாக வெட்டப்பட்ட ரவிக்கை. வயிற்றின் சுழிப்புக்கள் தெரிய வேண்டும் என்பதற்காக மிக அக்கறை எடுத்து அபாயமான இறக்கத்தில் கட்டப்பட்ட சேலை.

வைத்திலிங்கம் என்ற பெரிய கோடீஸ்வரர் றீட்டாவின் அழகில் தன்னை இழந்தது ஒன்றும் ஆச்சரியமல்ல.

றீட்டாவின் வயிற்றில் முகத்தைப் புதைத்து, புதைத்த முகத்தை மெல்ல கீழே இறக்கும் சமயத்தில் இண்டர்கொம் அழைத்தது.

அடி வயிற்றில் வைத்தியின் முகம் புதைந்து ஏற்படுத்திய கூச்சத்தால் நெளிந்து கொண்டே இண்டர்கொம் எடுத்து காதில் வைத்தாள் றீட்டா.

றீட்டாவின் தொப்புள் சுழியில் நாவால் கோலம் போட்டுக் கொண்டிருந்தார் வைத்தி.

வைத்தியின் காதில் செல்லமாய் திருகிக் கொண்டே எதிர்முனை சொன்னதைக் கேட்டாள் றீட்டா.

"பொஸ்சுடன் பேச வேண்டும். நான் பி.எம்.லால்."

இண்டர்கொம்மை வைத்தியிடம் நீட்டி "உங்களுக்குத்தான். லால் பேசுகிறான்."

"மற்றவன் சந்தோசமா இருந்தால் பிடிக்காதே....நேரம் காலம் தெரியாத கரடிகள்."

றீட்டாவின் மென்மையான வயிற்றில் இருந்து முகம் உயர்த்தி முணு முணுத்து இண்டர்கொம் வாங்கி,

"என்ன லால்."

"மன்னிக்க வேண்டும் பொஸ்."

"மன்னிக்கலாம் சொல்லு."

"குலாம்ஷா பிரச்சனை பண்ணுகிறான். ரம்யா சாகவில்லை. ஏமாற்றிவிட்டாள் ராட்சசி. இப்போது நிலவறையில் இருந்து வெளியேறித் தப்பிக் செல்கிறார்கள்."

லால் சொல்ல வைத்தியின் முகம் சிவந்தது.

"நாய்களே! அங்கே என்னடா செய்து கொண்டிருந்தீர்கள்? குள்ளன் எங்கே?"

"குள்ளனாலும் தடுக்க முடியவில்லை. நம் ஆட்கள் நாலு அல்லது ஐந்து பேர் செத்துவிட்டார்கள் பொஸ்."

"இப்போது ஷா எங்கே."

"இதுவரை நம் எல்லையைத் தாண்ட வில்லை. அநேகமாக இப்போது மாட்டியும் இருக்கலாம்."

"இருக்கலாம் என்னடா இருக்கலாம். ஷா தப்பிக் கொண்டால் நம் தலை எழுத்தே மாறிவிடும். அதற்கு முன் உங்கள் தலை எழுத்தை நான் முடித்து விடுவேன். போ.....

இப்போதே நானும் வருகிறேன்."

"யெஸ் பொஸ்."

"போடா" எரிச்சலாய் இண்டர்கொம்மை வைத்தார்.

வேகமாய் கட்டிலை விட்டு எழுந்து சட்டை மாட்டி,

"றீட்டா நீ இங்கேயே இரு. போய் வந்து உன்னை கவனிக்க வேண்டும். இன்று நீ வீட்டுக்கு போகப் போவதில்லை."

"ஏன் டியர்?"

"என் கோபத்தை இறக்கி குளிரூட்டும் கலை உனக்குத்தானே தெரியும்."

வைத்தி புறப்பட்டார். வைத்தி புறப்பட்டுச் செல்லக் காத்திருந்து றீட்டா சென்று கதவை உட் புறம் தாழிட்டாள்.

கட்டிலில் அமர்ந்து அவசரமாய் இண்டர்கொம் எடுத்தாள்.

■

டி.ஐ.ஜி டென்சில் மதுமிதா அருகில் சென்று,

"காயம் பலமில்லை. தோளிலே தான் தோட்டா பட்டிருக்கிறது."

மதுமிதா பெருமூச்சு விட்டாள். இளமைகள் இரண்டும் விம்மித் தணிந்து கிறக்கம் காட்டின. மயக்கம் விதைத்தன.

பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டார் டென்சில்.

"டி.ஐ.ஜி"

மெல்ல அழைத்தாள் மதுமிதா.

"என்ன மதுமிதா."

"உங்களிடம் ஒரு விசயம் பேச வேண்டும். மனம் திறந்து பேச வேண்டும். இதுவரை என் மனதில் பாரமாய் அழுத்தும் பிரச்சனையை இறக்கி வைக்க வேண்டும். இனியும் பாரம் தாங்காது டி.ஐ.ஜி."

மதுமிதா மூச்சிறைக்கப் பேசினாள்.

"அவசரமான விசயமா மது?"

"ஆம், மிக அவசியமானதும் கூட. உங்கள் விசாரணைகளுக்கு. அவிழ்க்க முடியாத புதிர்களை எங்கிருந்து அவிழ்க்கத் தொடங்குவது என்று நீங்கள் அறிவதற்கு?"

"வன் மினிட்."

சொல்லிவிட்டு, தொலை பேசி எடுத்து வேகமாய் சில உத்தரவுகளை வழங்கிவிட்டு திரும்பினார் டி.ஐ.ஜி டென்சில்.

வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்க்க வைத்திலிங்கம்- மதுமிதாவின் அப்பா வைத்திலிங்கம் வந்து கொண்டிருந்தார்.

"அப்பா வருகிறார் மது."

டி.ஐ.ஜி. சொல்ல மதுமிதாவின் முகம் கறுத்தது.

■

(இன்னும் வரும்)

---

## சிந்தியா பதில்கள்

## பிரபு - குஷ்பூ திருமணம் உண்மையா?

தாய்க்கும்-தாரத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

செ. பிரகாஷ்-கண்டி.

தாய் உங்களை வயிற்றில் சுமந்தாள். தாரம் உங்களை மனதில் சுமக்கிறாள். இருவரும் ஏதோ ஒருவகையில் சுமப்பவர்கள்தானே.

•

காலங்களால் காதல் அழியுமா?

எஸ். சுகுமாரன்-நமுனுகல.

காதலர்கள் அழிந்தாலும் காதல் அழியாது சுகுமாரன்.

•

இன்றைய வடக்கு-கிழக்கு முஸ்லிம் அகதிகளின் நிலை பற்றி?

செல்வி. நஸ்லிஹா பறகத்துல்லா மல்லவப்பிட்டிய.

கடலில் இருந்து துப்பாக்கி என்னும் தூண்டிலால் தரையில் தூக்கி எறியப்பட்ட மீன்கள்.

•

கே.எஸ் ராஜா எங்கே?

என்.அன்ரனி-யாழ்ப்பாணம்.

என்ன அன்ரனி நீர்! தொலைக்காட்சிகளிலும் இப்போது அவர் குரல் கேட்கிறதே.

•

மனம் அமைதி பெற என்ன செய்ய வேண்டும்?

எஸ்.உமாப்பிரியா-வத்தளை.

மனதை அதன் விருப்பம் போல அலைய விடாமல் சுயகட்டுப்பாடு என்னும் கயிற்றால் கட்டிப் போட்டு வைத்திருக்க வேண்டும்.

•

நம்மிடம் வந்து பிறரைக் குறை கூறுபவர்கள் பற்றி?

எஸ்.கலாதாசன்- நானுஓயா.

நீங்கள் செவி கொடுத்துக் கேட்பதால்தானே அவர்கள் கூறுகிறார்கள். அவர்களை மட்டும் எப்படிக் கோபிப்பதாம்.

•

சதம் அடித்தோர் பட்டியலில் நவாப் பட்டோடி இங்கிலாந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதே! அவர் இந்திய வீரராயிற்றே?

ந.இராமச்சந்திரன்-திருகோணமலை.

பட்டோடி என்ற பெயரில் வேறு இந்திய வீரரும் இருந்தார். நவாப் பட்டோடி இந்தியாவில் பிறந்து இங்கிலாந்து சென்று அங்குள்ள கிரிக்கெட் குழுவில் ஆடி சாதனை படைத்தவர். முரசின் செய்தி சரியே.

•

உலக சாதனைப் புத்தகமான கின்னஸ் பற்றி உங்கள் கருத்தென்ன?

ரெங்கசாமி ஜீவா-பொகவந்தலாவ.

இன்றைய சாதனைகளை நாளைய சந்ததியும் தெரிந்து கொள்ள பக்குவமாய் குறித்து வைத்துள்ள புத்தகம் - பொக்கிஷம். சாதனைகளை ஒத்துக் கொள்ளாத சந்தேகப் பேர்வழிகளுக்கு அது ஒரு சாட்சியம்.

•

அன்பாகப் பேசும் ஆண்களின் இதயம் எப்படி இருக்கும்?

ஜொஹரா ஹுஸைன்-தியத்தலாவ.

அன்பொழுகும் பேச்சிலும் விஷம் இருக்கும். ஆகவே பேச்சை வைத்து மட்டும் இதயதரம் அறிய முடியாது. பேச்சோடு செயலையும் நோக்க வேண்டும்.

•

பூவையர் உள்ளத்தைத் திறக்க எந்தச் சாவியைப் பயன்படுத்தலாம்?

இம்டியாஸ் மும்தாஜ்-பேருவளை.

அன்புக்குமுண்டோ அடைக்கும் தாழ்.

•

மக்களின் குரல் நிகழ்ச்சியைப் பற்றி சிந்தியாவின் பதில் என்ன?

சிந்தினைமா இசான்-ஹேனமுல்லை.

புலிகளின் தவறுகளை மட்டுமே சுட்டிக் காட்டுகிறார்கள்.

•

ஆண்களை தடுமாற வைக்கும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

வி.எஸ்.மணியம்-பசறை.

இப்போதும் மேனகைகள் இருக்கிறார்கள். விசுவாமித்திரர்களும் இருக்கிறார்கள்.

•

பெண் புத்தி பின் புத்தி என்றால் என்ன?

வே.சேகர்-அக்கரப்பத்தன.

எந்தவொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருப்பதைத்தான் அப்படிச் சொல்லி யிருக்கிறார்கள்.

•

சில பெண்கள் ஆண்களைப் போல் முடியைக் கத்தரிப்பதன் நோக்கம்?

ஏ.எம்.எ.ரகீம்-பொத்துவில்.

அவர்கள் முடி, அவர்கள் சௌகரியம். உமக் கென்ன ரகீம் அதனால் அசௌகரியம்!

•

ரஷ்ய பாராளுமன்றம் யெல்சினை மீண்டும் அங்கீகரித்துக் கொள்ளுமா?

கின்னியா அஸ்ரப்டின்-கொழும்பு-7.

பாராளுமன்றத்தை அவரே அங்கிகரிக்கவில்லை. அடித்து விரட்டுகிறார். இனிச் சமரசத்திற்கு இடமில்லை.

•

குஷ்பு-பிரபு திருமணச் செய்தி உண்மையா?

ஆர்.பவானி-புத்தளம்.


வெறும் புரளி. தமிழக சஞ்சிகைகள் சில கிளப்பிவிட்ட கற்பனைக்கதை. முன்னரும் இவ்வாறான புரளிகள் உலவியதுண்டு. சிவாஜி சகுந்தலா, சிவாஜி-உஷாநந்தினி, பிரபு-ஸ்ரீப்பிரியா என்று இணைத்துப் பேசப்பட்டு, புனையப்பட்ட கதைகள் போலவே இதுவும்.

www.padippakam.com                    நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# ஊமை நெஞ்சங்கள்

-வை. நிரு-



மஞ்சுளாவுக்கு இன்று கல்யாணம். அதற்குரிய ஏற்பாடுகள் கோலாகலமாக நடந்து கொண்டிருந்தன. திருமதி எனும் பட்டத்திற்கு தாலியை ஏற்றுக் கொள்ள, மணப்பெண்ணாக அன்ன நடைபோட்டு நாணத்துடன் தலைகுனிந்து வரும் மஞ்சுளாவை ஒரு தரம் எதிரே நின்று பார்க்கிறான் கோபி. அவளது கண்களும் அவனைத் தேடியதால் அவன் பார்வை பட்டபோது அவளும் பார்த்து விட்டாள். நாணத்தால் இன்னும் அவள் தலை குனிய கோபியின் உதட்டின் ஓரம் ஒரு புன்னகை தவழ்கிறது. மனதுக்குள் என்ன நினைத்து புன்னகைக்கிறான்? தாலி கட்டும் போது அவள் நாணம் எப்படியிருக்கும் என்றோ? அல்லது அந்த நேரத்தில் கன்னம் சிவக்கும் போது என்ன செய்வாள் என்றோ?....

"மாங்கல்யம் தந்துனானே..."என்று தாலி கட்ட ஐயர் மந்திரம் சொல்லாவிட்டால் கோபி கற்பனையிலே லயித்திருப்பான். மஞ்சுவின் கழுத்தில் தாலியும் ஏறிவிட்டது. அம்மி மிதித்து அருந்ததியும் பார்த்தாச்சு. ஆரவாரங்களும் மெல்ல மெல்ல ஓய்ந்து கொண்டிருக்கும் போது "என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கள்" என கோபியின் பாதங்களில் விழுந்தாள் மஞ்சு.

விழுந்து கும்பிட்டவளை தன் இருகரங் களாலும் மெல்ல தூக்கியவன் 'மஞ்சு என் இதயத்தை தொட்டுக் கொண்டிருக்கும் உன்னை நான் ஆசிர்வாதம் பண்ணாமல் இருப்பேனா? ஏன் என் பாதங்களை தொட்டுக் கும்பிடுகிறாய்?' என மனதுக்குள் கேட்டவன் "தீர்க்க சுமங்கலியாய் வாழ என் வாழ்த்துக்கள்" என்று வாழ்த்தினான்.

அந்நேரம் அவள் மனதும் பேசிக் கொண்டது......

ஊரிலே பிரபல்யமான புடைவைக் கடை யொன்றின் முதலாளியான ஏகாம்பரத்தின் அண்ணனின் மகன்தான் கோபி. அவன் சிறுவயதிலே விபத்தொன்றில் பெற்றோர்களை இழந்ததால் சித்தப்பாவான ஏகாம்பரத் தோடுதான் வளர்ந்தான். பணத்திற்குப் பஞ்சமில்லாத ஏகாம்பரத்தின் வீட்டில் மனைவியின் அதிகாரம் தாண்டவமாடியது. தன் பிள்ளைகளை செல்லப்பிள்ளைகளாக வளர்த்து கோபியை ஒரு வேலைக்காரன் போல நடாத்தினாள். "கோபிக்கு புத்தி இல்லை. படிப்பு ஏறாது. அதனால் படித்தது போதும். படிப்பை நிற்பாட்டி கடைக்கு உதவியாக வைத்துக்கொள்ளுங்கள்" என புருஷனிடம் சொல்லி ஐந்தாம் வகுப்புடன் படிப்பை இடைநிறுத்தியது மட்டுமல்லாது, அவருக்குத் தெரியாமல் கொடுமைகளும் செய்தாள். அதை தாங்க முடியாத கோபி வேதனைப்பட்டு அழுத வேளைகளில் பக்கத்துவீட்டு மஞ்சுதான் யாருக்கும் அஞ்சாமல் வேலியால் எட்டி நின்று ஆறுதல் சொல்வதும், தன் வீட்டிலிருந்து சாப்பாடு எடுத்துக் கொடுப்பதும். அக்கம் பக்கத்து வீட்டில் இருவரும் இருந்த போதும் பணக்காரனான சித்தப்பாவோடு கோபி கோபுரத்தில் வளர்கிறான். மஞ்சுவோ ஆண்கள் துணை யின்றி தாயாரோடும், தங்கையோடும் குடிசையில் வாழ்கிறாள். அதனால் மஞ்சு வீட்டு சிநேகிதம் சித்திக்கு பிடிக்காமல் இரு வீட்டுக்கும் விரிசல்கள் ஏற்பட்டன. ஆனால் சித்திக்குத் தெரியாமல் கோபியும், மஞ்சுவும் சிநேகிதம்.

கோபியும், மஞ்சுவும் ஐந்தாம் வகுப்பு வரையும் ஒன்றாகப் படித்தபோதும் கோபியால் தொடர்ந்து படிக்க முடியாது சித்தப்பாவுக்கு உதவியாக கடையில் வேலை செய்தான். ஆனால் மஞ்சுவோ தன் தாயாரின் முயற்சியால் தொடர்ந்து படித்து இன்று ஒரு ஆசிரியையாக இருக்கிறாள். ஆனாலும் பருவங்கள் மாறி, உருவங்கள் மாறிய போதும் பாசங்கள் மாறாது கோபியும், மஞ்சுவும் சிநேகிதம். அன்று சித்தியாருக்குப் பயந்து பயந்து மஞ்சுவோடு பழகியவன் இன்று அவவுக்கு எதிரே துணிந்து நின்று கதைப்பான். வாலிபனாக வளர்ந்துவிட்டதால் அவனோடு முண்டப் பயந்து சித்தியார் விலகிவிட்டதும் அவனது துணிவுக்கு ஒரு காரணம்.

சிறுவயதிலிருந்து தனக்கு ஆறுதலாயிருந்த மஞ்சுவை எதிர்காலத்திலும் துணையாக்க வேண்டுமென்ற ஆசை வந்ததால் கோபிக்கு அவள் மேல் இனம் புரியாத காதல் உருவானது. ஆனால் எப்படி தன் காதலை மஞ்சுவிடம் தெரிவிப்பது? என்பதுதான் பிரச்சனை. 'என் காதலை மஞ்சு ஏற்றுக் கொள்வாளா? என் உத்தியோகத்திற்கு உன் தொழில் தகுதி வாய்ந்ததா? என்று அவள் நான் படிக்காததை சுட்டிக் காட்டிவிட்டால் என்னால் அதை தாங்கமுடிமா? அவள் தூய காதலைப் புரியாமல் உத்தியோகத்தில் கௌரவம் பார்த்துவிட்டால்....அவள் மேல் எனக்கு வெறுப்பு வந்துவிடுமே. கடவுளே வேண்டாம்! என்னால் மஞ்சுவை மறக்க முடியாது. என் காதலை தெரிவித்து எதிர்ப்பையும், வெறுப்பையும் சம்பாதிப் பதைவிட என் மஞ்சுவோடு நான் கனவுலகி லாவது சுதந்திரமாக வாழ வேண்டும். ஆம் நிஜவுலகில் நாம் வாழ நம் அந்தஸ்து தடையான போது கனவுலகிலாவது நான் மஞ்சுவுடன் வாழ வேண்டும்' என அவன் மனதில் ஓசைகள் ஓலமிட்டன.

"என்னிடம் பணமிருந்தும் என்ன பிரயோசனம்? படிப்பும், உத்தியோகமும் இல்லாத காரணத்தினால் தானே மஞ்சுவிடம் என் காதலை தெரிவிக்க முடியாமல் தவிக்கிறேன்' என்ற கவலைகள் கோபியின் மனதில் தோன்றியதால் அவன் தன்னைக் கவனிக்காமல் தாடி வளர்க்கவும், குடிக்கவும் தொடங்கினான். ஒரு நாள் குடித்துவிட்டு மஞ்சு வீட்டுக்குப் போயிருந்த போது அவனின் மாற்றங்களை அவள் அவதானித்துவிட்டாள்.

"கோபி, நானும் ஒரு கிழமையாக கவனிக்கிறேன் நீ குடிக்கிறமாதிரி தெரியுதே. ஏன் தாடியும் வளர்த்து அலங்கோலமாக திரிகிறாய்?" என்று கரிசனையோடுதான் விசாரித்தாள்.

"மஞ்சு உண்மையைச் சொல்கிறேன். நான் இப்போ குடிக்கிறேன். மற்றவர்களுக்கு தொந்தரவு செய்யாமல் என் பணத்திலதான் நான் குடிக்கிறேன். கூட்டத்தில வாழ்ந்தாலும் நான் ஒரு தனிமனிதன்தான். எனக்கென்று யார் இருக்கிறார்கள்? குடித்தாலும் யார் கேட்கப் போகிறார்கள்? என் கவலைகளை யாரிடம் சொல்வது? அதனால்தான் இந்த தாடி, குடி" என்றான் கவலையோடு.

"கோபி, மூடி மறைக்காமல் உண்மையைச் சொல்லிவிட்டாய் என்று பெருமைப்படாதே. நீ குடிப்பது எனக்கு எள்ளளவும் பிடிக்க வில்லை. உன் பணத்தில் குடிப்பது எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லைதான். இருந்தாலும் குடிப்பதால் நீ கெட்டுப்போய் விடுவாயோ என்று நினைக்கும் போது என் மனம் எவ்வளவு வேதனைப்படுகிறது என்று தெரியுமா உனக்கு? அதுமட்டுமல்ல, குடித்தாலும் யார் கேட்கப் போகிறார்கள் என்று கேட்டாயே. ஏன் நான் இல்லையா உனக்கு? நான் கேட்கக்கூடாதா? உன் கவலைகளை என்னிடம் சொல்லக்கூடாதா?" என்று மஞ்சு பரிவுடன் கேட்டாள்.

'மஞ்சு உன்னை விரும்புவதை சொல்ல முடியாததுதான் என் கவலை. அதை எப்படி உன்னிடம் சொல்வது? நான் குடிப்பது உனக்கு விருப்பமில்லையென்றால் உனக்காக குடியை விடுகிறேன். ஆனால் அதன் பின்னாவது என் விருப்பத்தைப் புரிந்துகொண்டு நீ என்னைக் காதலிக்க மாட்டாயா,' என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டு, "மஞ்சு என்னில் உண்மையான அக்கறையோடு குடிக்க வேண்டாமென்று சொன்னால் நான் அதை நிட்சயம் கேட்பேன்" என்றான்.

"உன் நலத்தில் எனக்கு அக்கறை இருக்குது கோபி. நீ இன்றிலிருந்து குடிப்பதை விட வேண்டும்" என்ற அவளின் வேண்டு தலுக்கு இணங்க அவனும் சம்மதித்தான்.

அன்றிலிருந்து அவன் குடியை விட்டபோது 'கோபி, நான் உன்னைக் காதலிப்பதால்தானே உன்னை குடிக்க வேண்டாமென்று தடுத்தேன். அப்போதாவது நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லையா? அல்லது புரிந்தும் புரியாத மாதிரி விலகிக் கொள்கிறாயா? நானாக என் காதலை தெரிவிப்போமென்றால், "பெட்டைக் கோழி கூவி பொழுது விடியுமா?" என்று கேட்பார்களே. அது போல பெண்ணான நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொன்னால் அக்காதல் மலருமா? அல்லது மரியாதையாக இருக்குமா? அன்பாக என்னோடு பழகினாலும் கல்யாணம் என்பதில் ஏழை, பணக்காரன் என்று கௌரவம் பார்க்கும் ஆளாக நீ இருந்தால்? காதோடு ஒட்டிய ஒற்றைக்கல் தோட்டோடும், கழுத்தோடு உறவாடும் மெல்லிய செயினோடும் இருக்கும் நான் எப்படி பணத்தோடு புரளும் உன்னிடம் என்னை விரும்புகிறாயா? என்று கேட்பது. கோபி என் காதலைப் புரிந்து கொண்டு நீயாக என்னை விரும்புகிறேன் என்று சொல்லமாட்டாயா?' என மஞ்சுவின் மனதிலும் ஏக்கங்கள் மூச்செடுத்தன.

"மஞ்சு! என் செல்லக்குட்டி!" என அழைத்துக்கொண்டு வந்த கோபியின் குரல் கேட்டு வீட்டுக்குள்ளிருந்து துள்ளிக்குதித்தோடி வந்த மஞ்சு 'என்னடா கண்ணா' என்று செல்லமாக கேட்க நினைத்தாலும் 'என்ன வேணும்' என்றுதான் கேட்டாள்.

என்ன வேணுமாவா? 'உன் இதயத்தைக் கேட்டால் தருவாயா' என்றுதான் கேட்க நினைத்தான். ஆனால் "எதையும் கேட்டால்தான் தருவாயா?" என்று டபில் மீனிங்கில் கேட்டான்.

'கேட்காமலே என் இதயத்தை தந்தால் ஏற்றுக் கொள்வாயா?' என்று மனதுக்குள் கேட்ட மஞ்சு, "உனக்குத் தேவையானது எதுவென்று கேட்டால்தானே தெரியும்" என்றாள் அழுத்தமாக.

"எனக்குத் தேவையானது எதுவென்று புரிந்து கொண்டு நீயாக தரமாட்டாயா?"

"தப்பாக நான் புரிந்துவிட்டால் நீ என்னை கோபிக்கமாட்டாயா?"

எனக்குத் தேவையானதை எப்ப நீ சரியாக புரிந்துவிட்டேனென்று நினைக்கிறாயோ அப்போ தா. அதுவரையும் காத்திருக்கிறேன். இப்போ ஸ்ரோங்கா ஒரு ரீ தா" என்று உரிமையோடு கேட்டு வாங்கிப் பருகினான்.

அன்றும் மஞ்சு வேலைக்குப் போகும் போது வழமை போல அந்த இடத்தில் கோபி தனியாகத்தான் நின்றான். "குட்மோர்னிங்" என்று ஒருவரையொருவர் தெரிவிப்பதைத் தவிர வேறு எதுவும் அந்த இடத்தில் கதைப்பதில்லை. ஆனால் இருவர் மனதிலும் ஏக்கங்கள்.

'நாள்தோறும் இந்நேரங்களில் உன்னோடு கதைப்பதற்காகத்தானே இந்த இடத்தில் தனிமையில் நிற்கிறேன். அதை நீ புரிந்து கொள்ளாமலா "குட்மோர்னிங்" என்ற வார்த்தையுடன் புன்னகை மட்டும் சிந்தி விட்டுப் போகிறாய்? உனக்கு நான் தகுதியில்லாதவன் என்றபடியால் தானா இந்த இடத்தில் கதைக்காமல் போகிறாய்? பரவாயில்லை. உன் புன்னகை சிந்தும் வதனத்தை தனிமையில் நின்று ரசிப்பதற்காவது நான் இந்நேரங்களில் காத்திருப்பேன்' என தன்னோடு கதைக்காமல் போன மஞ்சுவை நினைத்து கோபியின் மனம்அழுதது.

'கோபி, தெருவில் மட்டும் ஏன் என்னோடு நீ கதைப்பதில்லை. கதைப்பதால் மற்றவர்கள் தப்பாக எண்ணக்கூடும் என்று நினைத்து தப்பிக்கொள்கிறாயா? அல்லது வேறு யாரை யாவது எதிர்பார்த்துக்கொண்டு நிற்கிறாயா? ஒருவேளை உனக்கென்று காதலியாரும் இருக்கிறார்களா? கடவுளே அப்படி யாரும் இருக்கக்கூடாது. வெகுநாளா மனதுக்குள் நான்தான் உன்னைக் காதலிக்கிறேன். என்னைத் தவிர உனக்குவேறுயாரும் இருக்கக்கூடாது. நாள்தோறும் நான் வரும் நேரத்தில் நீ காத்திருப்பது எனக்காகத்தான் என்ற என் சந்தோஷ கனவுகளில் மண்ணை அள்ளித் தூவாதே. இன்று எப்படியும் என் விருப்பத்தை உன்னிடம் சொல்லத்தான் போகிறேன். அதன் பிறகுதான் நீ என்னில் எப்படியான அன்பு வைத்திருக்கிறாய் என்று தெரியும்" என்று கோபியைக் கண்டதும் தன் மனதோடு கதைத்துக் கொண்டு சென்ற மஞ்சுவுக்கு திடீரென தன் தாயார் சொன்னது ஞாபகம் வர திரும்பி கோபியிடம் வந்தாள். "கோபி, அம்மா உன்னோடு ஒரு முக்கியமான விசயம் கதைக்க வேண்டுமாம். நேரமிருந்தால் வீட்டுக்கு வரும்படி உன்னிடம் சொல்லச் சொன்னவ. இப்பத்தான் எனக்கு ஞாபகம் வந்தது. வீட்டுக்குப் போறியா? என்று கேட்டதற்கு அவன் சரியெனப் பதிலளித்தான்.

திரும்ப வந்த மஞ்சு தன்னிடம் என்ன கதைக்கப் போகிறாள் என்று பலவாறு சிந்தித்தவனுக்கு அவள் சொன்னது ஏமாற்றமாகத்தான் இருந்தது. இருந்தும் 'காதலித்தால் துணிந்து நில்! அல்லது முற்றாக மற!' என்று யாரோ கூறியது இப்பத்தான் அவன் மனதில் உதித்தது. மறக்க முடியாத மஞ்சுவிடம் தன் காதலைச் சொல்லத் துணிந்துவிட்டான். 'எப்படியாவது இன்று பின்னேரம் உன் வீட்டுக்கு வரும் போது என்னைக் காதலிக்கிறாயா என்று கேட்கத்தான் போகிறேன். என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை. என் வாழ்க்கை அத்தியாயத் திற்கு ஒரு அர்த்தம் இருப்பதாயின் நீ என்னை விரும்புவாய். இல்லையேல் இந்த அத்தியாயம் தனிமையிலே அர்த்தமில்லாமல் தொடரட்டும்' என்று இரண்டில் ஒரு முடிவைத் தெரிந்து கொள்ள அந்தப் பின்னேரம் எப்ப வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அதற்கிடையில் மஞ்சுவின் தாயார் சந்திக்கச் சொன்னது ஞாபகம் வர அங்கு சென்றான்.

இருவரும் தங்கள் காதலை ஒருவருக் கொருவர் தெரிவித்துக்கொள்ள எதிர்பார்த்த நேரம் வந்த போது கோபி 'கங்ராஜுலேஷனஸ்' என மஞ்சுவுக்கு கைகொடுத்து வாழ்த்தினான்.

வாழ்த்துக்கள் ஏன் என்று தெரியாத மஞ்சு விழித்துக்கொண்டு "வாட்ஃபோர்" என்று கேட்டாள்.

"என்ன மஞ்சு? அம்மா உனக்கு விசயத்தை சொல்லல்லையா?"

"கோபி புரிகிற மாதிரி சொல்லு."

"உனக்கும் ரஞ்சன் மாஸ்டருக்கும் கலியாணம் ஃபிக்ஸ் என்பது உனக்கு இன்னும் தெரியாதா?"

"கோ....ஃ...பி நீ என்ன சொல்கிறாய்? எனக்கும் ர.....ஞ்சன் மாஸ்டருக்குமா கலியாணம் ஃபிக்ஸ்?" நா தடுமாறி வார்த்தைகள் வெளிவர மறுத்தன. அந்த நொடிப்பொழுதில் அவள் கனவுகள் கலைந்து போக ஏமாற்றத்தில் மௌனமானாள்.

"நல்ல விசயத்தை சொல்லும் போது சந்தோசப்படாமல் ஏன் மஞ்சு மௌனமாக இருக்கிறாய்?"

'சந்தோசமா? அது எனக்கா அல்லது உனக்கா? என்னை நீ விரும்புவாய் என்றுதான் நினைத்தேன். ஆனால் யாரோ ஒருவனுக்கு என்னைத் தள்ளிவிட்டு நீ யாரும் பணக்காரப் பெட்டையை செய்யப் போவதை நினைத்தால் உனக்குத்தான் சந்தோசமாக இருக்கும். எனக்கு எப்படி சந்தோசமாக இருக்கும்? நல்லவேளை என் காதலைச் சொல்லி உன்னை நான் பகைக்கவில்லை. என்னதான் இருந்தாலும் நீ என் அன்புக்குரிய கோபிதானே. நீ சந்தோசமாக வாழ்ந்தால் எனக்கு அது போதும்.' என மனதுக்குள் சிந்தித்தவள் "கலியாணம் என்றதும் சந்தோசம் தாங்காமல் மௌனமாகிவிட்டேன்." என்று ஒரு விரக்தி புன்னகையுடன் பதிலலித்தாள்.

தன்னோடு வாழ கனவு கண்ட மஞ்சு ஏமாந்து போனதால்தான் மௌனமானாள் என்பதை கோபி அறிவானா?

'மஞ்சு உனக்கு சந்தோசம் என்று எனக்குத் தெரியாதா? உன் அந்தஸ்த்துக்கும், அழகுக்கும் ஏற்ப படித்தவன், உத்தியோகம் பார்ப்பவன் கணவனாக வந்தால் சந்தோசமாகத்தானே இருக்கும். உன்னோடு வாழ கனவு கண்ட என்னிடம்தானா உன் அம்மா, ரஞ்சன் மாஸ்டர் உன்னை கலியாணம் செய்ய விரும்பிக் கேட்டதைச் சொல்லவும், அவரின் குணநலங்கள் எப்படியென்று விசாரிக்கவும் வேண்டும்? அவ கதைத்த போது என் மனநிலை எப்படி இருந்தது என்று சொல்லிப் புரிய வைக்கமுடியுமா? எனக்கு கனவுகள்தான் நிரந்தரமா? சித்தி செய்த கொடுமைகளுக்கு நீ ஆறுதல் சொன்னாயே. இப்ப இந்த வேதனைக்கு யாரிடம் ஆறுதல் கேட்பேன்? என்னை குடிக்க வேண்டாம் என்று தடுத்தாயே! மீண்டும் அதைச் செய்யத் தூண்டிய எனக்கு எங்கேயாவது போய் மோத வேண்டும் போலிருந்தது. ஆனால் மஞ்சு நீ என்னை ஏமாற்றவில்லை. உன்னிடம் கேட்டிருந்தால் நீ என்னை விரும்பியிருப்பாய். பாழாய்ப்போன படிப்பும், உத்தியோகமும் இல்லாததால் நான்தான் உன்னிடம் கேட்கவில்லை. அதனால் என் மஞ்சு என்னை ஏமாற்ற வில்லை. நான்தான் ஏமாந்துவிட்டேன்' என்று ஓலமிட்ட என் மனது மீண்டும் 'என் மஞ்சுதானே வாழப் போகிறாள். நான் வருத்தப் பட்டு அவளை வெறுக்காமல் விருப்பத்தோடு வாழ்த்துவோம்' என்று தேற்றியது.

மஞ்சுவின் தாயாரோடு கதைக்கும் போது தனக்கு நேர்ந்த அவல நிலையை மீண்டும் ஒருதரம் நினைத்துப் பார்த்துவிட்டு "மஞ்சு உன்னை விரும்பி ரஞ்சன் மாஸ்டர் தான் கேட்டார். அப்படிப்பட்ட நல்ல குணமுள்ளவர் உனக்கு கிடைப்பாரா? உன் அந்தஸ்துக்கும், அழகுக்கும் ரஞ்சன் மாஸ்டர்தான் பொருத்தம் என்று நான்தான் உன் அம்மாவிடம் சொன்னேன். அப்போதே கல்யாணம் ஃபிக்ஸ் என்றாகிவிட்டது. மஞ்சு நீ ஒன்றுக்கும் யோசிக்காமல் கலியாணத்திற்கு சம்மதம் என்று சொல்லு. கல்யாணச் செலவு முழுக்க என்னுடைய பொறுப்புத்தான் என்றான் கோபி.

'.....ஏழையென்றபடியால்தான் என்னை நீ விரும்பவில்லை என்று நினைத்தேன். ஆனால் எனக்கு உன்னுடைய செலவிலே கலியாணத்தை முன்னின்று செய்தது மட்டுமல்லாது, அன்பளிப்பாக உன் வீட்டையும் எழுதித் தந்துவிட்டாயே. இந்த நன்றிக்காவது உன் பாதங்களை தொட்டு கும்பிட்டால்தான் எனக்கு நிம்மதி.' என்று உளமாரத் துதித்தான்.

## குட்டிக்கதை

# இவர்களும் மனிதர்கள்தான்!

-மாத்தளை ஆர்.பாலகிருஷ்ணன்-

அன்று வெகுநேரமாகியும் நளினி தூங்கவேயில்லை. கட்டிலில் குப்புறப்படுத்து முகத்தை தலையணையில் புதைத்தபடி அழுது கொண்டிருந்தாள்.

அப்போது மெதுவாக அடிமேல் அடி வைத்து அவளது கட்டிலை நெருங்கிய தங்கம் "ஏம்மா நளினி....இப்படி நேரங்கெட்ட நேரத்திலெல்லாம் தண்ணி வென்னி கூட இல்லாம அழுதுகிட்டேயிருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும்? எழுந்திரிச்சி கொஞ்சம் ஆப்பிள் ஜூஸ் குடிம்மா என் கண்ணில்ல" ஜூஸ் அறிப்போவுது பாரு!" என்றாள் நளினியின் தலைமயிரைக் கோதியபடி.

நிமிர்ந்து தங்கத்தை நோக்கிய நளினி "அம்மா..... நான் உண்மையிலேயே நல்லாயிருக்கணும்னு நீ நெனச்சா அந்த மாப்பிள்ள எனக்கு வேண்டாம். இந்தக் கல்யாணத்த உடனடியா நிறுத்து" என்றாள் அழுது கொண்டே.

"ஏம்மா....அந்த மாப்பிள்ளைக்கு என்ன கொறைச்சல்? கோடி கோடியா சொத்தி ருக்கு. நாலுகாரும், மூணு வேனும் வச்சிருந்தாரு. அதோட ரெண்டு மூணு



சின்னவீடும் வச்சிருக்கார்னு நம்ம தரகர் சொன்னாரே! இத விட நல்ல மாப்பிள்ள நமக்குக் கெடைப்பாரா? நல்லா யோசிச்சிப்பதில் சொல்லம்மா" என்றாள் தங்கம்.

"நீ என்ன சொன்னாலும் சரி எனக்கு அந்த மாப்பிள்ள வேணவே வேணாம். வேணும்னா நம்ம பக்கத்து வீட்டு மாமாவைக் கட்டிக்கிறேன்." என்றபடியே நளினி கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

அச்சமயம் பார்த்து அங்கு வந்து சேர்ந்த செல்லம் "என்ன ரெண்டு பேருக்கும் மூஞ்சியே சரியில்லயே....என்னா யோசனை?" என்றாள் வெற்றிலைக்காவி படிந்த தன் பற்களைக் காட்டியபடியே. "ஒண்ணுமில்ல செல்லி....நளினிக்கு நான் ஒரு கோடீஸ்வர மாப்பிள்ளையப் பார்த்து வச்சிருக்கேன். அவ என்னடான்னா அந்த மாப்பிள்ள வேணாம், பக்கத்து வீட்டு மாமாதான் வேணுங்கிறா" என்றாள் கவலையோடு.

"யாரு.....அந்த சோடாப்புட்டிக் கண்ணாடி சோணாசலமா? அவருக்கு மட்டும் என்ன கொறைச்சலாம்? அந்த சோடாப்புட்டிக் கண்ணாடியும், நரைச்ச முடியும், ரெண்டு ஓட்டைப்பல்லும் என்னா அழகு....என்னா அழகு..... எனக்குக் கூட அவருமேல ஒரு கண்ணுதான். அவரு மட்டும் ஓம் பொண்ணுக்குப் புருஷனா கெடச்சிட்டா இந்த உலகத்தில நளினி மாதிரி அதிஷ்டக்காரி வேறயாருமே இருக்க முடியாது. அவரோட பொஞ்சாதியும், ரெண்டு பையன்களும் இவள நல்லா கவனிச்சிக்குவாங்க. முடிஞ்சா தரகர் மூலமா பேசிப்பாரு தங்கம், விட்டுடாதே...!"

"அப்படியா சொல்ற? சரி நாளைக்கே எப்படியாவது பேசி முடிச்சிடுறேன். என்னம்மா நளினி இப்ப உனக்கு சந்தோஷந்தானே.....இனியாவது இந்த ஜூஸைக்குடி...நல்லா ஆறிப்போயிரிச்சி!" என்றபடி ஒரு கிளாஸை எடுத்து நீட்டினாள் தங்கம்.

"அம்மான்னா அம்மாதான்.... என்ற வாறே சிரித்த முகத்தோடு தங்கத்தைக் கட்டிப்பிடித்து அவளது இரு கன்னங் களிலும் மாறி மாறி முத்தமழை பொழிந்தாள் நளினி.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த செல்லம் "நான் கொடுத்தத திருப்பிக் கொடுத்தா முத்தமாக்கொடு அத மொத்த மாக்கொடு......" என உரத்த குரலில் பாடியபடி தன் கன்னத்தையும் காட்டினாள்.

அதே சமயம் "ராத்திரி பத்து மணிக்கும் மேலாச்சி. இன்னும் தூங்காம எல்லாரும் கத்திக்கிட்டு என்ன செய்றீங்க?" என கத்திக்கொண்டே நர்ஸ் ஒருத்தி அந்த இடத்திற்கு வந்தது தான் தாமதம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் அந்த 46ம் நம்பர் வார்ட் கப்சிப் என அமைதியடைந்தது.

(யாவும் கற்பனை)

சிறுகதை



# தண்டனை

-முகில்வண்ணன்-

செந்தில் நாதனும் முரளிதரனும் நல்ல நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒரே காரியாலயத்தில் வேலை செய்வதாலும் பக்கத்துக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் நெருங்கிப் பழக வேண்டிய சந்தர்ப்பங்கள் நிறையக் கிடைத்தன.

செந்தில் நல்ல குடிகாரன். கந்தோர் விட்டதும் 'பாரு'க்குச் சென்று ஒரு அரைப் போத்தல் போடாமல் வீட்டுக்குச் செல்ல மாட்டான். நிறை வெறியிலேயே வீடு செல்வான். முரளிக்குக் குடிப்பழக்கம் இல்லாததால் முதலில் அவனைத் தட்டிக் கழித்துவிட்டு சென்று விடுவான்.

சொந்தில் திருமணம் முடித்து இரு குழந்தைகளுக்குத் தந்தையாகி இருந்தான். அவனுக்கு மனைவி இந்திராவும் குழந்தைகள் சுதந்திரா, விசித்திரா என்று இரு பெண்களும் இருந்தனர். முரளிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அவனுக்கு செந்திலை விட வயது குறைவுதான்.

செந்தில் பெற்றோரின் விருப்பத்திற்காக இளமையிலே கல்யாணம் முடித்ததாகவும், வசந்தகாலமான இளமைக்காலத்தை அனுபவிக்க முடியாமல் கால்கட்டுப் போடப்பட்டு விட்டதாகவும் கூறுவான். அதுமட்டுமின்றி இளமையிலேயே தன் மனைவி இந்திராவை 18 வயதிலே தாய்மை யடையச் செய்துவிட்டதாகவும் அவளும் இளமையிலேயே குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டி ஏற்பட்டதால் வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லை என்றும் குறைபட்டுக் கொள்வான். அவனது மனதில் இக் குறை நிரந்தரமாகக் குடியேறிவிட்டது எனலாம். அதனால் தானோ என்னவோ குடிப் பழக்கத்தையும் கைக்கொண்டான் என்பது புரியவில்லை.

செந்திலுக்கு ஆறுதலுக்காக முரளி கூறுவான். "செந்தில் நீ அதிஷ்டக்காரன்டா. எத்தனை பேர் குடும்பப் பொறுப்பின் காரணமாக 35 வயதாகியும் மணம் முடிக்காமல் அதற்காக ஏங்கித் தவிக்கின்றார்கள். அப்படி இருக்க வாய்ப்பு வலிய வந்தும் நீ வருத்தப்படுகின்றாய். 'டேக் இற் ஈஸி அன்ட் என்ஜோய் த லைப்" என்றான்.

"போடா நீ புரியாமல் பேசுகிறாய். பள்ளிப் பருவம் போல இளமைக் காலமும் இனிமை நிறைந்தது. அதை அனுபவிக்காமல் குடும்பம் என்னும் கூட்டுக்குள் அடைபட்டுக் கொண்டால் அதன் அருமை தெரியாது. ஆடி அடங்கிய பின்னர்தான் இதில் அகப்பட வேண்டும். யூ ஆர் லக்கி" என்பான் அவன்.

கந்தோரில் ஏதும் பாட்டி நடந்தால் செந்தில் 'ஃபிளாட்' ஆகிவிடுவதும், முரளி கூட்டிவந்து வீட்டில் கொண்டு விடுவதும் வழக்கமாக இருந்தது. அப்படி ஒரு நாள் கூட்டி வந்து விட்டபோது செந்திலின் மனைவி இந்திரா கலங்கிய கண்களுடன் சொன்னாள்,

"இஞ்ச பாருங்க முரளி இவர் இப்படித்தான் தினமும் குடிவெறியுடன் வந்து விழுவார். விடிந்ததும் எழுந்து செல்வார். குடும்பத்தில என்ன நடக்கிறது என்பது பற்றியே சில மாதங்களாக இவருக்குத் தெரிவதில்லை. இந்தப் பிஞ்சுகள் கூட அவருடன் ஒட்டி உறவாடுவது இல்லை. பயந்து ஒதுங்கி விடுகின்றன. நீங்கள் அவரது நல்ல நண்பர் போல தெரிகின்றது. அவரைக் கொஞ்சம் புத்தி சொல்லித் திருத்தக் கூடாதா?" என்று கேட்டாள்.

அவளது கலங்கிய கண்களையும் கால்களைப் பற்றியபடி இருபக்கமும் இருக்கும் குழந்தைகளையும் பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது முரளிக்கு.

"நானும் சொல்லிப் பார்க்கிறேன். அவர் கேட்கிறாரில்லை. எதற்கும் முயற்சிக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

இப்படியான நாட்களில் செந்திலுக்கு இந்த உலக நிகழ்வுகள் அடுத்த நாள் காலையிலே தான் தெரியும். அதுவரை மயங்கிய நிலையிலேயே தூங்கிப் போவான். சாப்பாடு எதுவும் இல்லை. இதனால் அவனது உடல் பலவீனமாகி வருவதை அவன் உணர்ந்தாலும் பழக்கத்தைக் கைவிட முடியவில்லை.

அன்றிலிருந்து சாத்தானுக்கு வேதம் ஓதும் முயற்சியில் இறங்கினான் முரளி. அவனது முயற்சி மூன்று மாதங்களில் ஓரளவு வெற்றி பெற்றது.

ஆமாம் அவனது சொற்படி கேட்கத் தொடங்கினான் செந்தில். வேலை முடிந்ததும் 4.15க்கு வீட்டுக்குப் புறப்படுதல், ஆறுமணி வரை வீட்டு வேலைகளைக் கவனித்தல், ஆறுமணிக்குப்பின்னர் முரளி வீட்டுக்குச் சென்று வரும்போது அரைப் போத்தல் வாங்கி வருதல்- தவறணையில் வாங்கினால் விலை குறையவாங்கலாம் என்ற ஏற்பாடு. வீட்டிலே வைத்துக் குடித்து சாப்பிட்டு விட்டுப் படுத்தல், முரளி வீடு திரும்புதல் இதுதான் ஏற்பாடு.

இந்த ஏற்பாட்டின் படி இரண்டு மூன்று கிழமைகள் நடைபெற்ற போது இந்திரா மட்டுமின்றி குழந்தைகளும் தந்தையைப் புதுமனிதனாகக் கண்டனர். பேசி மகிழ்ந்தனர்.

நாட்கள் செல்லச் செல்ல இந்த மாற்றத்தில் சிறு சிறு மாற்றங்கள் ஏற்பட்டன. முரளியை வற்புறுத்தி செந்தில் குடிக்க வைத்தான். 'எனக்குப் 'பாட்னர்' வேண்டும் இல்லாவிட்டால் நான் 'பாரு'க்குச் சென்று விடுவேன்' என்று பயம்காட்டினான். கொஞ்சம் கொஞ்சமாக முரளியும் குடிக்க ஆரம்பித்தான். அரை இப்போது முழுசாகி அதற்கு மேலும் செல்லத் தொடங்கியது. இருவருக்கும் 'டேஸ்ட்' செய்து கொடுப்பதில் ஈடுபட்டாள் இந்திரா.

புனிதரையும் சாத்தான் வென்று விட்டதைக் கண்டு மனம் கலங்கினாள் இந்திரா. என்றாலும் இது வீட்டில் நடப்ப தால் ஒரு நிம்மதியாக இருந்தது.

காலம் உருண்டோடியது. ஐந்து வருடங்கள் சென்று இருக்கும். அப்போது பெரும் அதிர்ச்சியைத் தந்தான் செந்தில். ஆமாம், சொல்லாமல் கொள்ளாமல் பத்து வயது சுதந்திராவையும் ஒன்பது வயது விசித்திராவையும் அனாதைகளாக்கி விட்டு இந்திராவை விதவையாக்கி விட்டான்.

நட்ட நடுநிசியில் குடிபோதையில் இருக்கும் போது வந்த மாரடைப்பு மூலம் காலன் அவனைக் கவர்ந்து சென்றான். செய்வதறியாது திகைத்து நின்றாள் இந்திரா. பிரேத பரிசோதனையின் போது அவனது இருதயம் சுருங்கி இருந்ததாக அறிவிக்கப் பட்டது. சாவீட்டில் அவர்களது சுற்றத்தாருடன் நின்று பாடுபட்டான் முரளி. அன்றிலிருந்து குடியைவிட்டான். எட்டு நாட்கள் அங்கேயே தங்கி நின்றபின் வீடு சென்றான். அதன் பிறகும் அடிக்கடி வந்து நலம் விசாரித்துச் செல்வான். இந்திராவின் அழுகை அவனை வாட்டி வதைத்தது.

31ம் நாள் தொடக்குக் கழிவு வரை சொந்தம் பந்தம் எல்லாம் கூடிக் குலவியது. அதன்பின் எல்லாம் அகன்று விட்டது. ஆமாம் அவள் இப்போது வருமானம் இல்லாத விதவை. இரு குழந்தைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பு அவளுக்கு இருந்தது. இதனால் அவள் தங்களிடம் ஏதும் உதவிக்கு வரலாம் என்று ஒதுங்கிக் கொண்டனர்.

முரளி வழமைபோல் வந்தான். உதவி செய்தான். அவளது குடும்ப விஷயங்களில் அக்கறை எடுத்தான். காசு பணம் கொடுத்து உதவினான். அவளது பென்சன் விடயமாக ஓடியாடித் திரிந்தான். அவளைக் கொழும்புக்கு இரண்டு மூன்று முறை கூட்டிச் சென்றபின் அதில் வெற்றியும் கண்டான். இவ்வாறு திரிந்ததில் ஒருவருடம் ஓடிவிட்டது. இந்த ஒரு வருடமும் முரளியே குடும்பத்தைக் கவனித்தான்.

அவளது முழுத்தொகை கிடைத்ததும் அதில்தான் முரளியிடம் பெற்ற கடனைக் கொடுத்தாள். மிகுதியை வங்கியிலிட்டாள். இனித்தான் மாதா மாதம் பென்சன் வரப் போகிறதே. இனி அவளுக்குக் கஷ்டம் இல்லை.

அவளது குடும்பத்தினர் இப்போது நெருங்கி வர ஆரம்பித்தனர். அவளுக்கு ஆலோசனை கூறத் தொடங்கினர். சொந்தம் என்பதால் புறக்கணிக்க முடியவும் இல்லை. இதனிடையில் பன்னிரண்டு வயதில் பருவம் அடைந்தாள் சுதந்திரா. அடுத்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள் விசித்ரா.

முரளியின் ஆலோசனையின் பேரில் பூப்பு நீராட்டுவிழா கொண்டாடப்பட்டது. இதில் சொந்தக்காரர்களுக்கும் இந்திராவுக்கும் முரண்பாடு ஏற்பட்டது.

"நீ இருக்கும் நிலையில் இது அவசியம்தானா? நீ ஏன் அவன் சொற்படி நடக்கிறாய்? அவனுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் என்ன சம்பந்தம்? அவனை மெல்லமாக வெட்டி விடு" என்றனர்.

"முரளி மட்டும் இல்லை என்றால் நான் இப்போது நடுத்தெருவில் நின்று பிச்சை எடுக்க வேண்டும். இந்த இரண்டு வருடமும் என்னைப் பற்றிய எண்ணம் உங்கள் எவருக்கும் இருக்கவில்லை. முரளி எனக்காகக் கஷ்டப்பட்டுத் தன் நேரம் காலத்தையும் செலவிட்டு உதவி செய்து இருக்கிறார். அவருக்கு நான் எந்த பிரதி உபகாரமும் செய்யவில்லை. இப்போது வந்த நீங்கள் முரளியை விரட்டும்படி கூறுகிறீர்களா? நீங்கள் எல்லாரும் என்னைத் தனியே விட்டாலும் பரவாயில்லை. நான் முரளியை விரட்டத் தயாரில்லை" என்று அடித்துக் கூறிவிட்டாள்.

"நீ அவனை வைத்து இருப்பதாகவும் அதனால் தான் அவன் இதுவரை திருமணம் செய்யாமல் இருப்பதாகவும் ஊரார் கூறிக்கொள்கிறார்கள். இது உனக்கு நல்லாக இருக்கிறதா?"

"ஊரார் என்னைப் பற்றி இவ்வாறு கூற மாட்டார்கள். இது உங்கள் சந்தேகம் என்பது எனக்குப் புரிகின்றது. இது பற்றி நான் கவலைப்படப் போவதில்லை." என்று கூறிவிட்டு அழுதாள் இந்திரா.

"எங்களை விட உனக்கு அவன்தான் பெரிசு என்றால் நாங்கள் வருகிறோம்" என்று சென்றவர்கள்தான்.

முரளி இவை எதையும் பொருட்படுத்தாமல் வழமை போல் வந்து சென்று கொண்டிருந்தான். அவள் குடும்பத்துக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவன் போல்.

முரளி இத்தனைக்கு அவள் குடும்பத்திற்காகப் பாடுபட்டாலும் அவன் இரவு வேளைகளில் அங்கு தங்குவதே இல்லை. பூப்பு நீராட்டு விழாவின் போது மட்டும் தான் நின்றிருந்தான். அப்படி இருக்க, அவள் அவனை உண்மையாக வைத்து இருக்கிறாளா என்பது எல்லாருக்கும் சந்தேகமாகவே இருந்தது. என்றாலும் 'அப்படி ஒன்று இல்லாமல் இவன் ஏன் இத்தனை பாடுபட வேண்டும்' என்று கருதினர். ஆனால் இந்திரா உண்மையில் மனம் திறந்து சொன்னால் தான் அது தெரியும்.

ஆமாம் 'அப்படி இருந்தால்தான் என்ன? எனக்கு என்ன வயதா போய்விட்டது? இளமை இல்லையா? அவன் செய்த உதவிகளுக்கு நான் என்ன உபகாரம் செய்யப் போகிறேன்?' என்று இப்போதுதான் எண்ணத் தொடங்கினான்.

பூப்பு நீராட்டுவிழா முடிந்ததும் பாடசாலைக்குச் செல்ல முன்னர் தனக்கு பைசிக்கள் வாங்கித்தர வேண்டும் என்று அடம்பிடித்தாள் சுதந்திரா. "அக்காவுக்கு வாங்கிக் கொடுத்தால் எனக்கும் வாங்கித் தர வேண்டும்" என்றாள் விசித்திராவும். முரளி வரட்டும் என்றாள் இந்திரா. முரளி அன்று வந்ததும் இதைக் கூறினான்.

"இந்திரா இதைப்பற்றி நான் ஏற்கனவே எண்ணினேன். இப்படி இருவரும் கேட்பார்கள் என்றே பேசாமல் இருந்தேன். சரி முன்னர் சுதந்திராவுக்கு வாங்கிக் கொடுப்போம்" அடுத்த மாதம் விசித்திராவுக்கு வாங்கிக் கொடுக்கலாம்." என்று தீர்த்து வைத்தான்.

இப்படி எதுவும் அவனது ஆலோனையின் பேரிலே எல்லா அலுவல்களும் நடந்தன.

கால ஓட்டத்தில் இரு குமர்களுக்கு தாயாகப் பாரம் தாங்கிக் கொண்டிருந்தாள். சுதந்திரா ஓ.எல் எடுத்த பின்னர் வீட்டில் நின்றிருந்தாள். இருந்தும் 'ரியுசன்' அது இது என்று பைசிக்களை அடிக்கடி எடுத்துக் கொண்டு சென்று விடுவாள். சுதந்திரா யாரோ ஒருவனுடன் திரிவதாக தனது தோழிகள் கூறியதை அறிந்து வந்து தாயிடம் கூறினாள் விசித்திரா.

பதறிப் போன தாய் முரளி வேலை முடிந்து வீட்டுக்குப் போகும் வழியில் வந்த போது கூறினாள். சுதந்திரா வரும்வரை முரளி காத்து இருந்தான். வந்ததும் தாய் நிறுத்தினாள்.

"சுதந்திரா இது உனக்கே நல்லா இருக்கிறதா?" என்று கேட்டாள் முரளி.

"அங்கிள் கேட்கிறார் பதில் சொல்லண்டி" இதுதாய்.

"சுதந்திரா இது நல்லதில்லை. ஒழுக்கமாக இருக்க வேண்டும். அம்மா உங்களை வளர்த்து ஆளாக்கப்பட்ட கஷ்டத்தை எண்ணிப் பார்த்து நடக்க வேண்டும். உங்களுக்கு இன்னும் வயது இருக்கிறது. காலாகாலத்தில் அதைச் செய்து கொள்ளலாம். இனிமேல் அவனைச் சந்திக்கச் செல்லாமல் இருப்பது நல்லது." என்று புத்திமதி கூறினான்.

"நீங்கள் யார் எனக்கு இதைச் சொல்ல? நீங்கள் அம்மாவுக்கு என்ன முறை? அம்மா இந்த வயதிலும் உங்களை வைத்து இருக்கும் போது நான் எனக்கென ஒருவரைத் தேடிக்கொண்டால் என்ன? எனக்கு வயது வந்துவிட்டது. இனி யாரும் புத்தி சொல்லத் தேவையில்லை." என்று கூறிவிட்டுச் சென்றாள் சுதந்திரா.

செய்வதறியாது திகைத்துப் போய் இருந்தான் முரளி.


"இத்தனை உதவிகள் செய்த முரளிக்கு என்ன உபகாரம் செய்வது என்று தெரியாமல் இருந்த போது ஊரார் நான் வைத்து இருப்பதாகப் பேசிய பின்னர் எனது இளமையை இழந்தேனே! இறைவா அதற்கு நீ என் மகள் மூலம் தரும் தண்டனையா இது? கடவுளே என்ன செய்வேன் நான்?' என்று எண்ணிய போது இந்திராவுக்குத் தலைசுற்றி வந்தது.

மயங்கி விழுந்தாள். சுதந்திரா அதையும் பொருட்படுத்தவில்லை. முரளிதான் ஓடிச் சென்று பிடித்து கிடத்தி விட்டு தண்ணீர் எடுத்து முகத்தில் தெளித்தான்.

(யாவும் கற்பனை)

# நியாயங்கள் மாறுமோ?

-கதைவாணன்-



"சிவா"

அப்பா அழைக்கும் சத்தம் கேட்டதும், படித்துக்கொண்டிருந்த சிவகுமார் எரிச்சலுடன் எழுந்தான்.

இப்பொழுது அவர் அழைப்பது மூன்றாவது முறை. முதன் முறை அழைத்து அருகிலுள்ள இரும்புச் சாமான்கள் விற்கும் கடைக்குச் சென்று கம்பி ஆணிகள் வாங்கிவரச் சொன்னார். திரும்பி வந்து இரண்டு கணக்குச் செய்து முடிப்பதற்குள் மறுபடியும் அழைத்து, சமைப்பதற்கு அரிசி வாங்கிவரச் சொன்னார். இது மூன்றாவது முறை.

"சீ.... சற்று நேரம் நிம்மதியாகப் படிக்க முடியாது." என்று முணுமுணுத்தவாறு அப்பாவிடம் சென்றான்.

"சிவா.....இந்தப் பார்சல்களையெல்லாம் கட்டிக்கொண்டு போக வேணும். பஸ் ஸ்டாண்ட் வரை இவற்றைத் தூக்கிக்கொண்டு வா.... கொழும்புக்குப் போகப் போகிறேன்..." என்றவர் இரண்டு பார்சல்களைத் தூக்கிக்கொண்டு நடக்கத் தொடங்கினார்.

இரண்டு பார்சல்களைச் சுமந்து கொண்டுபோய் பஸ் ஸ்டாண்டில் அப்பாவிடம் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தபொழுது மணி ஏழு முப்பத்தைந்தைத் தாண்டி விட்டது.

"ஓ...லேட்டாயிடுச்சு...." என்று அவசர அவசரமாக சீருடைகளை அணிந்து, கொப்பி புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு, "சிவா... சாப்பிட்டு விட்டுப் போவன்...." என்ற தாயின் குரலுக்குப் பதில் கொடுத்துவிட்டு, பாடசாலைக்குச் சென்றால்-மணி எட்டு!

பாடம் தொடங்கிப் பதினைந்து நிமிடங்களின் பின் வந்து நிற்கும் சிவகுமாரைக் கண்டதும் கணித ஆசிரியர் வைகுண்டநாதனுக்குக் கோபம் தலைக்கேறியது.

"நீ எப்பொழுதுமே லேட் கேஸ்தான்... நீங்கள்லாம் ஏன் ஸ்கூலுக்கு வாரீங்க..... எங்காவது தையல் கடையிலேயோ அல்லது ஹோட்டலிலேயோ வேலைக்குச் சேர வேண்டியதுதானே." என்று திட்டித் தீர்த்தவர் தன்னுடைய பாட நேரம் முழுவதும் வெளியே நிற்கச் சொல்லிவிட்டார்.

சிவாவுக்குக் கோபமெல்லாம் அப்பாவின மேல்தான். படிக்கச் சொன்னால் வேற வேலைகள் செய்யக்கூடாது. இல்லாவிட்டால் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு நில்லென்று விட வேண்டும். படிக்கவும் வேண்டும். வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டுமென்று, இதென்னது கூழுக்கும் அசை மீசைக்கும் அசை?

ஒருவாறு அந்தப் பாடம் முடிந்தது. மற்றப் பாடங்களிலெல்லாம் சிவகுமாருக்கு கவனமே செல்லவில்லை. இன்று வீட்டுக்குச் சென்றதும் இரண்டிலொரு முடிவெடுக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

"என்ன சிவா...ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்...? கணித சேர் வெளியால விட்டதற்கா...?" என்று கேட்டான் அருகிலிருந்த பிரதீப்.

நண்பன் கேட்டதுதான் தாமதம் தன் நெஞ்சில் குமுறிக்கொண்டிருந்த அனைத்தையும் கொட்டத் தொடங்கினான் சிவகுமார்.

"பிரதீப்...எங்கட வீட்டு நிலமையைப் பத்தி உனக்குத் தெரியும்தானே. படிப்பதற்காக உட்கார்ந்தால் காணும். அந்த வேலை இந்த வேலையென்று ஒவ்வொரு வேலையாக வந்து நிக்கும். நான் படிக்கவேணுமெண்டு விரும்பினால் இப்படியெல்லாம் வேலைகளைத் தந்து என்னைக் குழப்புவாரா? போன வருஷம்கூட ஓ.எல்.லில பெயில் பண்ணிட்டதைப் பத்திக் குறை கூறுகிறார்கள். இப்படித்தான் போனமுறையும் படிக்க விடாமல் வேலைகளைத் தந்தார்கள். இந்த முறையும் அப்படித்தான் இருக்கிறது. எனக்கெண்டால் இந்தப் படிப்பில் ஆர்வமே விட்டிடும் போல இருக்கு...சே....." என்று விரக்தியுடன் கூறினான்.

அதனைக் கேட்டதும் பிரதீப்புக்குப் பரிதாபமாக இருந்தது.

"சிவா... வீணாக மனசப் போட்டு அலட்டிக்காத. வீட்டில வேல சொல்றாங்க என்றதுக்காக படிப்ப விட்டிடாத. வீட்ல சொல்லி ஸ்கூலுக்கு ஏலாயவே வராப்பா. பாடங்களில ஏதாவது விளங்காவிட்டால் என்னிடம் கேள். சொல்லித் தர்ரேன்...." என்று ஆறுதல் கூறினான். அவனால் வேறு என்ன செய்யமுடியும்?

★ ★ ★

கொழும்பு பஸ் அன்று வரவேயில்லை. பஸ் ஸ்டாண்டில் ஏகப்பட்ட கூட்டம். அன்று தொழிலாளர் பகிஷ்கரிப்பாகையால் பஸ்ஸே வராது என்று கூறினார்கள்.

அடிக்கொருதரம் மணி பார்த்துக் கொண்டு யாராவது தெரிந்தவர்கள் வரமாட்டார்களா?" என்ற நப்பாசையில் வீதியையே பார்த்துக் கொண்டிருந்தார் சிவசங்கரன்- சிவாவின் அப்பா.

"சீ....நாள் பூரா கஷ்டப்பட்டு ஏதாவது சம்பாதிக்கலாம் என்று நினைத்தாலும் ஏதாவது பிரச்சனை ஒன்று வந்துவிடுகின்றதே. இன்று இதை கொழும்புக்குக் கொண்டு போய் விற்றுவரவில்லாட்டால் இரண்டு நாளைக்குப் பட்டினிதான்.'

தனது விதியை நொந்து கொண்டார் சிவசங்கரன்.

இனி இருந்து பிரயோசனமில்லை. ஆனால் நான்கு பார்சல்களையும் அவரால் தூக்கிச் செல்ல முடியாதே.

"சிவா வந்தாலாவது கொண்டு போகலாம்..... ம்... அப்பாவை விட்டு விட்டு வந்தோமே பஸ் வந்துதா? போயிருப்பாரா? என்று ஒருமுறை வந்து பார்த்தானா? இன்று வெள்ளிக்கிழமை. கல்லூரி பதினொரு மணிக்கே விட்டிருக்குமே." என்று முணு முணுத்தவாறு யாராவது வருகின்றார்களா என்று பார்வையை மேயவிட்டார்.

"என்ன அங்கிள்....இங்க நிற்கிறீங்க..." என்றவாறு சிவாவின் நண்பன் பிரதீப் வந்தான்.

"அடடே பிரதீபா...நல்ல நேரத்திலே வந்திருக்கே. ஒரு சின்ன உதவி..." என்று இவர் கூறுவதற்குள் அவனே தெரிந்துகொண்டான்.

"இரண்டு பார்சல்களைக் கொண்டு வரவேண்டும் அப்படித்தானே." என்று கேட்டுச் சிரித்தவன் இரண்டு பார்சல்களைத் தூக்கியவாறு நடக்கத் தொடங்கினான்.

"தம்பி..."

பாரம் தூக்கும் களைப்புடன் அழைக்கின்றார் சிவாவின் தந்தை.

"என்ன அங்கிள்....?"

"தம்பி பிரதீப். நீ நல்லாயிருப்பே தம்பி....எங்கட சின்னத் தொழிலுக்குள்ள ஆட்டோ பிடிக்கவோ அதிகமாச் செலவு செய்யவோ கூடாதெண்டு நான் எவ்வளவு கஷ்டப்படுறன் பார்த்தாய் தானே தம்பி. அவனும் இருக்கானே.... அவன்தான் சிவா...அப்பா இப்படிக் கஷ்டப்படுறாரே ஏதாவது உதவி செய்வோமெண்டு நினைச்சிருப்பானா? ஏதாவது சொன்னா படிப்பு படிப்பெண்டு இருக்கான். இந்த வயசான காலத்தில எனக்கு கொஞ்சம் அனுசரிச்சுப் போகக்கூடாதா தம்பி....?"

மனவருத்தத்துடன் கேட்கின்றார் சிவசங்கரன்.

'இவர் கேட்பதிலும் நியாயம் இருக்கின்றதே!' 'சிவா கூறியதன் பக்கம் நியாயமா? இவர் கூறுவது நியாயமா?' என்று குழம்புகின்றான் பிரதீப்.

'ஓ நியாயங்கள் பக்கத்துக்குப் பக்கம் மாறுமோ?'

(நிஜம்+நிழல்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஓய்வுக்குப் போன இடத்தில் டயானா உல்லாசம்! காதலர்கள் பட்டியலில் புதிய பெயர்!!

இளவரசி டயானா



இளவரசியின் பாலித்தீவுப் பயணம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டது.

தனது முக்கியமான நண்பர்களுடன் டயானா அங்கு சென்றார்.

அங்குள்ள அமனுசா என்ற பிரபலமான ஹோட்டலில் பிரத்தியேகமான ஒரு பிரிவிலே தங்கினார். கூடுமானவரை அந்த ஹோட்டலில் தங்கியிருந்த ஏனைய வாடிக்கையாளர்களின் கண்ணில் தென்படாமல் ஒதுங்கியே இருந்து கொண்டார்.

அந்த ஹோட்டலில் 4 நாட்கள் தங்கியிருந்தார்.

இறுதி நாளன்று டயானா ஒரு இளைஞனுடன் இரவு உணவை உட்கொண்டார். டயானாவின் ஏனைய சினேகிதர்கள், மெய்காப்பாளர்கள் எவருமே அங்கு காணப்படவில்லை.

டயானாவையும் அந்த மனிதரையும் தனித்திருக்க விட்டு விட்டு அனைவரும் விலகிக்கொண்டனர்.

அவர் ஒரு ஆங்கிலேயர் என்பதை சுலபமாக அறிந்து கொள்ள முடிந்தது. அளவில் பெரிதான ஒரு ரி-சேட்டும் அரைக்கால் சட்டையுடனும் அவர் காணப்பட்டார். டயானா இந்த மனிதருடன் சிரித்துப் பேசினார். மனமகிழ்வுடன் காணப்பட்டார்.

அந்த உணவுச் சாலை அவர்கள் இருவருக்கும் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது.

வெள்ளைச் சீருடை அணிந்த ஏவலாளர்கள் சிலர் மட்டுமே பவ்வியமாகப் பரிமாறிக் கொண்டிருந்தனர். வகை வகையான உணவுகள் இருந்த போதும் தாய் (தாய்லாந்து) உணவு வகைகளையே இருவரும் பெரிதும் விரும்பி உண்டனர்.

பல மணி நேரமாக இருவரும் அந்தரங்கமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள். நேரம்போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பிரபலஸ்தர் அந்த ஹோட்டலுக்கு வந்துள்ளார் என்பதைத் தவிர இளவரசி டயனா தான் வந்திருக்கிறார் என்பது அந்த ஹோட்டல் ஊழியர் எவருக்குமே தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

டயானா அடுத்த நாள் அங்குள்ள நீச்சல் தடாகத்தில் குளித்துக் கொண்டிருந்தார். அப்போது மற்றுமோர் வாடிக்கையாளர் தன்னை சந்தேகக்கண்ணுடன் பார்ப்பதை அறிந்து கொண்டார்.

உடனடியாக தன்னுடைய உடைகளை எடுத்துக் கொண்டு ஓடி, தனது அறையில் போய் ஒழிந்து கொண்டார். உடனடியாக அந்த ஹோட்டலை விட்டு வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. பாலியிலிருந்து 200 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மோயோ என்ற சிறு தீவிலுள்ள அமன்வானா என்ற ஹோட்டலுக்கு தனி விமானத்தில் இளவரசியும் குழுவினரும் பறந்து சென்றனர்.

அமன்வானா, உண்மையில் ஒரு வனத்தின் நடுவில்-இயற்கை அழகு மிகு சூழலில் அமைக்கப்பட்டுள்ள விடுதி. அமைதியையும் தனிமையையும் விரும்புபவர்களுக்காகப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட- சகல வசதிகளும் கொண்ட விடுதி. நீர்வீழ்ச்சி, இயற்கைத் தடாகங்கள் ஆகிய வசதிகள் விடுதியின் அருகிலேயே உள்ளன. சும்பாவா என்ற சிறு நகரிலிருந்து அமன்வானா ஹோட்டலிருக்கும் மோயோ தீவுக்கு வாரத்தில் இரு நாட்கள் மட்டுமே விமான சேவையுண்டு.

இருப்பினும் டயனாவின் அவசரத் தேவைக்காக உடனடி சிறிய ஜெட் விமானம் ஒன்று அங்கு பறந்து சென்றது. இளவரசியின் நண்பர்களும் குழுவினரும் இந்த விமானத்தில் பறந்து சென்றனர்.

டயானாவுடன் வாலிபர் ஒருவர் காணப்பட்ட விசயத்தை பத்திரிகைகள் மோப்பம் பிடித்து விட்டன.

பாலித்தீவு-அமனுசா ஹோட்டலில் டயானாவுடன் உணவு அருந்திய வாலிபர் யார் என்பதனைக் கண்டறிய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இறுதியில் அவர் வில்லியம் வான் ஸ்ட்ரௌபென்ஸி என்று கண்டுபிடித்தார்கள்.

டயானாவுடன் நெருக்கமான தொடர்புடையவர்கள் என்று டேவிட் வோட்டர் ஹௌஸ் என்ற பாதுகாவலர், பிலிப் டுன்னே என்ற பிரபல வங்கியாளர், ஜேம்ஸ் இல்பே மோட்டார் வியாபாரி மற்றும் மேஜர் ஜேம்ஸ் ஹெவிற் ஆகியோரின் பெயர்கள் பேசப்பட்டன.

இப்பொழுது இந்தப்பட்டியலில் வில்லியமும் சேர்ந்துள்ளார்.

டயானாவும் சாள்சும் தம்பதியாக வாழாமல் பிரிந்திருக்கின்றனர். இதே கால கட்டத்தில் டயானா மற்றுமொரு ஆடவனுடன் நெருங்கி உறவாடுகிறார் என்று நிருபிக்கப் பட்டால், அவருடைய பொறுப்பிலுள்ள குமாரர்களான இளவரசர்கள் வில்லியம், ஹரி ஆகியோருடைய பராமரிப்பு டயனாவிடமிருந்து பறிக்கப்பட்டுவிடும். இதனை அவரால் தாங்க முடியாது என்பது என்னவோ உண்மைதான்.



வில்லியம் வான் ஸ்ட்ரௌபென்ஸி

இளவரசர் சாரர்ள்ஸ்-டயானா தம்பதி பிரிந்த கதை உலகப் பிரபலமானது.


சார்ள்ஸ் ஏற்கனவே கமீலா என்ற பெண்ணுடன் தொடர்பில் இருப்பதும், அடிக்கடி அவர்கள் சந்தித்து அணைப்பில் இருப்பதும் கூட இப்போது பகிரங்கமான விசயங்கள்.

இளவரசி டயானா பற்றியும் பல்வேறு வதந்திகள் பரவி வருகின்றன.

சமீபத்தில் ஒரு செய்தி பரவி இலண்டன் மக்களை அதிர வைத்திருக்கிறது.

பாலித்தீவுக்கு ஓய்வு பெறச் சென்ற பேரழகி இளவரசி டயானா ஒரு வாலிபரோடு நெருங்கி உறவாடினார் என்பதுதான் அந்தச் செய்தி.

இந்தோனேசியாவிலுள்ள குட்டித் தீவுதான் பாலித்தீவு. அது உல்லாசப் பிரயாணிகளின் சொர்க்கம்.




பாலித்தீவின் பகட்டான பங்களா - இங்குதான் தங்கினார் டயானா

## இலக்கிய நயம்

# புரிந்து கொண்டான்; பிரிந்து சென்றான்!

கலைஞர் மு.க.வின் சங்கத் தமிழ் என்னும் படைப்பில் இருந்து இலக்கிய நயத்தைக் சிறக்கவைக்கும் சிறுதுளி. இது சிறுதுளியே எனினும் உவகையால் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும்.




இரு வீணை, தலைகீழாய் இருத்தல் போன்று
இடைக்குக் கீழ் இன்ப போதை ஊட்டுகின்ற உருவத்தாள்!
இணையாகக் குலுங்குகின்ற இளநீரைக் கெட்டியாக
இறுக்கிப் போடும் கச்சையணிந்த கன்னிப் பருவத்தாள்!
கன்றுக் குட்டியொன்றைத் தாம்பில் பிணைத்து
என்றும் போல் இசைபாடிக் குதித்து மகிழ்ந்து,
குன்றுக்கு அருகேயுள்ள தோட்டத்தை நெருங்கிடவே;
குறுக்கிட்டான் எதிரே; குறுஞ்சிரிப்புக் காளையொருவன்!
ஆம்பற்கொடி போன்று அவள் கையில் பிடித்திருந்த
தாம்புக் கயிறுதனை ஒரு கையால் பற்றிக்கொண்டு
"சாம்பல் நிறக் கன்றுக்குட்டி நலந்தானா? அதனை உயிராக
ஓம்புகின்ற என்னுயிரே; நீயும் நலந்தானா?" எனக் கேட்டான்.
துள்ளிப் பாய்ந்திட்டாள் அத்துடியிடையாள்- "நீ
அள்ளிப்பருக நான் என்ன அருவி நீரா?
வழியில் போகும் என்னிடம் எதற்காக வீண் வம்பு? என்
விழியின் அனல்கண்டு விலகிப் போ; இல்லையேல் என் மொழியும் கனலாகும்."
என எச்சரித்த இளமங்கைக்கு நேர் நின்று,
"ஏந்திழையே! எதற்காக நான் விலகிப் போக வேண்டும்?
பிடிக்க வருவோரைப் பின்காலால் உதைத்து; வாலால் அடித்துப்
பிடிபடாமல் ஒடுகின்ற பெண் எருமைக் கன்றைப்போல்; எனை
இடித்துத் தள்ளிவிட்டு இங்கிருந்து நீ ஒடிவிடு! உரையாட
இஷ்டந்தான் உனக்கும்! ஊர்வாயை மூடமுடியாதே என அஞ்சுகின்றாய்!
முதலில் உன் வாயை என் உதடுகளால் மூடட்டுமா? ஓகோ!
பதிலில்லை எனில் ஒப்புதலுக்கு அடையாளமோ?" என்றான்.
"என்ன துணிவிருந்தால்; எனை வழிமடக்கி
இன்னல் விளைத்திடுவாய்? என் தாய்க்குச்
சேதி தெரிந்தால் இந்நேரம் ஓடிவந்து
வீதியிலே கன்றை வளைப்போர் மீது சினம்பொங்க
வேகமாய்ப் பாய்ந்து முட்டும் பசுவைப்போல்
விரட்டியடிப்பாள் உனை!" என்றாள்; அவன் சிரித்தான்!
"உன் தாயே வரட்டும்; அல்லால் இந்த ஊரே வரட்டும்!
ஊராளும் உன் தந்தை கூட உருவிய வாளுடன் வரட்டும்!
யாருக்கும் நான் அஞ்சத் தேவையில்லை; இந்தச் சின்ன எழில்
தேருக்கு நான்தான் சாரதியென நீ சொல்லிவிட்டால்!" என்றான்.
அவளோ; உடல் குலுக்கி, முகம் சுளித்து, அவனை நோக்கி
ஆர்ப்பாட்டம் பலபுரிந்து எதிர்ப்பு காட்டி
"அய்யா; நீ பெருமழை பொழியும்போதும் அறியாமல்
அசையாமல் நிற்கின்ற காளைமாடென ஆகிவிட்டாய்!
ஏட்டிக்குப் போட்டியாக ஏதேதோ சொல்லி
காட்டிவிட்டாய் உன் காதல் எண்ணத்தை!"
எனக்கடு மொழியுரைப்பவள் போல் நடித்தவாறு
"எள்ளளவும் வெட்கமின்றிப் போனவனே!" என இழித்துரைத்து
பட்டென்று பதிலாய்ப் படபடவெனப் பொழிந்தாள் எனினும்
பட்டுப்போல் மென்சொற்களாலே ஒன்று கேட்டாள்;
"நாளை நான் கறவைக் கலமுடனே பசுமேயும் இடத்துக்குச் செல்லுகிறேன்
காளை நீ அப்போதும் அங்கேயும் வருவாயோ?" என்பதுதான் அக்கேள்வி!
புரிந்து கொண்டான் அவள் உள்ளம்; பின்னர்
பிரிந்து சென்றார் புன்னகை புரிந்தவாறே!

**-கலைஞர் மு. கருணாநிதி-**

★ "பாங்கு அரும் பாட்டங்கால் கன்றொடு செல்வேம் எம்
தாம்பின் ஒரு தலை பற்றினை, ஈங்கு எம்மை
முன்னை நின்றாங்கே விலக்கிய எல்லா! நீ
என்னையே முற்றாய்? விடு;
விடேஎன்; தொடீஇய செல்வார்த் துமித்து, எதிர் மண்டும்
கடுவய நாகு போல் நோக்கித், தொடுவாயில்
நீங்கிச், சினவுவாய் மற்று.
நீ நீங்கு; கன்று சேர்ந்தார்கண் கதஈற்றாச் சென்றாங்கு,
வன்கண்ணள் ஆய்வரல் ஓம்பு
யாய் வருக ஒன்றோ; பிறர்வருக; மற்றுநின்
கோ வரினும் இங்கே வருக; தளரேன் யான்,
நீ அருளி நல்கப் பெறின்.
நின்னையான் சொல்லினவும் பேணாய்; நினை இக்
கனைபெயல் ஏற்றின் தலைசாய்த்து, எனையதூஉம்
மாறு எதிர்கூறி, மயக்கப் படுகுவாய்!
கலத்தொடு யாஞ் செல்வுழி நாடிப், புலத்தும்
வருவையால்-நாணிலி! நீ"

★ (கலித்தொகை: பாடல் 116 (முல்லைக் கலி)
பாடியவர்: சோழன் நல்லுருத்திரன்)

# பேனா நண்பர் அரங்கம்



பெயர்: வி.பி. சிவா
முகவரி: ஆலோசகர் காரியாலயம்
இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்
சென்கூம்ஸ், தலவாக்கலை.
பொழுதுபோக்கு: பாடல்கள் கேட்டல், கிரிக்கெட் விளையாடுதல்.



பெயர்: எஸ். விஜி
வயது: 20
முகவரி: கே-5, நவகம்புர,
ஸ்ரேஸ் வீதி, கொழும்பு-14.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, கதைப்புத்தகம்.



பெயர்: ஏ.எல். சஹாப்டீன்
வயது: 24
முகவரி: 133, மீதொட்டமுல்ல ரோட்,
வெல்லம்பிட்டிய.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், பாட்டுப் பாடுதல்.



பெயர்: எம்.ரி.எம். தஸ்லீம்
வயது: 23
முகவரி: 55, ஜும்மா மஸ்ஜித் வீதி,
வியாங்கல்லை, அகலவத்தை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப் புத்தகம்.

பெயர்: எம். ஜெயரட்ணம்
முகவரி: இல.1, மெயின் வீதி,
கந்தப்பளை போஸ்ட்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: முஹம்மது பர்ஜான்
வயது: 19
முகவரி: 68, ஸ்ரேசன் வீதி,
வெலிகம.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: அலோசியஸ் அன்ரனிதாஸ்
வயது: 17
முகவரி: 135/1, சிலாபம் வீதி,
கரட்டுவை, நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: கால்பந்து விளையாடுதல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: எம்.ஜே.எம். றிஸான்
வயது: 20
முகவரி: 61, ஸாஹிரா வீதி,
மாவனல்லை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம், வானொலி.

பெயர்: எஸ். நிஹாரா
வயது: 24
முகவரி: 23/17, மயூரா பிளேஸ்,
கொழும்பு-6.
பொழுதுபோக்கு: புத்தகம், பத்திரிகை படித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: ஜே. ஷிரோமி
வயது: 15
முகவரி: 544, விடி மாவத்தை,
கந்தானை.
பொழுதுபோக்கு: பூவேலைகள் செய்வது, வானொலி கேட்டல், பத்திரிகை படித்தல்.

# எண்ணம் உறுதிப்பட்டால் இறைவன் கைகொடுப்பான்




ஹிமவான், மேனை இவர்கள் பெற்ற மகள் பார்வதி. நாரதர் ஒரு சமயம் சிவபிரானைப் பற்றிக் கூற, அதைக் கேட்ட பார்வதி சங்கரிடம் காதல் கொண்டாள். தன் காதலை நிறைவேற்றிக் கொள்ள வேண்டித் தவம் செய்ய எண்ணினாள். அதற்குத் தந்தை சம்மதித்தாலும், தாய் சம்மதிக்க வில்லை. மகளின் துயரத்தைக் கண்டு பிறகு சம்மதித்தாள்.

பார்வதி மலைச் சிகரத்தை அடைந்து தவம் செய்தாள். வருடங்கள் கடந்தன. பலன் தான் எதுவுமில்லை. பார்வதியின் பெற்றோரும் சகோதரர் களும் அவளிடம் வந்து, "ஒருவேளை சங்கருக்கு உன்னை மணக்க இஷ்ட மில்லை போல் இருக்கிறது. நீ அரண்மனைக்குத் திரும்பி விடு" என்றனர்.

"இன்னும் எத்தனை ஆண்டுகளா னாலும் முயற்சி திருவினையாகும் வரை விடமாட்டேன்," என்று பார்வதி உறுதியாகக் கூறிவிட்டாள். வேறு வழியின்றி அவர்கள் திரும்பிப் போய் விட்டனர்.

மேலும் சில காலம் கழிந்த பிறகு, சப்தரிஷி களைஅழைத்து, "தவம் செய்யும் பார்வதியைப் பரீட்சித்து வாருங்கள்." என்று சங்கரர் அனுப்பி வைத்தார்.

அவர்கள், "சிவன் சுடுகாட்டில் வசிப்பவன். தங்கத் தட்டில் சாப்பிடும் நீ அவனிடம் போனால் மண்டையோட்டில் தான் சாப்பிட வேண்டும்," என்றும் இன்னும் அது போல் நிறையக் கூறி, பார்வதியைப் பயமுறுத்தினார்கள். பார்வதி கலங்கவில்லை. "நான் மனதால் வரித்த பரமனே என் மணாளன்", என்று தன் உறுதியிலிருந்து சரியவில்லை.

அடுத்து, தானே ஒரு கிழவனாக உருமாறி, பார்வதியிடம் வந்தார் சங்கரர். அவரும் தன் பங்கிற்கு நிறையப் பய முறுத்தினார். "அந்தச் சிவனை மணந்தால் உன் கதி அதோகதிதான்," என்று காரண காரியங்களோடு விளக்கினார்.

பார்வதி அந்தக் கிழவனிடம் சீறினாள். "அந்த ஹரன் ஒருவரே என் மனோ ஹரன்," என்று உறுதியாக மொழிந்தாள்.

ஈஸ்வரர் மகிழ்ந்து, தன் சுய உருவோடு தரிசனம் கொடுத்தார். சந்தோஷத்தில் திக்குமுக்காடிய பார்வதியிடம், "என்னுடன் கைலாசத்திற்கு வா", என்றார்.

தன் நெடுநாள் முயற்சி பலித்த அந்தத் தருணத்திலும், பார்வதி கொஞ்சம் நிதானித்தாள். "ஸ்வாமி, என் பெற்றோரைக் கேட்டு என்னை மணக்கலாகாதா", என்றாள். "அப்படியே" என்ற ஈஸ்வரர், மீண்டும் முனிவர்களை ஹிமவானிடம் பெண் கேட்டு அனுப்பினார். திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டது.

## ஆன்மீகம்

அதற்குப் பிறகும் ஒரு இடைஞ்சல். தேவர்களின் சூழ்ச்சியால் மேனை மனம் மாறினாள். "திருமணத்தை நிறுத்த வேண்டும்", என்றாள். "என் மகளைக் கல்லைக் கட்டிக் கடலில் போட்டாலும் போடுவேனே தவிர, அந்தச் சிவனுக்குக் கொடுக்க மாட்டேன்" என்றாள். "மரணத்தை மணந்தாலும் மணப்பேனே அல்லாமல் மற்ற எவரையும் மணக்க விட மாட்டேன்," என்று அந்த மலையரசன் மகள் மலைபோல் உறுதியாக நின்றாள்.

இறுதியாக மேனை தான் மனம் மாறினாள்.

எல்லா இடையூறுகளையும் வென்று, பார்வதி-பரமேஸ்வரர், திருமணம் மிகக் கோலாகலமாக நிறைவேறியது.

காதல் வயப்பட்ட பெண், இடையில் எத்தனை இடையூறுகள் வந்தாலும் தன் உறுதியில் மாறாமல் இருக்க வேண்டும் என்பதையும், அதே சமயம் யாருக்கும் தெரியாமல் காதலனோடு புறப்பட்டுப் போய் திருமணம் செய்து கொண்டு விடாமல், முடிந்தவரை முயற்சித்து, பெற்றோரின் சம்மதத்தோடு மணக்க வேண்டும் என்பதையும், ஜகன்மாதாவாகிய தேவியே பூமியில் பார்வதியாகப் பிறந்து, காதலித்து, அதில் உறுதி காட்டி மங்கையருக்கு வழிகாட்டுகிறாள்.

# தருமத்தின் உயர்வு

அல்லாஹ் கூறுகிறான். (நீங்கள் வழங்கும்) தருமங்களை அல்லாஹ் வளரச் செய்கிறான். (2:276) இதற்கு உ+ம் இதோ 'தங்களது செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர்களுக்கு (இதோ) ஓர் உ+ம், (அது) வித்தை போன்றுள்ளது. அது பூமியில் முளைத்து ஏழு கதிர்களாகி ஒவ்வொரு கதிரிலும் 100 மணிகள் (தானியங்கள்) உள்ளதைப் போலாகும். (ஒன்றுக்கு 700 நன்மைகள் மேலும் அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கு இதை விட இரட்டிப்பாக்குகிறான்.)

நபி (ஸல்) அவர்கள் தர்மத்தை பற்றி கூறியது:

1. தர்மகர்த்தா இறைவனுக்கும் சுவனத்திற்கும் நெருங்கினவராவார். ஆனால் கஞ்சன் இறைவனுக்கும், மக்களுக்கும் சுவனத்திற்கும் தூரமாகி நரகத்திற்கு சமீபமாகின்றான்.
2. மரணத்திற்குப் பின் செய்யும் நூறு தர்மத்தை விட வாழ்நாளில் செய்யும் ஒரு தருமம் சிறந்தது.
3. பூரண முஸ்லிமிடம் தீயகுணம், கஞ்சத்தனம் இணைந்திருக்காது.
4. தன் நேரிய உழைப்பால் பேரீத்தம்பழம் அளவு தருமம் செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதை தன் வலக்கரத்தால் பெற்று குதிரைக்குட்டியை வளர்ப்பது போன்று ஒரு மலையளவிற்கு வளரச் செய்கிறான்.
5. நிச்சயமாக தருமம் இறைவனுடைய கோபத்தை அமர்த்தி விடும். மேலும் தீய மரணத்தையும் தடுக்கும்.
6. அன்னை (ஆயிசா (ரழி) கூறுகிறார்கள்; ஒரு முறை ஆடு ஒன்று எங்கள் வீட்டில் அறுத்து (ஏழைகளுக்கு) வழங்கப்பட்டது. அப்போது நபி (ஸல்) அவர்கள் ஏதும் மீதி உள்ளதா? எனக் கேட்க, "முன்னங்கை (ஒரு சப்பை) மட்டும் நமக்குள்ளது" என்றேன். உடனே நபி (ஸல்) அவர்கள் "இல்லை! இல்லை!! பங்கிடப்பட்ட இறைச்சியெல்லாம் நமக்குத் தான். இந்த முன்னங்கை (சப்பை) தவிர" என்றார்கள். (அதாவது ஏழைகளுக்கு வழங்கியது மறுமையில் நமக்குக் கிடைக்கும். நம் சொந்தத்திற்கு உபயோகப்படுத்தியது நமக்கு வராது.)

நன்றி-இஸ்லாம் என்பது என்ன?
தொகுப்பு: ருக்ஷான் அமீன்
உடுதெனிய.

# பொருளாசையை விட்டொழியுங்கள்

பொருளாசையே எல்லாத் தீமைகளுக்கும் வேராக இருக்கிறது. ஆனால், மனிதனோ தானும் தன்னைச் சார்ந்த சந்ததியினரும் வளமோடு வாழ வேண்டும் என எண்ணி பணம் ஒன்றிலே குறியாக இருக்கிறான். இப்படிப்பட்டவர்களைக் குறித்து கிறிஸ்தவம் வெகுவாய் எச்சரிக்கை செய்கிறது.

"பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஏனெனில் எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும், அது அவனுக்கு ஜீவன் அல்ல"

(லூக்கா 12:15)

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்.

உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

(மத்தேயு 6:19-21)

இவைதானே உண்மை.

இயேசு பொருளாசையைக் குறித்து ஒரு அழகான உவமையைத் தனது உபதேசத்தில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

"ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன், நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைப்பதற்கு இடமில்லையே? நான் ஒன்று செய்வேன். என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாக்கி கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருட்களையும் அங்கே சேர்த்து வைத்து பின்பு; 'ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து பூரிப்பாயிரு' என்று ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான்.

தேவனோ அவனை நோக்கி, "மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது, நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்?" என்றார்.

ஆக பொருளாசையை விட்டொழித்தால் தான் மனிதன் வாழ்வு செம்மை அடைவதோடு பரலோக ராஜ்ஜியத்தில் இடம் பிடிக்க முடியும்.

ஐசுவரியவான் 'தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்.

(மாற்கு 10:25)

## ஸ்போர்ட்ஸ்

# உலகம் வியக்கும் சாதனைகள் வியப்பால் உருவாகும் சந்தேகங்கள்!

சீனாவின் தடகளப் போட்டி வீரர்கள் பல உலக சாதனைகளை முறியடித்து வருகிறார்கள். உலகே வியக்கும் வண்ணம் அவர்கள் சாதனைகள் படைக்கின்றனர்.

அந்தச் சாதனைகளின் பின்னணியில்- போதைப் பொருட்கள் பயன்படுத்தலும் இருக்குமோ என்று பலர் கருதுகின்றனர்.

அமெரிக்க பெண் வீராங்கனைகளும் அமெரிக்க வீரர்களுமே பகிரங்கமாக தங்கள் சந்தேகங்களை வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் சீனத் தலைநகரான பெய்ஜிங்கில் நடைபெற்ற தேசிய தடகளப் போட்டிகளில் உலக சாதனைகள் பல முறியடிக்கப்பட்டுள்ளன.

10,000 மீட்டர் ஓட்டப் போட்டியில் வாங் ஜுங்சியா என்ற 20 வயதுப் பெண் ஏற்கனவே நிலை நிறுத்தப்பட்ட உலக சாதனையை முறியடித்துள்ளார். 41.96 நொடிகளால் உலக சாதனை முறியடிக்கப்பட்டது. 3000 மீட்டர் பரீட்சார்த்த ஓட்டங்களிலும் வாங் மற்றுமொரு சாதனையினை முறியடித்தார். இத்தூரத்தினை 8: 22.62 நேரத்தில் ஓடி முடித்தமை உலக சாதனையாகவிருந்தது. வாங் இந்தத் தூரத்தை 6.08 நொடியில் ஓடி சாதனை நிலை நாட்டினார்.

கியூ யுனிக்சியா என்ற 21 வயது வீராங்கனை 13 வருடங்களாக முறியடிக்கப்படாதிருந்த மற்றுமொரு சாதனையை முறியடித்துள்ளார். 1,500 மீட்டர் ஓட்டப் பந்தயத்தை 3:50.46 என்ற கணக்கில் ஓடி முடித்திருக்கிறார்.

சீன வீரர்களின் இத்தகைய சாதனைகளை யிட்டு ஐயம் கொள்ளுவோருக்கு விடையளிக்கு முகமாக சீன தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்குப் பயிற்சியாளரான மா தகுந்த விடை அளித்துள்ளார். பல்லாண்டு கால ஆராய்ச்சிகளின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் சீன விளையாட்டு வீரர்கள் பயிற்றப்பட்டு வருவது வெற்றிக்குப் பிரதான காரணம் என்கிறார். போதை வஸ்து என்பதனை எந்த நிலையிலும் தானோ அல்லது விளையாட்டு வீரர்களோ அறிந்திருக்கவில்லை என்கிறார்.

வீரர்களுக்கு வழங்கப்படும் உணவு முறைகளையிட்டும் மா பல விவரங்களையும் தந்திருக்கிறார். ஆறுகளில் காணப்படும் ஒரு வகை ஆமையின் இறைச்சி மற்றும் எலும்புகளை உபயோகித்துத் தயாரிக்கப்படும் சூப்; வண்ணாத்திப்புழுக் காளானிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு வகை தின்பண்டம் ஆகியவை விளையாட்டு வீரர்களுக்குத் தரப்படுவதாக அவர் கூறுகிறார். அத்துடன் நாய் இறைச்சியும் உணவுடன் தரப்படுகிறதாம். இவையெல்லாம் சாதாரண கிராமப்புறங்களில் நடைமுறையிலிருந்து பெறப்படும் உணவு முறைகள் என்று கூறப்படுகிறது.

மான்கள் மற்றும் தீக்கோழிகளின் ஓட்ட முறைகளைக் கண்காணித்து, அவை வேகமாக ஓடுவதற்கு எத்தகைய எத்தனங்களைப் புரிகின்றன என்பதனை அறிந்து பயிற்சியில் இவை புகுத்தப்படுகிறதாம்.




விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் பல முறைகள் கையாளப்படுவதாகவும் மா கூறுகிறார். இவர்கள் மிகவும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்தே பொறுக்கியெடுக்கப்படுகின்றனராம். அவர்களால் தான் கடுமையான நிலைகளுக்கு ஈடுகொடுக்க முடியும் என்றும் சொல்லியிருக்கிறார்.

கியூ என்ற வீராங்கனையின் பெற்றார், அவள் கடந்த வருடம் ஓட்டப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக அணிய வேண்டிய பாதணிகளை வாங்குவதற்காக, அவர்களிடமிருந்த ஒரேயொரு பன்றியை விற்க வேண்டிய நிலையிலிருந்தனராம்.

2000ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டியினை பெய்ஜிங்கில் வைப்பதற்காக சீனா பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் சர்வதேச ஒலிம்பிக் குழு இப்போட்டிகளை அவுஸ்திரேலியாவின் துறைமுக நகரமான சிட்னியில் வைப்பதற்கான தீர்வினை எடுத்துள்ளது. இதனால் சீனா பெரும் ஏமாற்றமடைந்திருப்பதாக அறியக்கிடக்கிறது. சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாகவே பல உறுப்பினர்கள் சீனாவுக்குச் சாதகமாக வாக்களிக்கவில்லை என்று தெரிகிறது.

## குட்டிக்கதை

# பனையோலை உயிர்கள்

அ. றஜீசன்

பனைமரம் கீறச் சொன்னா பனைமரத்தைக் கீறுவதா அல்லது எங்கட தாத்தா முருகுவை கீறுவதா என சின்னவயதில் குழம்பியிருக்கிறேன். ஏனென்றால் எங்கட தாத்தாவும் அவர் வளர்க்கிற அந்த பனைமரமும் அப்பா- பிள்ளைகள் போல-ம்.....ஹூம் அப்படியும் சொல்ல முடியாது. உயிரும் உடலும் போல. எந்த நேரம் பார்த்தாலும் அந்த மரத்திற்குக் கீழ். எங்கட பெரிய கல்வீடு அவருக்குப் பிடிக்காது. அந்த பனைமரத்திற்கு அருகில் அதன் ஓலைகளால் வேயப்பட்ட சின்னக்குடில் தான் எப்பவும் அவர் வசிப்பிடம். சனி ஞாயிறுகளில் கள்ளுப் போத்தலும், கையுமாக பனைமரத்துக்கு கீழ் இருந்து குடிப்பார். கேட்டால் "போடா, சின்ன பெடியன். நான் பாலல்லவா குடிக்கிறன்." 'பனை மரத்துக்குக் கீழ் இருந்து பாலக்குடிச்சாலும் கள்ளென சொல்லும் சனம்.' என்று பழமொழியெல்லாம் இழுப்பார். ஆனால் அப்பழமொழியிலும் பனை இருக்கும்.

இப்ப எனக்கு முப்பத்தி ஐந்து வயது. என் பிள்ளைகள் இரண்டிற்கும் இப்பொழுதும் அவரின் பனைமரத்தைப் பற்றி புளுகுவார். அவருக்கு அதில பற்றுவரக் காரணம் என்னவென்றால், அவரே பனங்கொட்டை போட்டு உருவாக்கினது. அடிக்கடி சொல்லுவார். "யாழ்ப்பாணத்தவன் எதை வளர்க்காட்டியும் பனை வளர்க்க வேண்டும். ஏனென்றால் அவனின் கலாசாரச் சின்னம் அது." என்பார். எனக்கு ஒன்றுமே புரியாது, கிழவன் கவலைப்படும் என்பதற்காக தலையாட்டுவன்.

இப்படி நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக தாத்தாவிற்கும் பனைமரத்திற்கும் இடையில் பாசப்பிணைப்பு இறுகி வந்தது. அன்று ஒரு நாள் பதுங்கு குழி வெட்ட பனை தேவை என்று பெடியள் அனுமதி பெற்று அதை தறிக்க வர, தாத்தா மறித்து தன்னை வெட்டி விட்டு மரத்தை வெட்டுமாறு கத்தினார். நாங்கள் "சனியன் இந்த கிழவயதிலும் பாடாப்படுத்துது போய்த் துலையுதுமில்லை." என்று பதிலிற்கு கத்திவிட்டு மரத்தை விட்டுவிட்டோம். அப்ப தாத்தா சொன்னார். "பார் ஒரு நாளைக்கு இதனால் பெரிய பயன் வரும் உனக்கு" என்று. அதற்கு நான் "பனையாலயா...ஹிஹி பனையால என்னத்த பயன்? வெறும் பனங்கொட்ட தான் சூப்பலாம்" என்று விட்டு திரும்பினோம். தாத்தா தொடர்ந்து புறு புறுத்துக் கொண்டு இருந்தார்.

நாட்டுப் பிரச்சினையும் பனைமரம் மாதிரி வளர்ந்து கொண்டே போனது. இன்று எல்லா இடமும் பயங்கர ஷெல்லடி, குண்டுவீச்சு. நாமனைவரும் பதுங்கு குழிக்குள் தஞ்சம் கோர, தாத்தா பனை மரத்திற்கு கீழ் நிற்பார். எமக்கு எரிச்சல் வந்தது. "தொண்ணூறு வயசாகியும் சாவு வருதில்லையே" என்று புலம்பினோம்.



ஷெல்லடி மோசமாக இருந்தது. இரவு சற்று அமைதி. நாங்களனைவரும் பயந்தபடி வீட்டிற்குள் போய் படுத்துக் கொண்டு, ஷெல்லடி மேலும் தொடர்ந்தா பங்கரிற்குள் ஓடுவம் என இருந்தோம். நடுநிசி 12.15 இருக்கும். திடீரென ஷெல்கள் விழத் தொடங்கின. ஐந்து, ஆறு படபடவென வெடித்தன. எழும்பி ஓடவும் முடியாமல் பயந்து கொண்டு இருக்க மூன்று அடுத்தடுத்த ஷெல்கள் விர்ரென வந்த சத்தம் கேட்டு...மூன்றும் வெடித்தன. மிக அருகில் மிக மிக அருகில் ஒன்றும் கேட்டது. சுத்திப் பார்த்தோம், வீட்டிற்குள் விழவில்லை. இண்ணைக்குத்தான் தாத்தாவும் எம் கல்வீட்டிற்குள் படுத்தார். அவரும் பயத்தால் வெல வெலத்து இருந்தார். ஷெல்லடி அதன் பின் கேட்கவில்லை.

வெளியே வந்தோம். ஓலைகள் குருத்துகள் சிதறிக் கிடக்க....மேலே அண்ணாந்து பார்த்தோம். பனை தன் தலையை இழந்து நின்றது. பனையில் பட்டு வந்த ஷெல்லை தாங்கி...அதில் வெடிக்க பனையிற்கு வட்டுடன் தலையே போய்விட்டது. பனைமட்டும் இல்லாது இருந்திருந்தால் அது நேரே எம் வீட்டிற்குள்தான் விழுந்து வெடித்து இருக்கும். தாத்தா கதறி அழுதார். பிள்ளை இறந்தால் கூட இப்படி அழுவாரோ தெரியாது.

காலை 10 மணியானது. திடீரென வீட்டுப் பெண்கள் கத்தி அழுத சத்தம் கேட்க ஓடிப் போய் பார்த்தேன். தாத்தா இறந்து கிடந்தார். எவ்வித நோயும் இல்லாமல் இயற்கை மரணம். பனை மரம் இறந்த அன்றே தாத்தாவும் இறக்க.... கண்கள் கண்ணீரை தள்ளின.

தாத்தாவின் உடலை மயானம் கொண்டு போய் எரிக்கையில் தீச்சுவாலையூடாக "பார் ஒரு நாள் இதனால் பெரிய பயன் வரும் உனக்கு" என்று பனையை காட்டி சொன்னது கேட்டது.

(யாவும் கற்பனை)

நன்றி - நூலகம்
www.padippakam.com

தரம் குறையாத தங்க-வைர நகைகள்.
எழிலூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.

அருள்
ஜுவலர்ஸ்

இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பேசி: 436331

## விலங்கின் வாயில் இறங்குதுறை

சிங்காரமான சிங்கப்பூரில் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் தீவுதான் செந்தோசா. அந்த அழகுத்தீவிலே ட்ராகன் விலங்கை நேரில் பார்ப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தும் வடிவில் இறங்குதுறையை வடிவமைத்துள்ளார்கள். ட்ராகனின் வாய்க்குள் சென்று இறங்குவது போன்ற திரில், உல்லாசப் பயணிகளுக்கு சிலிர்ப்பும் வியப்பும் தரும் திட்டம்தான்.



## தொட்டுக்கொள்ள கொஞ்சம் ஜனநாயகம்!

மன்னராட்சிகள் மங்கி மறைந்து வருகின்றன.

எனினும் மன்னராட்சிகளும் அங்கங்கே இருக்கவே செய்கின்றன.

உலகில் 46 நாடுகளில் மன்னர்களின் ஆதிக்கம் இன்னும் இருக்கிறது. இதில் சில நாடுகளில் பேரரசிகளான மன்னர்களும், மகாராணிகளும், இளவரசர்களும், இளவரசிகளும் இருக்கிறார்கள்.

மலேசியாவில்தான் ஒரு மாற்றம். அங்கு மன்னர் தெரிவு செய்யப்படுகிறார்.

மாகாண ரீதியில் உள்ள சுல்தான்கள் மன்னரைத் தெரிவு செய்கின்றனர்.

மன்னராட்சி என்றாலும் தொட்டுக் கொள்ள கொஞ்சம் ஜனநாயகம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதனால் உலக சாதனைப் புத்தகமான கின்னஸிலும் மலேசிய மன்னன் சுல்தான் அஸ்லான்ஷா மற்றும் அவரது குடும்பப் படம் இடம் பெற்றுள்ளது.

1989 செப்டெம்பரில் அவர் மகுடம் சூட்டிக்கொண்டார்.



## இசையால் அசைந்த இதயம்!

இசையால் பூமி அசைந்ததோ இல்லையோ அந்தப் பூவையின் இதயம் அசைந்து விட்டது.

சாதாரண அழகியல்ல, பேரழகி. ஹொலிவூட் திரையுலகின் கனவு ராணி.

அண்மையில் இங்கும் வசூல் குவித்த "பிரிட்டி வுமன்" படத்தின் நாயகி.

அவர்தான் ஜூலியா ரொபேட்ஸ். வயது 25. அந்தப் பூவையின் இதயத்தை அசைத்த பாடகர் லொவ்வெற்.

இருவரும் நான்கு வாரங்களுக்கு முன்புதான் விருந்தொன்றில் சந்தித்துக் கொண்டனர். விருந்துண்ண மறந்து ஒருவரை ஒருவர் விழிகளால் விழுங்கிக் கொண்டனர். விரும்பிக் கொண்டனர்.

மணம்புரிந்து கொள்ளவும் முடிவும் செய்தனர்.

வெளியிலிருந்து பூக்கள் வந்து குவிந்தன. உறவினர்கள் வந்து மொய்த்தனர். ஜூலியா ரொபேட்சுக்குத் தைக்கப்பட்ட திருமண ஆடை சற்றுச் சிறிதாக இருந்தது. எனினும் அதையே அணிந்து கொண்டார்.

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இரசிகர்கள் நேரில் வந்து ஒரே நாளில் வாழ்த்தியதுதான் அபூர்வக் காட்சி.



## காய்கறி புலவு



மாமிசம் எதுவும் சேர்க்காமல் காய்கறிகளைச் சேர்த்தே இந்தப் புலவு உணவைத் தயாரிக்கலாம். இதுவும் பிரியாணி தயாரிப்பு போன்றதே. நெய் சேர்த்தால் சுவை அதிகமாக இருக்கும். கொழுப்பினைத் தவிர்க்க விரும்புபவர்கள் சூரிய காந்தி எண்ணெயைப் பயன்படுத்தலாம். பிரியாணி அரிசியைப் பயன்படுத்துவது நல்லது.

தேவையானவை:

| | |
|---|---|
| அரிசி- | 2 கோப்பை |
| நெய் அல்லது எண்ணெய்- | 3 மேசைக்கரண்டி |
| காரட்- | 50 கிராம் |
| உருளைக்கிழங்கு- | 1 |
| பீன்ஸ்- | 50 கிராம் |
| அன்னாசிப்பழம்- | 6 வட்டத்துண்டுகள் |
| பெ.வெங்காயம்- | 2 |
| கறுவா- | 2 அங்குலம் |
| ஏலக்காய்- | 3 |
| கராம்பு- | 3 |
| பூண்டு- | 1 |
| இஞ்சி- | 1 அங்குலத் துண்டு |
| கரம் மசாலா- | 1 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை- | தேவைக்கேற்ப |
| உப்பு- | தேவைக்கேற்ப |

செய்முறை:

அரிசியை நன்றாகக் கழுவிய பின் முழுமையாக வெளிறியதும் அரைப் பதத்தில் வடித்து தனியாக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். உருளைக்கிழங்கை தனியாக வேகவைத்து தோலை நீக்கி சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். பின்னர் காரட், பீன்ஸ் ஆகியவற்றையும் கழுவி வெட்டி அரைப் பதத்தில் வேக வைத்து உருளைக்கிழங்குத் துண்டுகளுடன் சேருங்கள். அத்துடன் அன்னாசிப்பழத்தையும் நான்கு துண்டுகளாக வெட்டிச் சேருங்கள்.

ஒரு பாத்திரத்தை சிறிதாக சூடு வரும் அடுப்பிலேற்றி எண்ணெயை அல்லது நெய்யை விட்டு சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட வெங்காயத்தைப் போடவும். நசுக்கிய இஞ்சியையும் பூண்டையும் இடுங்கள். தாளாக்கிய கறுவா, ஏலக்காய், கராம்பு ஆகியவற்றையும் கறிவேப்பிலையையும் போடவும். அத்துடன் கரம் மசாலாவையும் சேர்த்து வேகவைத்த காய்கறிகளையும் போடவும். அளவாக உப்பையும் சேருங்கள். நன்றாக மணம் வரும் போது அதனுள் முன்பே வேக வைத்து எடுத்து வைத்திருந்த சோற்றை இட்டு ஒரு தடவை நன்றாகக் கிளறிய பின் 15 நிமிடங்கள் வரை அடுப்பிலேயே மூடி வைத்திருந்து பின்னர் இறக்கிப் பரிமாறலாம்.

இதற்கு சோயா இறைச்சியும் சேர்க்கலாம். 100 கிராம் சோயாத் துண்டுகளை சிறிதளவு உப்புக்கலந்த அளவான வெந்நீரில் 5 நிமிடங்கள் வரை ஊற வைத்து, பிழிந்து மேலும் 5 நிமிடங்கள் எண்ணெயில் வதக்கி இடையில் கலவையுடன் சேர்த்துக் கொள்ளலாம். 6 பேருக்குப் பரிமாற அளவான உணவு இது.

## உலகைக் காட்டும் உலக சாதனைப்படம்

பூமியிலிருந்து வான் வெளிக்கு அனுப்பப்பட்ட விண்வெளிக் கோள்கள் அங்கிருந்து உலகைப் படம் பிடித்து அனுப்பி வைக்கின்றன.

அவ்வாறு அனுப்பப்பட்ட பல்லாயிரம் படங்களைக் கொண்டு முழு உலகின் தோற்றத்தை உருவமைத்து உருவாக்கப்பட்ட படம் இது.

உலகின் அதிக பரப்பளவு கொண்ட தென் சீனக் கடலை இங்கு காணக்கூடியதாயிருக்கிறது. இதன் பரப்பளவு 2,974,600 சதுர கிலோ மீட்டராகும் (1,148,500 சதுர மைல்).

13,000க்கும் அதிகமான தீவுகளைக் கொண்ட இந்தோனேசியா நிலப்பரப்பும் படத்தின் உள் இருக்கிறது. பிறைச் சந்திர வடிவில் அந்தத் தீவுக் கூட்டங்கள் அமைந்துள்ளன. இதன் நீளம் 5,600 கிலோ மீட்டர் (3,500 மைல்).

இப்படம்தான் இது வரை எடுக்கப்பட்ட படங்களில் முழு உலகையும் காட்டும் சாதனைப் படமாக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.





இப்பத்திரிகை கொழும்பு ... 98/14ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் ... ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.